# மங்கை

பெண்களின்
புத்தகம்

4

18 MAY 1946
MADRAS

பதிப்பாசிரியர்:
"குகப்ரியை"

சக்தி காரியாலயம்

[illegible] சென்னை

O-3
1946

உரிமை பதிவு செய்யப் பெற்றது

ஏப்பிரல் : 1946

TAMIL NADU ARCHIVES
104397

ரூபாய் - ஒன்று
தபால் செலவுடன் ரூ. 1/4
தொடர்ந்து வெளிவரும் 12 பிரதிகளுக்கு தபால் செலவுடன் ரூ. 12

Printed by Shakti Press Ltd., Royapettah, P. I. C. No. MS. 23
For Shakti Karyalayam, Royapettah, P. I. C. No. MS. 202

# பொருள் அடக்கம்

*


| | | |
|---|---|---|
| குழந்தைகள் | பார்வதி | ... 1 |
| மாண்டிசோரி அம்மையார் | வைத்தீஸ்வரன் | ... 6 |
| காணுமற்போன காதோலை | சரஸ்வதி அம்மாள் | ... 18 |
| உடலோம்புதல் | அரவிந்தம் | ... 33 |
| ஆயிரத்தில் ஒருவர் | கல்பனு | ... 38 |
| ஜப்பானிய மங்கையர் | ஸ்ரீ வை. குஞ்சு | ... 49 |
| அறுசுவை | தீபிகா | ... 53 |
| குடும்ப வாழ்க்கை | நந்தினி | ... 57 |
| களங்கினி | எம். எஸ். கமலா | ... 63 |
| ஊசியும் நூலும் | பூமிஜா | ... 77 |
| நாங்கள் | குகப்பிரியை | ... 81 |
| இரு குழல்கள் | வேங்கட லட்சுமி | ... 85 |
| தலை அலங்காரம் | தங்கம் | ...101 |

விரைவில் வெளிவருகிறது

'மங்கை' யின் பதிப்பாசிரியர்

'குகப்ரியை' எழுதிய

சிறு கதைகளின் தொகுதி

சஞ்சீவி

உயர்ந்த காகிதத்தில்

அழகிய பைண்டு

ரூ. 3/4

(தபால் செலவு தனி)

பவானி பிரசுரம்

ராயவரம் : புதுக்கோட்டை

ஸ்டேட்



மாண்டிசோரி அம்மையாரும்,
அவரது மருமகன் மாரியோவும்

# குழந்தைகள்

"பார்வதி"

அடுத்தகத்துச் சீதாவுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. அவள் திட சரீரமுள்ளவள்தான். ஆனால் குழந்தை ராமுவோ மிகச் சிறியவனாகவும், பலமற்றவனாக வும்தான் இருக்கிறான். பிறந்து 30 நாட்கள் ஆகியும் கொஞ்சங்கூடத் தேறவே இல்லை. அவள் என்ன செய் வாள், பாவம்! அவளிடம் பால் நிறையத்தான் இருக்கிறது. சிசுவின் உடம்பில் ஒட்டாது, அது சதா அழுதுகொண்டே இருந்தால் அவள் கதிதான் என்ன! அவள், பாவம் யார் சொல்வதைக் கேட்பாள்? அவள் பாட்டி நல்ல அனு பவசாலிதான். ஆனால் பழைய காலத்து மனுஷி. குழந்தை அழும்போதெல்லாம் 'எடுத்துவிட வேணும்' என்பாள். அவ்வார்த்தையைக் கேட்டு நினைத்த பொழு தெல்லாம் பால் கொடுத்ததனால் குழந்தை பச்சை, பச்சை யாக நாளைக்கு 5 அல்லது 6 தடவை வெளிக்குப் போய்க் கொண்டே இருந்தது. அப்படியில்லாவிட்டால் ஒருவித அஜீர்ண வாந்தி, கக்கல் இப்படி ஏதாவது உபத்திரவப் படுத்தும். அயர்ந்து 4, 5 மணி நேரம் தூங்கவும் தூங் காது. இரவும் பகலும் சீதாவுக்கு குழந்தையை வளர்க் கும் விஷயத்தில் பொறுப்பும் சந்தேகங்களும் அதிகரித்துக் கொண்டே வந்தன.

இவள் படும் கஷ்டங்களைப் பார்த்து இவள் சிநேகிதி கமலா இவளுக்கு ஏதாவது உபகாரம் செய்யலாமென்று வந்தாள். கமலாவின் கைக்குழந்தைக்கும் ஒரு மாதம் தான் ஆயிருந்தது. அவள் கெட்டிக்காரி, படித்தவள். தன் குழந்தையை வெகு நாசூக்காக மேலை நாட்டினர்

வளர்ப்பதுபோல் சொகுசாக வளர்க்க வேண்டுமென்று குழந்தை பிறக்கு முன்னமேயே திட்டங்கள் போட்டு வைத்தவள். தான் தாயாராகு முன்பே குழந்தைக்கு வேண்டிய துணிமணிகள் தயார் செய்து கொண்டாள். டஜன் கணக்கில் வெள்ளைத் துணிகள் ஓரம் தைத்து, வரிசையாகத் தைத்து அடுக்கி வைத்திருந்தாள். நாப்கின் துண்டுகள், சொக்காய்கள் விதவிதமாக எல்லாம் பெட்டி கொள்ளாது. அவ்வளவு சவரணை. அதற்கேற்றாற்போல் அவள் குழந்தையும் பீமசேனன் அம்சம் தான். பிறக்கும்பொழுதே 8½ பவுண்டு இருந்தது. பிறகும் வாரா வாரம் புத்தகத்தில் போட்ட பிரகாரம் ½ பவுண்டு வீதம் ஏறிக்கொண்டே வந்தது. அது அவள் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அவன் ஒரு கஷ்டமும் கொடுப்பதில்லை. நாளைக்கு 20 மணி நேரம் தூங்குவான். தினம் ஒரு முறை ஸ்நானம் செய்வான். வேளா வேளைக்குப் பாலை 'மொக் மொக்' கென்று குடித்து விட்டு அவன் இருக்கும் அழகே தனிதான். அவளும் 4 மணிக்கு ஒருதரம்தான் அவனுக்குப் பால் கொடுப்பாள். அவன் காரியமெல்லாமே மணிப் பிரகாரம் அவள் கவனித்து நடத்துவாள். குழந்தை ஆரோக்கியமாயிருப்பது தன் பராமரிப்பில்தான் என்று கமலா பெருமிதம் கொண்டால் அதில் என்ன தப்பிதம்?

கர்ப்பகால முதலே கமலா தினசரி நடவடிக்கைகளிலும் ஆகாரம், தூக்கம் முதலியவைகளிலும் பெரியோர் விதித்ததும் ஆரோக்கியத்தை அனுசரிப்பதுமான முறைகளைப் பின்பற்றியேதான் நடந்தாள். பிறந்த பிறகும் அப்படித்தான்.

சீதாவின் குழந்தை அழுவதைக் கேட்டு கமலாவுக்கே மிகவும் வருத்தமாக இருந்தது. சீதாவைப் பார்த்து ஒரு சிறு பிரசங்கம் செய்துவிட்டுப் போகலாமென்று வந்தாள். தான் பல வைத்திய நிபுணர்கள் எழுதிய

புத்தகங்களை யெல்லாம் படித்துக் கற்றறிந்த குழந்தை வளர்ப்பு விஷயங்களை அவளிடம் சரமாரியாகப் பொழிந்தாள். "என்னவானலும் 4 மணி நேரத்துக்கு முந்திப் பால் கொடுக்காதே. அழுதாலும் அழட்டும். இரண்டு நாட்கள் அழுதால் பிறகு தானே நின்றுவிடும். குழந்தைக்கு, அதுவும் சில நாட்களே ஆன சிசுவுக்கு வயிற்றையும், ஆகாரத்தையும்தான் நன்கு கவனிக்க வேண்டும். அதன் வயிறு மிகச் சிறியது. அதற்குப் பால் அளவுப் பிரகாரமும், நேரம் தவருமலும்தான் கொடுக்க வேண்டும். ஆகாரத்தை நன்கு ஜீரணம் செய்துகொள்ளச் சரியான அவகாசம் கொடுக்காமல் அழும்பொழு தெல்லாம் பால் கொடுத்தால், வயிறு தன் சக்திக்குமேல் வேலை செய்ய வேண்டி வருகிறது. அது முடியாமல் அஜீரணம், வயிறு உப்பிசம், அதிக வெளிப்போக்கு போன்றன ஏற்படுகின்றன. சரியாக 4 மணிக்கு ஒருமுறை பால் கொடுத்தால், குழந்தையின் வயிறு சரியாகவும், ஒழுங்காகவும் வேலை செய்யத் தொடங்கும். இரண்டுநாள் பழகிவிட்டால் பிறகு குழந்தையே கடிகாரம் மாதிரி அந்தந்த மணிக்குத்தான் அழும். பால் கொடுத்தாலும் கண்டபொழுது குடிக்காது. இரவு 8 மணி நேரம் ஆகாரம் ஒன்றுமே கொடுக்கக் கூடாது. வயிற்றுக்கு முழு ஓய்வு கொடுக்க வேண்டும்' என்பதுபோன்ற விதிகளைச் சீதாவுக்குச் சொன்னள். சீதாவுக்கும் அதேபோலச் செய்ய ஆசைதான். ஆனல் பாட்டியின் வார்த்தைக்குத் தாட்சணியம், தட்டிச் செய்யப் பயம். இவைகளை உதறிவிட்டுத் திடங்கொண்டு செய்ய மன உறுதி கிடையாது. ஏன்? கமலாவின் சொற்களை ஊர்ஜிதப்படுத்த நல்லதொரு சிசு சம்ரட்சணைப் புத்தகம் இருந்தாலல்லவோ? இந்தக் குறைபாட்டை நினைத்துச் சீதா வருந்தினள்.

சீதா, கமலா சொற்படி குழந்தைக்கு 4 மணிநேரம் ஒன்றும் கொடுக்காமல் இருந்தாள். ஆனல் 3 மணிக்கு

மேல் அவனுக்கு ஒரு நிமிஷம் கூடப் பசி தாங்கவில்லை. அலறி விறைத்தான். சீதா பல்லைக் கடித்துக்கொண்டு சும்மா இருந்தாள். குழந்தை ஆயாச மிகுதியால் கண் அயர்ந்து விட்டது. பிறகு தூக்கத்தில் ஒரே 'கேவல்'. சீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பால் கொடுப்போமென்றுலோ, அவனுக்குத் தொண்டைவரை ஒரேயடியாக உலர்ந்துவிட்டது. வாயைச் சேர்த்துச் சப்பிப் பால் சாப்பிட முடியாமல் தவித்தது. உடனே கமலாவைக் கலந்து கேட்க ஓடிவந்தாள் சீதா. இருவரும் யோசித்ததில், சீதாவின் குழந்தை பூஞ்சை, பலஹீனம், அதன் வயிறு மிகச் சிறியது. 4 மணிநேரம் தாங்கும்படியான அளவு அவனால் உட்கொள்ள முடியவில்லை. ஆகையால் அவள் குழந்தைக்கு 3 மணி நேரத்துக்கெல்லாம் ஆகாரம் கொடுக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அவன் வயதுக்கேற்ற அளவு உட்கொள்ளும் சக்தி வந்தபிறகு அவனும் 4 மணி நேரம் இருப்பான் என்று புரிந்தது.

* * * * *

மேலை நாட்டில் பல பெரிய வைத்தியர்கள், குழந்தை வளர்ப்புக்கென்றே தனியாகத் தங்கள் வாழ்நாட்களைச் சமர்ப்பித்து, பல விதமாகப் பரிசீலனைகள் செய்து, தங்கள் அனுபவத்தினால் கிடைத்த விதிகளைப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு வைத்தியர் ஒரு பண்ணையில் வேலை பார்த்து வந்தார். பசுவும் கன்றும் ஏராளமாக இருந்த பால் பண்ணை. அங்கே ஒரு சமயம் கன்றுக்குட்டிகள் அதிகமாகப் பேதியாவதால் சேதமாகி வந்தன. இதைக் கண்டு மனம் தாங்காமல் இதைத் தடுக்க உதவும்படியான பல பரிசீலனைகளை அவர் செய்ய ஆரம்பித்தார். பால் அதிகம் குடித்து விடுவதால்தான் கன்றுகள் சேதமாகின்றன. ஆகையால் இனிமேல் பாலை அளந்து அளவு மீறாமல் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்து, கன்றுகளுக்குப் பாலைத் தாயிடம் நேரே ஊட்ட விடாமல், கறந்து புட்டியில்

போட்டு அளவுப் பிரகாரம் கொடுத்தார். அவ் வருடம் கன்றின் சேதம் மிகக் குறைவு பட்டதாம். கன்றுக ளுக்கே இவ்வளவு மனம் உருகியவர் சிசு சம்ரட்சணை யில் எவ்வளவு சிரத்தை கொள்ளமாட்டார்? அறிஞர்கள் வெளியிட்டுள்ள புத்தகங்களின் உதவியால் மேலை நாடுகளி லென்ன, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து போன்ற கிழக்குச் சீமைகளி லென்ன, இங்கெல்லாம் தாய்மார்கள் எவ்வளவு பேர் குழந்தை வளர்ப்பில் கை தேர்ந்து அனேக குழந்தை களை ஆரோக்கியமாக வளர்த்ததோடு, பல குழந்தைகளைக் காப்பாற்றியும் இருக்கிறார்கள்.

நம் நாட்டிலோ சிசு மரணம் மிகப் பயங்கரமாக இருக் கிறது. தாய்மார்களின் சிறு சிறு தவறுகளும், அசிரத் தையும் எவ்வளவு பெரிய நோய்களைக் கொண்டு வருகிறது என்பதை அவர்கள் அறிவார்களே யானால், அக் குற்றங் களை அவர்கள் செய்வார்களா? நம் குழந்தையின் வளர்ப்பில் எழும் சிறு சிக்கல்களுக் கெல்லாம் வைத்திய ரின் உதவியை எதிர்பார்ப்பது மிகக் கஷ்டமே. தன் குழந்தையின் கஷ்டங்களையும், உபத்திரவங்களையும் இரவு பகலாகக் கவனித்து நன்கு அறிந்து கொள்பவள் தாய் தான். தாயிடம் குழந்தையை இடைவிடாது கூர்ந்து கவ னிக்கும் சக்தி, அந்தந்தக் குழந்தையின் தேக ஸ்திதிக் கேற்ற முறைகள், அனுபவத்தின்பேரில் ஏற்படும் திட் டங்கள், நல்ல விஞ்ஞான மனப்பான்மை இவை வேண் டும். குழந்தையின் தினசரி வாழ்க்கைக்குத் தகுந்தவாறு, அவ்வப்பொழுது தாயார் செய்ய வேண்டிய சில சிகிச்சை களையும் நாம் தெரிந்து கொண்டு, அதைப் பின் பற்றி நடக்க முயலுதல் வேண்டும்.

✲

# மாண்டிசோரி அம்மையார்

*சி. என். வைத்தீஸ்வரன்*

வருங்காலச் சுதந்தர இந்தியாவில் தீண்டாமை வேரோடு ஒழியும் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் அந்தணன் மனையிலும், ஹரிஜனன் மனையிலும், தனவந்தன் மாளிகையிலும், தரித்திரன் குடிசையிலும், நம் நாட்டிலும், அயல் நாட்டிலும் இன்று ஒரு தீண்டாதவன் வாழ்ந்து வருகிறான். இந்தத் தீண்டாதவனுக்குக் கவாடம் திறப்பாரில்லை. திக்கு விஜயம் செய்வார் இல்லை. இந்த நிலைமையுடைய தீண்டாத ஒரு புதுமைப் பேர்வழி யார்? அவன் தான் சிறு குழந்தை. ஒவ்வொரு மனையிலும் பாலூட்டிச் சீராட்டி, தாலாட்டி, கட்டி அணைத்து முத்தமிடும் பச்சைக் குழந்தைதான் இந்தத் தீண்டாதவன். பண்ணை காக்கும் வரையும் பயிர் ஆக்கும் வரையும்தான் பறையன் தயவு தேவை. பிறகு அவன் எட்ட நிற்க வேண்டும். அங்ஙனமேதான் சிறு பாப்பாவும். மெய்தீண்டி இன்புறவும், குழல் அனைய குரல் கேட்டு இன்புறவும்தான் குழந்தைகள் நம்மிடம் வேண்டும். நம் பேனாவை எடுத்துவிடட்டும், அல்லது புத்தகங்களைக் கலைக்கட்டும், அல்லது நம் மிதியடியை வைத்து விளையாடட்டும். உடனே பிறந்துவிடும் அடக்குமுறைச் சட்டங்கள். "கிட்ட வரப்படாது, தொடப்படாது, பேசப்படாது." இதோடு பூசைகளும்தான். அலை கடலைக்கண்டு, ஐயோ கரை மணலைக் கலைக்கிறதே! என் மேல் மோதுகிறதே! என்று வருந்தி அஞ்சுபவன் பேடி. ஆனால் அறிவாளி ஆழ்கடலில் மூழ்கி அணிமுத்தும் செம்பவளமும் தேடி எடுத்துப் பலருக்கு வழங்கித் தானும் நன்மை பெறுகிறான். குழந்தையின் உள்ளமும் ஓர் ஆழ்

கடல். இதில் மூழ்கினவர் பலபல அருமையான முத்துக் களையும் பவளங்களையும் பெறுவார்கள் என்று பல உள நூல் வல்லுநர்கள் சொல்லியிருக்கின்றனர். அவர்களில் முதன்மை பெற்றவர் மாண்டிசோரியம்மை. இவ்வம்மை யின் பெயர் அறியாதார் சிலரே. இவ் வம்மையைப் பெறும்பேறு இத்தாலி நாட்டுக்கு வாய்த்தது. பெற் றோர்க்கு ஒரே ஒரு கண்ணான புதல்வி. தந்தை, சிறுமியைப் பற்றிப் பற்பல கனவுகள் கண்டார். மாணவர் பாடசாலை யில் இச்சிறுமி ஒருத்திதான் தனியாக வாசிக்கவேண்டி யிருந்தது. அக்காலத்தில் பெண்கல்வி முன்னேற்றம் அவ் வளவுதான். மாணவர்க்கிடையே எத்துணை கிண்டல் களுக்கும், எக்களிப்புகளுக்கும் இவர் ஆளாகியிருப் பார் என்று சொல்லவேண்டுமா? இந்த விஷயத்தில் எல்லா நாடுகளும் ஒரே தன்மைதான். வகுப்பில் நம் நாட்டில் இன்றிருப்பதுபோல் தண்டனை முறைகளும் அக்காலத்தில் இத்தாலியில் சகஜம். பாடம் படிக்காதவர் களுக்கு மூலையில் நிற்கும் தண்டனை யுண்டு. ஒருநாள் மாண்டிசோரி, வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே மூலையில்போய் நின்றுகொண் டிருப்பதைக் கண்ட ஆசிரி யர் "ஏன் அங்கு நிற்கிறாய்?" என்று கேட்டார். "நீங்கள் எனக்குத் தண்டனை விதிக்கும்வரை ஏன் காத்திருக்க வேண்டும் என்று மாமூலாக முதலிலே வந்து நின்று கொண்டேன்" என்றார். நல்ல அறிவு படைத்திருந்தும் இதைப் பயன்படுத்தும் போதனா முறையின்மையால் வகுப்பிலும் பாடத்திலும் வெறுப்புத் தோன்றலாயிற்று. "மேல்வகுப்பு மேல்வகுப்பு என்று சொல்வதில் ஓர் அதி சயமும் இல்லையே! அதே மாணவர்கள்தான், அதேமாதிரி அறைகளும் சுவர்களும்தான், அதே வகை மேஜை நாற் காலிகளும்தானே? ஏன் வருந்திப் படித்துப் பரீட்சையில் தேறவேண்டும்?" என்றுகூட ஒருமுறை ஆசிரியரைக் கேட்டுவிட்டார்.

எப்படியோ படித்தார்; தேறினர். மேல் படிப்புக்கும் வந்தார். தந்தை இவருக்குத் திருமணம் செய்விக்க முயன்றதை இவர் ஏற்றுக்கொள்ளாமல், கல்வியிலே சிந்தனை செய்யப் புகுந்தார். ஓர் ஆசிரியர் பதவிக்காவது வாசிக்கட்டுமே என்று மகளை மன்றுடிக்கேட்டபோது ஆசிரியர் உத்தியோகம் ஒன்றைத் தவிர வேறு எது வேண்டுமானலும் செய்வேன் என்று ஆணித்தரமான பதில் உரைத்துவிட்டு, டாக்டர் பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்தார். இதைக் கண்ட தந்தை மனம் நொந்து பல ஆண்டுகள் மகளோடு பேசக்கூட இல்லை. "டாக்டர் பரீட்சையில் உயர்பதவியில் தேர்ச்சி பெற்ற முதல் இத்தாலிய மாது என்று எல்லோரும் புகழ்வதைக் கேட்ட தந்தை, "ஈன்றபொழுதினும் பெரிது உவந்தார்" என்று சொல்லவும் வேண்டுமா?

டாக்டர் பதவியும் பெற்ருர். ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உள்ள முழு மூடர்களுக்கு (Idiot) மூளைக் கோளாறுகள் ஏற்படக் காரணம் என்ன, எந்தெந்த முறையில் அவர்களைச் சீர்திருத்த முடியும் என்ற ஆராய்ச்சியில் இறங்கினர். இது சம்பந்தமான புத்தகங்களைக் கற்கவேண்டுமென்று ஆராய்ச்சி செய்யும்போது, இவருக்கு முன் பல்லாண்டுகள் பரிசோதனை செய்த "இட்டார்டு" என்ற பிரான்ஸ் தேசத்தாருடைய புத்தகத்தைக் கண்டார். இவர் பிரான்ஸ் தேசப் புரட்சியின் போது கண்ட காட்சிகளிலிருந்து புது உண்மைகளை வெளியிட்டவர். ஊமைகளுக்குப் போதிக்கும் முறையையும், செவிடர்களுக்குச் சிகிச்சையையும் பற்றி அற்புதமான மருத்துவ நூல் எழுதி யிருக்கின்ருர். இந்த இட்டார்டு தன்னிடம் ஒரு முரட்டுப் பேதைப் பையனை எட்டு ஆண்டுகள் வைத்திருந்து எவ்வாறு அவனுடைய அறிவை வளர்த்தார் என்பது ஓர் அற்புத நூல். இதையே அடிப்படையாகக் கொண்டு இட்டார்டுடைய மாணவர் "செகுன்"

(Seguin) என்பவர் பத்தாண்டுகள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக் குழந்தைகளையும், ஊமைப் பிள்ளைகளையும் பரிசோதிக்கப் பற்பல துணைக் கருவிகளையும் ஆக்கினர். இவருடைய அனுபவங்களைப் பிரெஞ்சு மொழியில் முதல் முதல் வெளியிட்டார். மாண்டிசோரி அம்மையார் இந்தப் பிரெஞ்சு வெளியீட்டைப் படித்ததிலிருந்து குழந்தைகளின் உள ஆராய்ச்சியில் மேன்மேலும் ஊக்கம் செலுத்தினர். செகுன் பிறகு அமெரிக்கா சென்று அங்கு முழு மூடர்களுக்கென்ற முறையை இருபது ஆண்டுகள் செய்த பிறகு இதன் உண்மைகளை ஆங்கில மொழியில் பதிப்பித்தார். இப்புத்தகத்தைப் பற்றி விமர்சனங்கள் ஆங்காங்கு கண்ட மாண்டிசோரி யம்மை இப்புத்தகம் கிடைக்குமா என்று நூல் நிலயங்களிலும், பெரிய பெரிய டாக்டர்களிடமும் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. இங்கிலாந்துக்கு ஒருமுறை சென்றபோது அங்குள்ளவர்களை விசாரித்ததில் அவர்கள் அதைப்பற்றி அறியாதது கண்டு அவர் மனம் வியப்படைந்தது. நைந்தது. தம்முடைய சோதனையில் ஊக்கம் குன்றுதவராய்ப் பிரெஞ்சு வெளியீட்டைத் தாமே இத்தாலி பாஷையில் மொழிபெயர்த்து ஒவ்வொரு மொழியையும் மணி மணியாக எழுதிவைத்துக் கொண்டார். இது ஒரு சிறிய புத்தகமா? அறுநூறு பக்கம் கொண்ட மூலத்தை இவ்வாறு மொழிபெயர்த்து வைத்துக் கொள்ள என்ன ஆர்வம் இருக்கவேண்டுமென்று பாருங்கள். இவ்வாறு முடித்தவுடன் அமெரிக்காவிலுள்ள ஒரு டாக்டரின் நூல் நிலயத்தில் கேட்பாரில்லாமல் மூலையில் கிடந்த ஓர் இங்கிலீஷ் பிரதியொன்று இவர் கைக்கு வந்து சேர்ந்தது. செகுவினுடைய முப்பதாண்டு அனுபவங்கள் அடங்கிய இந்நூலையும் இவர் ஓர் இங்கிலீஷ் நண்பர் உதவி கொண்டு இத்தாலியில் மொழிபெயர்த்து வைத்துக் கொண்டார். "செகுன் கூறிய உண்மைகளை என் சொந்த அனுபவங்களால் அறிந்த பிறகு முழு மூட

களிடம் பரிசோதனை செய்வதை ஒருவாறு நிறுத்தி விட்டு இவ்விருவருடைய நூல்களை நன்கு ஆராயவேண்டுமென்றும், ஒருவிதத் தியானத்தில் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டுமென்றும், தோன்றிற்று. இதற்காகவேதான் இந்த மொழிபெயர்ப்பில் ஈடுபட்டேன். ஒவ்வொரு வார்த்தையும் சீர்தூக்கி ஆசிரியர் உள்ளத்தோடு ஒட்டிச் சிந்திக்க முயன்றேன்'' என்று அம்மையார் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். இந்த முறையில் ஓர் ஆசிரியரை நுகர்ந்த மாணவனைப் பற்றி நாம் யாருமே கேட்டறிந்ததில்லை. துணைக் கருவிகளின் உதவிகொண்டு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உள்ள முழு மூடர்களைப் பத்தாண்டுகள் பரிசோதித்து ஊக்குவித்து ஒருவகையில் தேர்ச்சிபெறச் செய்த பிறகு, சாதாரணப் பள்ளிக்கூடங்களில் தேருத மக்குக் குழந்தைகளுக்கும் இந்தத் துணைக் கருவிகளை உபயோகித்தால் மேம்பட மாட்டார்களா என்று சிந்திக்கலானர். இதுவரை டாக்டர் என்ற முறையில் சோதனைகளும் சிகிச்சைகளும் செய்துவந்தார். இப்பொழுது குழந்தை உள்ளத்தை நன்கு உணர்ந்தாலன்றி வெறும் போதனைக் கருவிகளைக் கொண்டு ஒன்றும் சாதிக்கமுடியாதென்று உணர்ந்து பல்கலைக் கழகத்தில் தத்துவ நூல் மாணவராகச் சேர்ந்து கற்ருர். டாக்டர் பதவியில் தேறி, பல ஆண்டு பயிற்சி செய்து உபாத்தியாயர் வேலைக்குப் படிப்பதா! விதி செய்யும் வேடிக்கை இது. உலகம் இவ்வம்மையாரால் முன்னேறவேண்டியிருக்கும்போது முதலில் வெறுத்த உத்தியோகத்துக்கே இவரை முன்வந்து உந்துகிறது!

பிறகு இரண்டு வருஷம் சாதாரணப் பள்ளிக்கூடங்களில் உள்ள மக்குக் குழந்தைகளுக்குப் போதிக்கும் முறையை ஆசிரியர்களுக்கு எடுத்துக் காட்டினர். குழந்தைகளுக்கு நேராகத் தாமே போதித்தும் காட்டினர். "இந்த ஈராண்டுகளில் காலை எட்டு மணியிலிருந்து மாலை ஏழு

மணிவரைக்கும் பெரும்பாலும் ஓய்வு இல்லாமலே நான் போதித்து வந்தேன்'' என்று அவர் குறிப்பிடுகிறார். மத்தியானம் அமர்ந்து சாப்பிட்டால் நேரம் ஆகிவிடும் என்று, நின்றபடி ஒரு டம்ளர் பாலைக் குடித்துவிட்டுப் போதித்தார்.

1906-ஆம் ஆண்டில் ஒரு பித்தன் ஆஸ்திரியா ராணியைத் தாக்கிக் கொன்றுவிட்டான். பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்று பறந்தது சமூகம். ''பித்தர்களை உண்டு பண்ணுவது சமூகம். ஆகையால் சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும். அவ்வாறு சீர்திருத்த வேண்டுமானால் பால் மணம் மாறாப் பருவத்திலே குழந்தைகளுக்கு நற்போதனை தேவை'' என்று மாண்டிசோரி அம்மை கர்ஜித்தார்.

இதே சமயத்தில் ஒரு முதலாளி கூலிகளுக்குப் பல விடுதிகளைக் கட்டி வாடகைக்குவிட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். கூலிகள் வெளியேறிய காலத்தில் அவர்களுடைய மக்கள் கை சும்மா இராமல் சுவர்களை எல்லாம் கிறுக்கிப் பாழாக்கிக் கொண்டிருந்தனர். இதை அடிக்கடி பழுதுபார்க்க வேண்டிய செலவை உத்தேசித்து இவர்களை ஓர் ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டால் அதனால் ஏற்படும் செலவு பழுது பார்ப்பதைவிட அதிகமாகாது என்று நினைத்த முதலாளி, மாண்டிசோரியம்மையின் உதவி நாடினான். இதைக் கேட்ட அம்மை தம்முடைய மற்ற உயர் பதவிகளை எல்லாம் விட்டுவிட்டு மூன்று நான்கு ஆண்டுக் குழந்தைகளுக்குப் போதிக்கும் முறையில் ஈடுபட்டார். ''என்ன இது! ஏழைக் கூலிக்காரர் மக்கள், விரித்த சடையர், புழுதி மேனியர், வடிந்த மூக்கர், கந்தை உடுத்தவர், வீதிகளில் திரிகின்ற காலிகள் இவர்களுக்கா ஆசிரியர் ஆகப் போகிறாய்? வேண்டவே வேண்டாம்'' என்று இவருடைய நண்பர்களெல்லோரும் குறுக்கிட்டனர். ஆனால் இவர் ஊக்கம் மடை திறந்த வெள்ளம். கட்டுக்கு மீறிற்று.

இவருடைய பள்ளிக்கூடம் சாதாரணப் பள்ளிக்கூட மல்ல. ஒரு கோவிலாயிற்று; பள்ளிவாசல் ஆயிற்று; மாதாகோவில் ஆயிற்று என்னலாம். மக்களே பூஜை விக்ரகங்கள் ஆயினர். பிரம்பாலும், கடுஞ் சொல்லாலும், விழுங்கும் பார்வையாலும் ஆதிக்கம் செய்து வரும் ஏகச் சக்கரவர்த்தியான ஆசிரியர் இங்கில்லை. சூழ்நிலையை அன்பாலும், அழகாலும் அலங்கரித்து மக்களைச் சுதந்தர சிம்மாசனத்தில் ஏற்றுவித்து அக் காட்சி கண்டு இன்புற்ருர். இளங் கைகளுக்கு எட்டும்படியான நேர்த்தியான பீரோக்கள், தாங்களே எளிதில் தூக்கும்படியான கை மேஜைகள், நாற்காலிகள், அழகான விரிப்புகள். ஆங்காங்குப் பூங்கொத்துச் சாடிகள், ஓவியங்கள். பாட போதனைக்குரிய துணைக்கருவிகள். குழந்தைகளே கற்றுக் கொண்டனர். ஆசிரியர் குரலே இல்லை. ஆசிரியர் குழந்தையைக் கட்டி அணைக்கவோ அல்லது தட்டி அடிக்கவோ தொடவில்லை. இந்த உயர்தரக் கருவிகளால் சுயேச்சை முறையில் பழகின மூவாண்டுக் குழந்தைகளுக்கு இலக்கணம் இன்சுவையாயிற்று. கணக்குகள் கற்கண்டாயிற்று. குழந்தைகள் இசைக்கருவி இசைத்தனர். இனிய கீதம் பாடினர். நாட்டியம் நாடகம் நடித்தனர். காய்கறிகள் திருத்தினர். சமைத்ததைச் சிறு கைகளால் பரிமாறினர். இத்துணையும் பால்மண மாருப் பாலர்கள் செய்வதைக் கேட்ட அறிவாளிகள் கடல் கடந்துவந்து கண்டு களித்தனர். பெற்ருேரும் குழந்தைகளால் சீர் திருந்தினர்.

இப்படிக் குழந்தைகள் தாங்களாகவே தக்க சூழ்நிலையில் ஆராய்ச்சி செய்து கண்ட உண்மைகளைத் தொகுத்துப் "பாலர்கள் காட்டிய புதுப் போதனுமுறை" என்ற தலைப்பில் அச்சிடச் சொன்னபோது பதிப்பாசிரியர் இதற்கு அந்த நீண்ட பெயரைக் கொடுக்காமல் "மாண்டிசோரி முறை" என்று கொடுத்துவிட்டார். அன்று முதல்

மாண்டிசோரி முறை பல நாடுகளில் பரவிப் பயனை பரப்பியிருக்கின்றது.

மாண்டிசோரி அம்மைக்குத் தூர உறவாக ஒரு மருமகன் உண்டு. இவர் இளம்பிராயத்தில் குக்கிராமத்தில் கொஞ்சம் முரடனாகவே இருந்து பள்ளிக்கூடத்தை எட்டிக் காயைப்போல் வெறுத்துத் திரிந்தார். இவரைப் பன்னிரண்டாம் ஆண்டிலிருந்து தன்னுடன் வளர்த்து உள்ளத்தைப் பண்படுத்தி அமெரிக்காவுக்கு மேல் படிப்புக்கு அனுப்பினார். இஞ்சினீர் பரீட்சையிலும் சட்டப் பரீட்சையிலும் தேர்ச்சிபெற்று அம்மையாரோடு இன்று துணைபுரிந்து உபன்னியாசங்களை மொழிபெயர்த்து வருகிறார். இவரை அறிந்தவர் இவரிடம் வெள்ளையருக்கிருக்கும் உயர்வு மனப்பான்மை (Superiority Complex) என்பதையே காணமுடியாது. உள்ளப் பண்பில் இந்தியன் என்றே கூறவேண்டும். முதலில் பார்ப்போருக்கு இவருடைய விகடமும் கோமாளித்தனமும் தோன்றாமற் போகாது. ஆனால் நெருங்கிப் பழகினால் இவரைப் போன்ற ஆழ்ந்த அறிவும், கனிந்த உள்ளமும், சாந்த மனமும் ஒருங்கே எக்காலமும் படைத்த மனிதனைப் பார்ப்பது அரிது. பொறுமைசாலி என்றால் மாரியோவைத் தான் கூறவேண்டும். எந்த மாணவனுக்கும், எந்தச் சந்தேகத்தையும், எந்நேரத்திலும், எத்துணை முறையும் முகத்திலும் அகத்திலும் சலிப்புக் காட்டாமல் எடுத்துக் கூறக்கூடிய இவரைப் போல ஓர் ஆசிரியனை நான் கண்டதில்லை. மருமகனுக்கு மனைவியுண்டு, மக்களுண்டு. ஆனால் அம்மையார் வாழ்க்கைக்கே தன் உடல் பொருள் ஆவி எல்லாம் அர்ப்பணம் பண்ணி வருகிறார். சொந்த மகன்கூட அம்மையாருக்கு இவ்வளவு தொண்டாற்றி வர முடியாது.

மாண்டிசோரி முறையை வருங்கால இத்தாலி மக்களுக்கு உபயோகித்துப் பாசிஸ்ட் கொள்கைக்கு மாற்ற வேண்டுமென்று அம்மையாரையும் மாரியோவையும்

வலைக்குள் இழுக்கப் பார்த்தான், முசோலினி. உலகத்துக்கே பொதுவான மீன்கள் இத்தாலியின் பாஸிஸ்ட் வலைக்குள் அகப்படுமா? துள்ளி ஸ்பெயின் நாடு சென்றது. அங்கும் ஒரு வலைஞன். பிராங்கோ வீசின வலையிலிருந்து தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்றபடி விழுந்தடித்து இங்கிலாந்துக்கும் ஹாலந்துக்கும் சென்றனர். விட்டதா வினை? வந்தனர் ஜர்மானியர். இந்தியாவுக்குத் திருமதி ருக்மணி தேவியும் அருண்டேலும் வரவேற்றதற்கு இணங்கிப் பறந்தனர். ஏதோ ஆறு மாதங்களில் திரும்பி விடலாம் என்று நினைத்தவர்கள் நம் புண்ணிய வசத்தால் இங்கேயே விரோதி நாட்டார் என்ற முறையில் தங்க வேண்டி நேர்ந்தது. அடையாற்றிலும், கொடைக்கானலிலும், இலங்கையிலும், அஹமதாபாத்திலும், காஷ்மீரத்திலும், பிலானியிலும் பல உபன்னியாசங்களும், வகுப்புகளும் நடத்திச் சுமார் 1500 மாண்டிசோரி ஆசிரியர்களை ஆக்கி யிருக்கின்றனர். இதில் தமிழர் பெரிய பங்கெடுத்துக் கொள்ளாதது வருந்தத் தக்கதே. இப்பொழுது கராச்சியில் போதித்து வருகின்றனர். இதன் பிறகு பேரன் பேத்திகளைப் பார்த்துவிட்டு நம் பரத நாட்டிலே இவர் தம் பரிசோதனைகளைத் தொடங்குவதாகத் தீர்மானித்திருக்கின்றனர். நம் பண்பாடு இவருக்கு உகந்த தென்கிறார்.

முதல் முதல் இவ் வம்மையாரை நேரில் பார்க்கும் பேறு எனக்குக் கொடைக் கானலில் கிடைத்தது. பார்த்தவுடனே எனக்கு டாக்டர் பெசண்டம்மையார் உருவம் கண்முன் வந்தது. பழுத்த கிழம். ஆனாலும் கன்னி போன்ற வனப்பு. ஆடை ஆபரணங்கள் எல்லாம் ஓர் ராஜ குல மாதுக்குடையது போல் இருந்தன. சிரித்த முகம். என்ன வசீகரமான கண்கள்! உண் கண் என்பது இவருக்கு உண்மையாகப் பொருந்தும். ஆறு நாள் தங்கப் போனவன் ஆறு மாதங்கள் அவர் தொண்டில் இறங்கி

விட்டேன். அன்று அம்மையாருக்கு ஆங்கிலம் பேச வராது. தம் தாய் மொழியாகிய இத்தாலி பாஷையில்தான் பேசுவார். மாரியோ மொழி பெயர்ப்பார். இத்தாலி பாஷை கேட்பதற்கு மிகவும் இனிய ஓசையுடையது. ஆங்கிலம் போலப் பாதி வாய்க்குள்ளே விழுங்கப் படுவதில்லை. அம்மையார் முகக் குறிப்பிலும், கை ஜாடையிலுமே நமக்குப் பாதி விளங்கி விடுகிறது. இவ்வளவு உலகப் பிரசித்தி பெற்ற அம்மையார் தம் தாய் மொழியாகிய இத்தாலியையே உபயோகிக்கும்போது நாம் நம் தீந்தமிழை விட்டு ஆங்கில மோகம் கொண்டோமே என்று எனக்குச் சுறுக்கென்று பட்டது.

இந்த அம்மையார் ஏதாவது ஒரு சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது பூங்கொத்து ஒன்றை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு இதழாக எடுத்துப் போட்டுக்கொண்டே இருப்பார். அல்லது ஒரு ஜரிகை நாடாவைச் சுற்றிக் கொண்டே இருப்பார். இதைக் கண்டால் நம் தவமுனிகள் ஜெபமாலை உருட்டுவது ஞாபகம் வருகிறது. கை வேலை செய்துகொண் டிருந்தால் சிந்தனைக்கு உதவும் என்பது இவர் கொள்கை. அதற்குத்தான் இவர் முறையில் கைவேலையால் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இவ்வளவு பெரிய அறிவாளி சில சமயங்களில் சிறு குழந்தைபோல் நடந்து கொள்வது நமக்கு இவருடைய குழந்தை உள்ளம் வெளியாகிறது. தாயக்கட்டம் போல் விளையாட்டுகள் ஆடும்போது யாரும் இவரைத் தோற்கடிக்கக் கூடாது. இதற்கென்றே எங்களில் சிலர் மோசடியாகக் காய்களை ஏமாற்றி மாற்றி விடுவோம். இது அம்மையாருக்குத் தெரியவே தெரியாது. சீட்டாட்டம் ஆடுவதில் மிகவும் பிரியம். காசு வைத்தும் ஆடுவதுண்டு. ஆனால் நிஜமான காசன்று. காகிதங்களை வித விதமாக மடித்து ரூபாய் நோட்டென்றும், பத்து ரூபாய் நோட்டென்றும் நூறு ரூபா யென்றும் வைத்துக்கொண்டு ஆடுவது வழக்

கம். இதிலும் மாண்டிசோரி முறை போலும்! அவரிடமுள்ள நோட்டுகள் தீர்ந்து போய்விட்டால் எங்களுக்குத் தெரியாமல் தமது பெட்டிக்குள் இருக்கும் மடித்த காகித நோட்டுகளை எடுத்துக் கொள்வார்கள். அப்பொழுது நாங்கள் பார்க்கப் படாது. பார்த்தால் அவர்கள் பார்க்கின்ற கண் சிமிட்டில் எத்துணை விகடம் இருக்கிறதென்று அனுபோகப்பட்டவர்களால்தான் அறியமுடியும்.

இவர் இந்த எழுபத்தாறு வயதிலும் என்ன கவனமாக வேலையில் ஆழ்ந்து விடுகின்றனர்! ஒரு முறை எங்களில் ஏழெட்டுப் பேர் பேசிக்கொண்டு இவர்களைக் கடந்து இவருக்குப் பின் இருக்கும் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். ஏதோ படித்துக் கொண்டிருந்தவர் எங்களைக் கவனிக்கவே இல்லை. இவ்வளவு சப்தமும் ஒன்றும் செய்யவில்லை. "என்ன, இவர்கள் இன்னும் வரவில்லையே" என்று, படித்தவுடன் எழுந்து அறைக்குள் வந்ததும் "நீங்களெல்லோரும் எப்பொழுது வந்தீர்கள், எந்த வழி வந்தீர்கள்?" என்று கேட்டார். இப்படித்தானே வந்தோம் என்று எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்து நகைத்தோம்.

சிறு குழந்தைகளைப் பார்க்கப் போகும்போது கம்பீரமான ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு போவார். குழந்தைகள் கண்களுக்கு அழகும் அலங்காரமுமேதான் தோன்ற வேண்டுமாம். ஒரு ராஜ குமாரனைப் பார்க்கப் போனுல் என்ன ஜோடனைகளோ அத்துணையும் இருக்கும் பாமர மக்கள் பாடசாலைக்குப் போவதென்றாலும்!

இவ்வளவு உயர்தர ஆராய்ச்சிகள் எல்லாம் செய்த அம்மையார் ஒரு குழந்தையையும் வாரி எடுத்து அணைத்து முத்தம் கொடுத்ததை நான் கண்டதில்லை. அவ்வாறு செய்வது குழந்தைப் போக்கில் நாம் குறுக்கிடுவதாகக் கருதுகிறுர். குழந்தைக்கு உண்மையான இன்பம் தரக் கூடிய செய்கையைத்தான் பெரியோர் செய்ய

வேண்டுமே யொழிய நம் ஆசையைத் தீர்த்துக் கொள்வ தற்கல்ல.

வருங்கால உலகில் மூன்றும் இரத்தப் போரும் கள்ள மார்க்கெட்டும் வளராது மனிதரெல்லாம் ஒரு குலமாக வாழவேண்டுமானல் அட்லாண்டிக் சாசனத்திலும்காணுத ஓர் அரு மருந்து குழந்தையின் இரகசிய உள்ளத்தில் காண் கிறது. அதைத் திறக்கின்ற வழி இதோ என்று சாவியை அம்மையார் உலகுக்குக் கொடுக்கிறுர். அநேகர் சாவியைக் கையில் வைத்துக்கொண்டு தயங்குகின்றனர். திறப்போர் ஒரு பேரமைதி காண்பர். இது சமுதாயத் தையே முன்னேற்றும். வருங்காலத்துக்கு முதியோரால் வழி காட்ட முடியாது என்பது சரித்திரத்தால் அறி கிறோம். தொட்டில் பழக்கமே சுடுகாடு மட்டும் என்பது என்றும் உண்மை. சாதிச் சண்டை, சமயச் சண்டை, நாட்டுச் சண்டை என்ற பல சண்டைகளை அறுக்கும் பருவம் இளமை. இந்த இளமை இரகசியத்தை உலகுக்கே எடுத்துரைத்துச் சிசுவுக்காக உயிர் விடாது வாழ் கின்ற உத்தம அம்மை பல்லாண்டு வாழ்வாராக.

மாமரம் ஏராளமாய்ப் பூத்துக் குலுங்குகிறது. வீடு முழுவதும் வாசனை நிறைகிறது. ஆனல் எல்லாமே பழமாய் விடுமா? இப்படித்தான் வாழ்க்கையில் நூற் றுக் கணக்கான எண்ணங்கள் மலர்கின்றன. ஏதோ சில தான் முற்றுப் பெறும். எல்லாமே பலித்து விடுமா?



# காணாமற்போன காதோலை

கி. சரஸ்வதி அம்மாள்

லட்சுமிக்குத் தெரியும் அவள் கணவனிடமிருந்து எவ்வித ஒத்தாசையும் கிடைக்காதென்று. இருந்தாலும் பெட்டியில் நகையைக் காணோ மென்றதும் அவனிடம் ஓடிச் செய்தி தெரிவிப்பது தவிர அவளுக்கு வேறொன்றும் செய்யத் தெரியவில்லை.

"ஐயோ, நகைப் பெட்டியில் இருந்த அம்மாவின் காதோலையைக் காணோமே" என்றாள் தவிப்புடன். –

மேஜையின் அருகில் புத்தக மொன்றில் ஆழ்ந்திருந்த அவள் கணவன் பத்மநாபன், அவள் சொல்லுவது இன்ன தென்று விளங்காதவனாய் அவளை நிமிர்ந்து நோக்கினான். அவன் கவனம் முழுவதும் புத்தகத்திலிருந்தது.

"பெட்டிக்குள் எல்லாமிருக்கிறதே. ஓலையை மட்டும் காணோமே" என்று மேலும் லட்சுமி தவித்தாள்.

"இந்தா. எதைக் காணோம்? சற்று விளங்கச் சொல்லு" என்றான் பத்மநாபன், அப்பொழுதுதான் புத்தக உலகினின்றும் வெளிவந்தவனாய்.

"அது தான்னா உங்கம்மாவின் காதோலை. உங்கப்பா சாகுமுன் கொடுத்த நகைப் பெட்டியிலிருந்தது. 'பெட்டியைப் பத்மாவிடம் கொடு' என்று அவர் சொல்லவில்லையா? 'அவம்மா நகைகளெல்லாம் அதிலிருக்கிறது. அவளுக்காக அப்படியே வைத்திருக்கிறேன். இப்பொழுது அவளால் வரமுடியவில்லை. ஆகையால் அவளிடம் நேரில் கொடுக்க முடியவில்லை. நீ கொடுத்து விடு' என்று என்னிடம் நம்

பிக்கையாகக் கொடுத்தாரே. நானும் 'ஆஹா' என்று வாங்கி வைத்துக்கொண்டேனே. இப்பொழுது அதில் முக்கியமாகக் காதோலையைக் காணுமே. யார் எடுத் திருப்பா? எப்படிப் போயிருக்கும்?'' என்று லட்சுமி அங்கலாய்த்தாள்.

"ஒன்றும் போயிராது. நன்றாய்த் தேடிப்பாரு'' என் றான் பத்மநாபன்.

"எத்தனை தரம் தேடிப்பார்க்கிறது? ஐயோ, எனக்கு வேர்த்துக் கொட்டுகிறது. தலையே சுத்துகிறது''

"எங்கே பெட்டியைக் கொண்டுவா. நான் பார்க் கிறேன்.''

"நீங்க பார்த்தாமட்டும் அகப்பட்டுடுமா. அதுலே இருந்தால்தானே! அறை அறையாகக் கைவிட்டு ஒவ் வொன்றாய்க் கீழே எடுத்து வைத்து கவிழ்த்துக்கூடப் பார்த்துவிட்டேன். காணலியே.''

"அதில்தா னிருந்ததா? நிச்சயமாகத் தெரியுமா?''

"நகைப் பெட்டியிலே இல்லாமல் வேறே தனியா இருக்குமா?''

"வெல்வெட் பையில் போட்டு வைத்திருக்கிறே னென்று அப்பா சொன்னது நன்றாய் நினைவிருக்குதே.''

"நீ பார்த்தாயா என்றால், வேறு ஏதோ சொல்லு கிறாயே.''

"என்னைக் கேள்வி கேட்காதீங்கோ. மனுஷ்யாள் சாகிற வருத்தத்திலே எல்லாம் சரியாக யாருக்கு நினை விருக்கிறது. என்னவோ பார்த்த மாதிரிதான் தோன்று கிறது.''

"அப்போ எங்கும் போகாது.''

"அப்படிச் சொன்னா ஆயிடுத்தா. இப்போப் பெட்டி யிலே இல்லே. பத்மா வருகிறதாகக் கடிதாசு வந்திருக்கு. அவள் வந்து நகைகளைக் கேட்டா என்ன பண்ணு கிறது?''

"வீண் கவலைப்படாதே, நன்றாய்த் தேடிப்பாரு, இருக்கும். நானும் பார்க்கிறேன். பெட்டியைக் கொண்டு வா. எங்கும் போய்விடாது" என்றான் பத்மநாபன் அவளை சமாதானப் படுத்திக்கொண்டு.

லட்சுமி பெட்டியை எடுத்து வந்தாள். அது மரத்தினாலான சிறு கைப்பெட்டி. இருவருமாக அதன் அறைகளைத் துளாவி ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்துப் பார்த்துத் தேடினார்கள். அகப்படவில்லை.

சின்னத் திருகாணி முதல் லட்சுமி சொன்னதுபோலப் 'பொடிபொட்டுக்' கூட அதது வைத்தபடி கிடந்தது. எண்ணெய் மெழுகேறிய திருமங்கலியச் சரடு அப்படியே இருந்தது. யாராவது பெட்டியைத் திறந்து தொட்டுப் பார்த்திருந்தால்தானே? அன்று அவள் மாமியார் அற்பாயுசில் இறந்துபோன துக்கத்தில் அவள் நகைகளைக் காண மனம் சகியாமல் வைத்துப் பூட்டினது. பிறகு இன்று வரையும் பெட்டி திறக்கப்படவே இல்லை. பெண்ணுக்குப் புதிதாக நகைகள் செய்யும்பொழுது அதில் எதையாவது எடுத்து மாற்றிச் செய்து போடலாமென்று லட்சுமியின் மாமனார் நினைக்கவில்லை. பிள்ளையின் மனைவிக்குக் கலியாணப் பரிசாகக்கூட அதிலொன்றையும் அவர் கொடுக்கவில்லை. அவைகளைப் பொக்கிஷமாக மறைத்து வைத்துப் பூட்டிவிட்டார். அவர் மனைவிக்காகத் துக்கம் காத்தது அது. அவர் சாகும்வரையும் அந்தப் பெட்டியைக் கண்ணால்கூட யாரும் கண்டதில்லை.

தான் இறப்பது நிச்சயம் என்று தெரிந்த பின்புதான் அவர் அதை லட்சுமியிடம் ஒப்புவித்துப் பெண்ணிடம் கொடுக்கச் சொன்னார். பிள்ளை பத்மநாபனிடம் கொடுத்திருக்கலாம். ஏனோ அவர் அவ்விதம் செய்யவில்லை. ஒரு கால் லட்சுமி நினைத்ததுபோல அவன் ஜாக்கிரதைக் குறைவை அவரும் உணர்ந்திருந்ததுதான் காரணம் போலும்.

யுத்தத்தில் பர்மா போன புதிது. சிட்டகாங்கில் மிலிடெரி டாக்டராயிருந்தான் பத்மாவின் கணவன். அவளும் அவனுடனிருந்தாள். அவனுக்கு லீவு கிடைக்க வில்லை. அவளால் தனியே வருவது சாத்தியமாகவில்லை. ஆகையால் தந்தைக்கும் பெண்ணுக்கும் கடைசி 'முகமுழி' இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது சண்டை முடிந்துவிட்டது. ஆறுமாதம் ரஜா கிடைத்திருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் வருவதாகப் பத்மா எழுதியிருக்கிருள்.

அந்தக் கடிதம்தான் லட்சுமியை நகைப்பெட்டியைச் சோதிக்கத் தூண்டிற்று. நாத்தனுர் வந்து அவளிடம் பெட்டியைக் கொடுத்து விடுமுன், சரிபார்க்க எண்ணித் திறந்து பார்த்தாள். அதன் பேரில்தான் காதோலை அதிலில்லை என்பதைக் கண்டுபிடித்தாள். ஓலையொன்றும் விலைபெற்ற சீமைக் கமலமல்ல. வெறும் சிவப்புத்தான். இருந்தாலும் காணுமல் போவதென்ருல் சரியா!

லட்சுமிக்கு ஒன்றும் ஓடவில்லை. "அப்பாதான் ஏதோ செய்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் எங்கே போகும்" என்று ஒரே வார்த்தையில் அதைப்பற்றின கவலையைத் தீர்த்துவிட்டுப் பத்மநாபன் பேசாதிருந்தான். அதற்கு மேல் செய்யக்கூடியது இருப்பதாக அவனுக்குத் தோன்ற வில்லை.

லட்சுமிக்கு 'அதெப்படிப் பேசாதிருப்பது' என்று கணவனிடம் கோபம் கோபமாய் வந்தது. 'ஏதாவது செய்ய வேண்டாமா—யாரிடமாவது சொல்ல வேண்டாமா? ஒன்றுமில்லாமலா இருப்பது! அதைப்பற்றிப் பேசினலாவது அவளுக்குச் சிறிது சமாதானமாக இருக்கும் போலிருந்தது. அதுகூட அவன் செய்யத் தயாராயில்லை. "சதா கொட்டியளப்பதில் என்ன பிரயோஜனம்" என்று சொல்லிவிட்டான். அவள் மாமனுரே ஏதாவது செய்திருப் பாரென்று அவன் நினைத்ததை அவள் ஒரு நிமிஷம்கூட

ஆமோதிக்கவில்லை. வெல்வெட் பையில் போட்டு வைத்திருக்கிறேனென்று அவர் சொன்னது அவள் காதிலேயே இன்னும் ஒலித்துக்கொண் டிருக்கிறது. அந்தப் பையையே காணோமே. உடலை மயானத்துக்குக் கொண்டுபோன பிறகு கழற்றிய ஒன்றிரண்டு நகைகளில் அதுவுமொன்று. மற்றதெல்லாம் அப்படியே இருக்க, அதுமட்டும் எங்கே போகும்? கைப்பெட்டி மாமனாரிடமே இருந்திருக்கிறது. அதன் சாவி அவர் பூணூலை விட்டுப் பிரிந்ததேயில்லை. வேறொருவர் தொடுவதற்கு வழி இல்லை. அப்படி இருக்க மாயமாய் மறைந்திருக்கிறதே! பெட்டி விழுங்கிவிட்டதென்று கதை சொல்லுவார்களே, அதுபோலல்லவா இருக்கிறது விஷயம்! அவள் மாமனார் அவள் கணவனைப்போல் சதா புத்தகத்தில் மூழ்கி மற்றக் காரியங்களில் அஜாக்கிரதையாக இருப்பவ ரல்ல. மறதி



என்பதே அவரிடம் கிடையாது. அவசரப்பட்டு ஒரு காரியமும் செய்துவிட மாட்டார். அதது வைக்கவேண்டிய இடத்தில் வைத்து, செய்ய வேண்டிய விதத்தில் செய்வார். அது எல்லோருக்கும் தெரியும். அப்படியிருக்க அவரிடமிருந்து ஒரு நாளும் அது கெட்டுப் போயிராது. நிச்சயம். அப்படியானல் அவள் கைக்கு வந்தபின் தான் போயிருக்க வேண்டும். எப்பொழுது, எப்படிப் போயிருக்கும்? வெளித் திருடர்கள் செய்த வேலையில்லை. அதற்கு வேண்டிய கன்னம் வைப்பதோ, இன்னென்ருே நடக்கவில்லை. வேறு சாமானும் களவு போகவில்லை. வீட்டிலுள்ளவர்கள் கை வேலை தான். சந்தேக மில்லை.

அவள் மூளை புத்தகங்களில் துப்புத் துலக்குபவர்களின் மூளை போல வெகுவேகமாய் விஷயங்களை அலசி ஆராயத் தொடங்கிற்று. அவள் பட்டணம் வந்தபிறகு களவு போவது சாத்திய மில்லை. ஏனெனில் பட்டணத்து வீட்டில் 'பெட்டி பேழை' களுக்கென்று தனி அறை இருக்கிறது. அதில் வெகு ஜாக்கிரதையாகப் பூட்டின பெட்டியைப்பீரோவில் வைத்துப் பூட்டி, பிறகு



அறையையும் பூட்டி மூன்று சாவிகளையும சாவிக் கொத்தோடு சேர்த்து இடுப்பில் செருகி இருக்கிறாள். அவள் மறந்தும் அதை எங்கும் வைத்துவிட மாட்டாள். அவள் மறந்தாலும் அவள் கை மறக்காது. அத்தனை பழக்கம் அதற்கு. பின்? மாமனார் இறந்து காரியங்கள் நடந்த பிறகு ஒரு மாதம்அவர்கள் கிராமத்தில் தங்கினார்கள்.அப்பொழுது ஒருகால் திருட்டுப் போயிருக்கக் கூடும். ஏனெனில் கிராமத்து வீட்டில் தனி அறையோ இன்னொன்றோ கிடையாது. எல்லாருக்கும் பொதுவாகக் 'காமரா' அறை ஒன்று தான். சாவுக்கு வந்த பந்துக்கள் எல்லாரும் அதில்தான் 'பெட்டி பேழைகள்' வைத்துக் கொண்டார்கள். அவளும் நகைப் பெட்டியைத் தன் பெட்டியோடு அந்த அறையில் தான் வைத்திருந்தாள். மாமனார் மாமியார் இரண்டு வழி பந்துக்களும் நிறைய வந்திருந்தார்கள். மாமனார் நகைப் பெட்டியை அவளிடம் கொடுத்தது எல்லாருக்கும் தெரியும். அதில் யாருக்காவது திருட்டுப் புத்தி ஏன் ஏற்பட்டிருக்கக் கூடாது? உணவுக்குக்கூடத் தாராளமாய் இல்லாத பந்துக்களும் அவர்களுக்கு வேண்டிய பேர் உண்டு.

ஆனால் ஒன்று. அத்தனை ஜனக் கூட்டத்தில் திருடுவதுதான் எப்படி? வீடு 'திமு திமு' என்று நெரியும்பொழுது, பிறர் பெட்டியை யாருமறியாமல்அதன் திறவுகோலு மின்றித் திறந்து எடுப்பது சாத்தியமா? ஒருவரில்லாவிட்டால் ஒருவர் கண்ணிலகப்பட்டு விடாதா? தேர்ந்த திருடருக்கு ஒருகால் முடியலாம். மற்றவர்களுக்கு எளிதல்ல, என்று நிச்சயித்தாள் லட்சுமி.

அவள் விஷயங்களைத் தெளிவு செய்து கொள்ளும் விதம் அவளுக்கே திருப்தியை அளித்தது. இந்த முறையில் திருட்டையே உண்மையில் கண்டு பிடித்து விட்டால்? இந்த எண்ணம், மேலும் அதிலேயே சிந்திக்கச் சுறு சுறுப்பை உண்டு பண்ணிற்று.

கூட்டம் குறைந்த பிறகு வேண்டுமானல் எடுப்பது சாத்தியமாகலாம். அவர்கள் பட்டணம் வரும்வரை சிற்சில பந்துக்கள் பின்தங்கின தென்னவோ உண்மை தான். ஆனல் அவர்கள் மிகவும் நெருங்கின சுற்றத்தார்கள். மாமனரின் தங்கை ஒருத்தி. அதாவது அவள் கணவனின் சொந்த அத்தை. அவளைத் திருடி என்று சொல்லுவதா? இல்லாவிட்டால் மாமியாரின் சகோதரி—இவர்களிடம் வெகு அன்புகொண்ட சித்தி—அவளைச் சந்தேகிப்பதா? காலம் சிரமகாலம். யாரையும் நம்புவதற்கு இல்லை. சொந்தத் தாய்கூட மகளை நம்பமுடியாது.

இதுமாதிரி சொந்த மனுஷ்யர்களையே பற்றி எண்ணுவது பிசகு, என்று அவள் மனம் எச்சரிக்காமல் விடவில்லை. அவளும் அதைத் திருத்திக் கட்டுப்படுத்த முயன்ருள். ஆனல் அது கேட்காமல் பின்னேடு 'அப்பொழுது சித்திப் பாட்டி அங்கிருந்தாளே, அவளைப்பற்றி என்ன' என்றது. அவளைச் சந்தேகிப்பது அவ்வளவாகத் தவருகவும் தோன்றவில்லை. காரணம், அவள் ஏழை என்பது மட்டுமல்ல. அவளுக்குக் கை கொஞ்சம் நீளமென்றும் கேள்விப்பட்டிருக்கிருள். முன்பு எப்பொழுதோ அவள் கணவனும் நாத்தனரும் சிறு குழந்தைளாக இருந்தபொழுது ஒருவருடைய கையிலிருந்த தங்கக் காப்பு கொலுசு இரண்டும் களவு போய்விட்டதாம். அப்பொழுது வீட்டிலிருந்த சித்திப்பாட்டி பேரில் சந்தேகம் பலமாய் ஏற்பட்டதாம். களவு என்னவோ கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்காக விஷயம் இல்லையென்ருகி விடுமா?

இவ்விதம் எண்ணமிடும் பொழுது சித்திப்பாட்டி தன் பேத்திக்குச் சிவப்புத் தோடு செய்திருப்பதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. "கல்யாணத்துக்கு நிற்கிறது. காதுத்தோடுகூட இல்லாமலிருந்தால் என்னயாயிருக்கும்! அதற்காகப் பண்ணினேன்!" என்று யாரோ அவள் சொந்தப் பேத்திக்கு நகைசெய்து போட்டதற்குக் கார

ணம் கேட்டதுபோலச் சொல்லிக்கொண்டாள். அவரவர் கள் குழந்தைகளுக்கு நகை செய்வதற்குப் பிறரிடம் காரணமெதற்கு? பிறர் அதற்கான பணத்தைப் பற்றிச் சந் தேகியாம லிருக்கவேண்டும். ஏதோ தீராத செலவு. சிரமப் பட்டுச் செய்து கொண்டார்கள் என்று நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். அவள் பிள்ளைக்கு வெகு சொற்பச் சம்பளம். இப்பொழுது கொஞ்சம் உயர்ந்து இருப்பதாகச் சொன்னாள். அதற்குத் தகுந்தபடி விலைவாசி ஏறிக்கிடக்கிறது. நாலு குழந்தை களை வைத்துக்கொண்டு குடித்தனம் நடத்த வேண் டாமா? எல்லாம் இந்த நகையை எடுத்துப் பிரித்துத்தான் தோடு செய்திருக்கிறாள்; சந்தேகமில்லை. கைப்பெட்டியின் பூட்டென்ன சாமான்யம்தானே! எந்தச் சாவிபோட்டுத் திறந்தாலும் திறந்துவிடுகிறது. மேலாக வெல்வெட் பையிருந்திருக்கும், எடுத்துவிட்டாள். இன்னும் எதை யாவது எடுப்பதற்கு வெகுநேரம் துளாவிக்கொண் டிருக்க முடியாமல் யாராவது பார்த்துவிடப் போகிறார்கள் என் கிற பயம் இருந்திருக்கும். அந்த ஒரு மாதத்தில் எத்தனையோ தரம் சித்தியுடனும் அத்தையுடனும் சித்திப் பாட்டியை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டுக் கோவி லென்றும் குளமென்றும் தான் போனது இப்பொழுது லட்சுமிக்கு நினைவு வந்தது. திருட வேண்டுமென்றால் அதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறு வேண்டுமா?

இனி, சித்திப்பாட்டியின் பேரில் சந்தேகம் ஊர்ஜிதம் கொள்ளத் தொடங்கிற்று என்பதைச் சொல்லவும் வேண்டுமா? திருட்டைக் கண்டுபிடித்து விட்டதாகவே அவள் மனம் உள்ளுக்குள் சந்தோஷப்பட்டது. ஆனால் அதை வெளிப்படுத்திப் பொருளைத் திரும்பப் பெறுவதெப் படி? அவள் கணவன் ஒருகால் தோட்டைக் கண்ணால்பார்த் தால் கண்டுபிடித்துவிடக்கூடும். அவனுடைய அம்மா காதில் அதைச் சதா பார்த்திருப்பா னல்லவா? அவன்

அப்படியொன்றும் நினைவுதெரியாத குழந்தையல்ல. அவன் தாய் சாகும்பொழுது, பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பையன்தான். நகை உருமாறியிருந்தாலும் சிவப்பு அடையாளம் கண்டுபிடித்து விடலாமே! சித்திப் பாட்டியை எந்த விதத்திலாவது கடிதம்போட்டு வர வழைக்க வேண்டும். ஆனால் அவள் வரும்பொழுது தோட்டைக் கொண்டுவரமாட்டாளே. அதற்கு என்ன செய்கிறது? அவள் பேத்தியையும் கூடவே அழைத்து வரும்படி செய்யவேண்டும். வரன் பார்த்துத் தருவதாக ஆசை காட்டவேண்டும். சாமானைக் கண்ணால் பார்த்த பிறகு நேரிலேயே கேட்டுவிட வேண்டும். அப்பொழுது ஒத்துக்கொள்ளாமல் என்ன செய்வாள்?

ஆனால் ஒன்று. தப்பித்தவறி அவள் எடுத்திராமல் இருந்துவிட்டால், அப்புறம் அவள் வசைமாரிகளை யார் கேட்கிறது? ஜன்மத் துவேஷமாகிவிடுமே! ஆனால் தவறாக ஏன் போகிறது? அவளை விட்டால், வேறு யார் எடுத்திருக்கக்கூடும்?

இப்படி எவ்வளவோ யோசித்து அதற்கான வழி செய்யப் பத்மநாபனிடம்தான் சொல்லவேண்டி வந்தது. அவள் யோசனைகளை அவன் கேட்டபொழுது அவன் ஒரேயடியாய் அவ்விதம் ஒன்றுமிராதென்று மறுத்ததோடு அவளுக்கே ஏதோ மூளைக் கோளாறு என்றும் பரிகசித்தான்.

"லட்சுமி, இனிமேல் அந்த நகையை அடியோடு மறந்து விடு. போனால் போகிறது. அதொன்றும் அப்படிப் பிரமாதமில்லை. வீணாக மூளையைக் குழப்பிக் கொள்ளாதே" என்றான்.

"நானொன்றும் காரணமின்றிக் குற்றம் கண்டு பிடிக்க வில்லை" என்று லட்சுமி கோபமாய்ச் சொன்னதற்குக்கூட, "உன் காரணமென்ன? சித்திப் பாட்டி பேத்திக்குத் தோடு செய்திருப்பதுதானே? அப்படிப் பார்த்தால்

அத்தைபேரிலும் சித்தி பேரிலும் கூட நீ சந்தேகிக்கலாம். அத்தை பெண்ணுக்கு ராக்கோடி செய்திருக்கிறாள். சித்தி தனக்கே சிவப்பு வளையல் செய்துகொண் டிருக்கிறாள். அதற்கென்ன சொல்லுகிறாய்?'' என்றான் பரிகாசமாக. இடமிருந்தால் அவர்களையும் அவள் சந்தேகிக்கத் தயார் தான் என்பதை அவன் கண்டானா?

''ராக்கோடிக்கும் வளைக்கும் நிறையக் கற்கள் வேண்டுமே! இரண்டு ஓலைகள் போதுமா?'' என்றாள் லட்சுமி; இந்தப் பதில் அவனைத் திடுக்கிடச் செய்தது. முடிந்தால் அவர்களையும் அவள் சந்தேகிப்பாள் என்பதை அது விளக்குகிற தல்லவா? இந்த விபரீதக் கற்பனைகளை அவள் மனத்தினின்றும் அடியோடு போக்க எண்ணி ''இதோ பார் லட்சுமி, பத்மா உன்பேரில் இப்பொழுதே சந்தேகித்தால் எப்படி இருக்கும்? யோசித்துப் பார், அதுபோலல்லவா இருக்கிறது, நீ நமது உறவினர்களையே திருட்டுப் பட்டம் கட்டுவது. முதலில் நகையே கெட்டுப் போயிருக்கு மென்று நான் நினைக்கவில்லை. அப்பாதான் ஏதோ செய்திருக்கிறார் நிச்சயம். வீண் சந்தேகப்பட்டுச் சொந்த மனிதர்களின் மனஸ்தாபத்தைச் சம்பாதித்துக் கொள்ளாதே'' என்று எச்சரித்தான் பத்மநாபன்.

அவன் அவ்விதம் அவள் மனத்தைத் தெளிய வைக்க எண்ணிப் பேசினது இன்னொரு விபரீத பலனைத்தான் அளித்தது.

'இதுவரையும் எனக்குத் தோன்றாமல் போயிற்றே. ஆமாம், பத்மா என்னைச் சந்தேகித்தால்...'' என்று நினைத்துக் கவலைப்படத் தொடங்கி விட்டாள் லட்சுமி.

அதுமாதிரி ஏன் நடக்காது என்றுதான் அவளுக்குத் தோன்றிற்று. பெட்டியோ அவளிடமிருந்திருக்கிறது. நகையையோ காணோம். இன்னும் என்ன வேண்டும்? சம்சயத்தைத் திடம் செய்வதேபோல் அவளுக்குச் சிவப்பு அட்டிகை வேறு புதிதாய் அவள் அம்மா செய்து போட்

டிருக்கிருள். கேவலம் அவளிடம் நம்பிக்கைதான் சம்சயத்தைவிலக்க வேண்டுமே தவிர, சந்தேகிப்பதற் கென்னவோ காரணம் பலமாய்த்தா னிருப்பதாக அவளுக்குப் பட்டது. நகை அகப்பட்டாலொழிய, பத்மா தன்னைத் திருடி என்றுதான் நினைப்பாள். இந்த விபத்துக்கு என்ன செய்வது? லட்சுமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. செய்வது இன்னதென்றும் தெரியவில்லை.

அவள் பேரில் சந்தேகம் ஏற்படக்கூடும் என்பது தெரிந்தும் பத்மநாபன் சும்மா யிருக்கிறனே. திருட்டை வெளிப்படுத்த முயற்சி ஏதும் எடுத்துக்கொள்ளவில்லையே. அவனுக்கு எல்லாம் விளையாட்டாக இருக்கிறது. இது மாதிரி ஒரு புருஷன் கவலையற்று இருப்பதென்றல் லட்சுமிக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்? அவனோடு பேசக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை. மனம் மட்டும் உள்ளூரத் தவித்தது.

ஆனல் அவள் கோபத்துக்காகவும் தவிப்புக்காகவும் நாட்கள் செல்லாம லிருக்குமா? அவைகள் ஓடிவிட்டன. பத்மா கணவனுடனும் குழந்தையுடனும் வந்து சேர்ந்தாள். மூன்று வருடம் பார்க்காது இருந்து பார்த்த சந்தோஷம் எல்லாருக்கும். அளவளாவித் தீர்த்தார்கள். லட்சுமியும் தன்னை மறந்துதான் உத்ஸாகத்திலிருந்தாள். பத்மாவைப் பார்ப்பதற்கே அவளுக்கிருந்த பயம் எங்கேயோ போயிற்று.

ஆனல் அந்த மறதி ஒன்றிரண்டு நாளைக்குத்தான். பிறகு சதா நகைப்பெட்டியின் நினைவு ஏற்பட்டு அவளை துன்புறுத்தத் தொடங்கிவிட்டது. விஷயத்தைப் பத்மாவிடம் சொல்லியாகவேண்டுமே, எப்படி, எப்பொழுது சொல்வது? அவளைத் திருடி யென்று பத்மா சந்தேகிக்கத் தொடங்கின பின்பு அவர்களிருவரும் இப்பொழுது போல் களங்கமற்றுச் சந்தோஷமா யிருக்க முடியுமா? பத்மா அவளைத் தன் வாயால் திருடியென்று சொல்லமாட்டாள்.

இருந்தாலும் மனத்தில் நினைத்துக்கொள்ளாமலிருப்பாளா? அவள் நிம்மதியைக் கலைக்க இதொன்று நேரிட வேண்டுமா? தந்தை இறக்கும்பொழுது பத்மா வர முடியாமல் ஏன் போகவேண்டும்? அதுதான் அப்படியென்றால், நகையை அவள் மாமனார் ஏன் அவளிடம் கொடுக்க வேண்டும்? பத்மாவே நேரில் நகையை வாங்கிக்கொண்டிருந்தால் இந்த நிலைமை வந்திராதே. தெய்வமே சூழ்ச்சி செய்துதான் அபவாதத்தைத் தன்பேரில் கொண்டு வைத்திருக்கிறது. இனி மீள வழி இல்லை யென்று தோன்றிற்று லட்சுமிக்கு.பத்மாவின் சந்தேகப் பார்வையை எதிர்பார்த்து அவள் மனம் துன்புற்றது. அவள் கண்முன் தன் சிவப்பு அட்டிகையை அணியவும் அவள் துணியவில்லை. அதிலுள்ள சிவப்புக்கற்கள் ஒருகால் ஓலையின் கற்கள் போலத் தோன்றினால்...? இவ்விதம் பலவாறு அவள் மனம் எண்ணமிட்டபோதிலும் விஷயத்தை வெளிப்படுத்தித் தானே தீர வேண்டும்? அதற்குப் பயந்து பின்வாங்கி என்ன செய்கிறது?

கடைசியில் பத்மா சமாசாரம் கேட்டுக்கொண்டபொழுது பத்மநாபனைப் போலவே நகை திருட்டுப்போயிருக்குமென்பதையே ஏற்றுக்கொள்ளவில்லை. 'அப்பா தான் ஏதாவது செய்திருப்பார். இல்லாவிடில் எங்காவது வைத்திருப்பார்' என்று சொல்லிவிட்டாள். அவள் லட்சுமிபேரில் மட்டுமல்ல, மற்றப் பந்துக்கள் யார் பேரிலும் லட்சுமியின் காரணங்களைக் கேட்டபின்கூடச் சந்தேகப்படுவதாயில்லை.

லட்சுமிக்கு இதில் திருப்தி சிறிதும் ஏற்படவில்லை. அவளைப்பற்றி அவள் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை என்றால் போதுமா, எல்லாரைப் பற்றியும் அதே மனோபாவத்திலிருக்கிறாளே! சித்திப் பாட்டியைப் பற்றின சந்தேகத்தை அவள் எடுத்துச் சொல்லியும் பத்மா காதில் போட்டுக் கொள்ளவில்லையே! இவ்வித மிருப்பதில்

திருட்டு கண்டுபிடிக்கப் படாமலே யல்லவா போய் விடும்?

இதில் லட்சுமிக்கு மிகுந்த மனவருத்தம், ஏமாற்றமோ சொல்லி முடியாது.

பத்மா இருந்த ஆறு மாதமும் ஆறு நாட்கள் போலச் சென்றுவிட்டது. அவளைப் பார்த்துப்போக எல்லாப் பந்துக்களும் வந்து போனார்கள். சித்திப் பாட்டியும் வந்திருந்தாள். எப்படியாவது சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்று லட்சுமி துடியாய்த் துடித்தாள். 'ஜாடமாடை'யாக அதுபற்றி அவள்பேசினதை அந்தக் கிழவி புரிந்துகொள்ளாமலே யிருந்தாள். அத்தனை சாமர்த்தியம் அவளுக்கு! தைரியமாய் ஒளிவு மறைவின்றிக் கேட்டு விடுவதென்று லட்சுமி தீர்மானித்தாள். ஆனால் அந்தத் தைரியம் அவளுக்குக் கட்டோடு வராமல் போயிற்று. யாருடைய பலத்தைக்கொண்டு அவ்விதம் துணிந்துகேட்பது? அவள் கணவனோ நாத்தனாரோ அவள் கட்சியிலில்லை. காரியம் பலிக்காததுடன் எதிராளி சண்டைக்கு வந்தால் சமாளித்துக் கொள்ளவாவது பக்கபலம் வேண்டாமா? இந்த மனப் போராட்டத்தின் நடுவில் சித்திப் பாட்டி என்னவோ ஊர்போய்ச் சேர்ந்துவிட்டாள். ஒன்றையும் தெரிந்துகொண்டதாகவும் காண்பிக்கவில்லை.

பிறகு என்ன? பத்மா ஊர் திரும்பும் நாளும் நெருங்கிற்று. எல்லாச் சாமான்களையும் மூட்டை கட்டும்பொழுது நகைப்பெட்டியையும் சேர்த்துக்கட்ட அதையும் கொடுத்தாள் லட்சுமி. வெள்ளிக் கிண்ணி யொன்று பத்மாவினுடையது. அதையும் கொடுத்துவிட நினைத்து எடுத்தாள். அவை இரண்டு கிண்ணங்கள் ஜோடியாக அவள் கணவனுக்கும் பத்மாவுக்கும் குழந்தையாக இருக்கும்பொழுது செய்தது. ஒன்றுக்குள் ஒன்று போட்டு வைத்திருந்தது. அதுவும் மாமனார் சாகும்பொழுதும், "ஒன்று உன் குழந்தைக்கு (அதாவது அவர் ஆசீர்வாதம் அது), இன்னொன்று

பத்மாவின் குழந்தைக்கு" என்று சொல்லிக் கொடுத்தது தான். அவைகளை அப்படியே பீரோவில் வைத்திருந்தாள். அதில் மேல் கிண்ணியை எடுக்கவும் அடியில் என்ன அது...? லட்சுமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. கண்களையே நம்ப முடியவில்லை. அவள் மாமனார் சொன்ன வெல்வெட் பை அங்கே எப்படி வந்தது? கையிலெடுத்துப் பைக்குள் பார்த்தாள். மாமியாரின் காதோலை பத்திரமாய் அப் படியே அதிலிருக்கிறது. அப்பொழுது லட்சுமிக்கு என்ன வாக இருந்திருக்கும்?

அவளுக்கு ஏற்பட்டது என்ன? சந்தோஷமா? ஏமாற்றமா? அல்லது வருத்தமேதானா? ஒரு வகையில் மூன்றும் என்றுதான் சொல்லவேண்டும்.

நகை கெட்டுப்போகவில்லை. கிடைத்து விட்டது என் பதில் சந்தோஷம்.

அவள் மூளை வெகுவாய் வேலைசெய்து கண்டுபிடித்த திருட்டு இல்லாமலே போய்விட்டதில் ஏமாற்றம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தன் கணவனுக்கும் நாத்தனாருக்கும் வாய்த்த—பிறரைச் சந்தேகியாத—நல்ல மனம் தனக்கில்லையே என்கிற மனவருத்தமும்தான்.

✲

பல தந்திகளுடன் கூடிய ஒரு வீணைதான் வாழ்க்கை. அந்த வீணையை எப்படிச் சுருதிசேர்த்து அதிலிருந்து இன்னிசையை எழும்புவது என்பதை ஆராய்ந்து அறிந்து நடைமுறைக்குக் கொண்டுவரும் சமர்த்துப் பெண்தான் நல்ல மனைவி.

# சுக்கு

அரவிந்தம்

ஏன் இப்படி வெறிக்கப் பார்க்கிறீர்கள்? என்னைத் தெரியவில்லையா? உங்களில் யாராவது இளைத்திருந்தால் "சுக்குப் போல வத்திப் போச்சு" என்கிறீர்களே! என்னைப் பாராமலேயே, என்னைத் தெரிந்து கொள்ளாமலேயே உபமானம் மட்டும் சொல்லுகிறீர்கள், அப்படித்தானே? பரவாயில்லை. என்னை நகரவாசிகளில் சிலர் அசட்டை செய்யலாம். ஆனால் எவ்வளவு கிராமங்களில் எவ்வளவு குடும்பங்கள் சிக்கனமாக நோய்வாய்ப் படாமல் காக்கப்படுகின்றன! "கடப்பாரையை விழுங்கிச் சுக்குக் கஷாயமா" என்று கேலி செய்கிறீர்கள். அதில் என்ன தப்பு? உங்களைச் சொல்லக் குற்றமென்ன? அன்னிய நாட்டு மருந்துகளிலும் வைத்திய முறைகளிலும் மோகம் மிகுந்த இக்காலத்தில் சுக்குக் கஷாயத்தின் குணங்களை அறிய உங்களுக்குப் போதுமான அவகாசமுமில்லை, அக்கறையு மில்லை.

திரிகடுகம் என்றால் சுக்கு, மிளகு, திப்பிலி இவை தானே. அதில் நான் முதன்மை பெற்றிருக்கிறேன். என்னை அறிந்த பழைய காலத்து அறிவாளிகள், நம் நாட்டு வைத்திய முறையில் தேர்ந்தவர்கள். என் குணத்தை, என் மகிமையை நன்கு பழகித் தெரிந்துகொண் டிருந்தார்கள். அதனால் தான் என்னை முன்னணியில் வைத்தார்கள். அக்காலத்தில் நான் வசிக்காத வீடும் இல்லை. நான் வளர்க்காத குழந்தைகளும் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும பேறு காலத்தின்போது என்னைத் தேடி அழைத்துச் செல்வார்கள். இளங் குழந்தைகளுக்கு என்னை நெய்யில் பொரித்து எடுத்து சந்தனக் கல்லில் இரண்டு மூன்று சுற்றுகள்

உரைத்துப் பாலில் கலந்து கொடுப்பார்கள். அந்தக் காலம் இப்பொழுது மலையேறி விட்டது. ஓஹோ! இப்பொழுது உன்னால் என்ன செய்யமுடியும் என்கிறீர்களா!

என்னால் உங்களுக்கு ஏற்படும் நன்மை ஒன்று இரண்டல்ல. கால் குடைச்சலுக்கு என்னை அரைத்துப் பூசிக் கொண்டால் சில நிமிஷங்களில் அதைப் பரிகாரம் செய்வேன். வீக்கமோ வலியோ எதுவாக இருந்தாலும் நான் பரிகாரம் செய்வேன். என்னைப் பூசிக் கொள்வதால் குணமாகாத வலியே கிடையாது. பிடிப்பானாலும் மூச்சுக் குத்தானாலும் என்னை முறைப்படி உபயோகித்தால் பூரண சுகம் அடையச் செய்வேன். வயிற்று உப்புசம் வயிற்று வலி இவைகளுக்கு என்னால் உண்டான கஷாயத்தை, நீங்கள் பரிகாசம் செய்யும் சுக்குக் கஷாயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு லோடா உள்ளே செலுத்தினால் அங்கிருக்கும் குற்றங்களைக் களைந்து குணத்தைக் கொடுப்பேன். அது மட்டுமா? முன் காலத்தில் கட்டை வண்டிப் பிரயாணம், சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நாட்கள் பிரயாணம் செய்துவந்த அக்காலத்தில் கட்டுச்சாதம் தயாரிப்பார்கள். அதில் எனக்கும் உப்புக்கும் சரிசமமான மதிப்பு உண்டு, இடம் உண்டு. எங்கள் இருவருடனே கறிவேப்பிலையையும் சேர்த்துத் தயிரும் பாலும் கொட்டிப் புளிக்காதபடி, கெட்டியாய்க் கலந்து கட்டி வைப்பார்கள். அதை மூன்று நான்கு நாட்கள் வரையில் கெடாத வண்ணம் காப்பாற்றுவேன். பெரிய உத்ஸவ காலங்களிலும் சமாராதனைகளிலும் மோர் கெடாமலிருக்க என்னையும் உப்பையும் இடித்துக் கொட்டி வைப்பார்கள். நான் நல்ல பாராக்காரன் என்று தெரிந்தவர்கள் அம் மாதிரி செய்தார்கள்.

உத்ஸவ காலத்தில் சுவாமி உலாவ வரும்பொழுது தெருக்களில் அனேகரால் கட்டளைகள் நடத்தப்படுகின்

றன. சுக்கு வெல்லமும் பானகமும் வினியோகம் செய்யப்படுகின்றன. பானகத்துக்கு என் தோழர் வெல்லமும் நானுமல்லவா பிரதானம்? சுக்கு வெல்லம் வேண்டாம் என்று சொல்லும் மனிதர் எங்காவது உண்டா? வீடுகளில் சுமங்கலிப் பிரார்த்தனை, சமாராதனை முதலிய விசேஷ தினங்களில் நான் சுக்கு வெல்லமாகவும், பானகமாகவும் கலந்து கொள்ளுகிறேன். குழந்தை பிறந்த பிறகு புண்யாக வாசனத்திலும், தீபாவளியிலும் எனக்குப் பிரதான இடம் உண்டு. ''சிக்குக் கண்ட இடத்தில் தலை கோதி, சுக்கு கண்ட இடத்தில் பேதி பார்த்தாள்'' என்ற பழமொழி என் பிரபாவத்தை அறியாமலா சொல்லி இருக்கிறார்கள். பிரதிதினமும் அநேகர் என்னை வெந்நீரில் போட்டு சாப்பிடுகிறார்கள்.

இன்னும் கேளுங்கள் தீராத பேதி (டயரியா)யை மூன்று நாட்களில் நான் குணமாக்குவேன். என் உங்களுக்கு ஆச்சரியம்! கவனமாய்க் கேளுங்கள். ஒரு தோலா சுக்கு எடுத்து புளித்த மோருடன் சேர்த்து அரைத்து களியாகக் கிளறி மூன்று பாகங்களாக்கி காலை நடுப்பகல், மாலை ஆக நாளொன்றுக்கு மூன்று வேளை, மூன்று நாளைக்கு,மூன்று தோலா சுக்கு, ஒன்பது வேளையாக உட்கொண்டால் நான் உள்ளே சென்று அங்கிருந்து வயிற்றுக்குக் கொடுமை இழைக்கும் அரக்கர்களை வெளியே துரத்தி இனி உட்புகாதவாறு காப்பாற்றுவேன். இன்னும் நெடுக வளர்த்தலாம். தற்புகழ்ச்சி எதற்கு?

நான் இந்த உருவம் எடுப்பதற்குமுன் என்னை உலகத்தோர் " இஞ்சி '' என்று சொல்லுவார்கள். மிகுதியாக வாழைகள் பயிராக்கப்படும் இடங்களில் எல்லாம் நான் பயிராவேன். ஆற்றுப் பாசனம் உள்ள இடங்களில் மஞ்சளும் நானும் மருவி மகிழ்ந்து வளருவோம். அந்தப் பருவத்தில் நான் பச்சையாகவே உபயோகப்படுவது உலகமறிந்த விஷயம். இஞ்சிப்பச்சடி, இஞ்சித் துவையல், இஞ்சி

ஊறுகாய் இப்படி அநேக விதங்களில் உருவெடுப்பேன். நான் சர்க்கரைப் பாகிலும் மூழ்கிக் குளிப்பதுண்டு. கருணைக்கிழங்கு மசியலில் எனக்கும் எலுமிச்சம் பழத்துக்கும் பிரதானம் உண்டு. உளுந்துவடை, வெண்பொங்கல் இவைகளில் நானும் மிளகும் சேர்ந்து ருசியைத் தருவோம். தயிர் வடைக்கு நான்தானே ஜீவநாடி! எலுமிச்சம்பழ ஊறுகாயில் இளம்பருவத்துள்ள என்னைத் துண்டுகளாக ஆக்கிப் போடுவார்கள். நான் ஆனந்தமாய் நீந்துவேன். உண்பவர்கள் ஆவலோடு என்னைப் பங்கிட்டுக்கொள்வார்கள். என்னை அரைத்து ரசம் பிழிந்து குழந்தைகளுக்குத் தயாரிக்கும் பிஸ்கோத்து மாவில் சேர்த்துக் கொள்வார்கள். என்? குழந்தைகள் ஒன்றிரண்டு அதிகமாய்த் தின்றாலும் கெடுதலுண்டாகா வண்ணம் காப்பாற்றுவேன் என்பது அவர்களுக்கு உறுதி. பகாளாபாத் என்று ஒரு வகைத் தயிர்ச் சாதம் தயாரிக்கிறார்கள். அதிலும் எனக்கு இடம் உண்டு.

உடம்பு பலவீனமாய் இருந்தாலும், நெஞ்சுச் சளி, இருமல் இவைகள் இருந்தாலும் என்னை ரஸமெடுத்துத் தேன் சேர்த்துக் குடிக்கிறார்கள். அந்த உருவத்தில் அவர்களுக்கு உதவி புரிவேன். தலைசுற்றுதலும் வயிற்றுப் புரட்டலும் உள்ளவர்கள், என்னைத் துண்டுசெய்து என்னுடன் ஏலக்காய் தோலையையும் சேர்த்துக் கொதிக்க வைத்துக் குடிப்பார்கள். அங்கு நின்று அரைமணி நேரத்தில் அவர்களை உத்ஸாகம் அடையச் செய்வேன். ஜுரதத்துக்கும் உதவுவேன். தலைவலிக்கும் உதவுவேன். மறுபடியும் என் பெருமையே நீண்டுவிட்டது. மறுபிறப்பைச் சொல்லுகிறேன்.

என் மேல்சட்டையை நீக்கி கொதிக்கும் வெந்நீரில் குளிப்பாட்டி, பிறகு ஈரம் போக்கி உலர்ந்தபின் புடம் வைக்கிறார்கள். அதாவது வெந்நீரடுப்பு அல்லது ரொட்டி அடுப்பு எரிந்து சூடாக இருக்கும் பொழுது தணலை நீக்கி

வெறுந் தரையில் என்னைப் பரப்பி, சிறிதளவு முட்டைத் தணலை மேலே மூடுகிறார்கள். பதினைந்து அல்லது இருபது நிமிஷம் பொறுத்து வெளியே எடுப்பார்கள். இப்பொழு தல்லவோ என்னைப் பார்க்கவேண்டும். முன் வற்றியிருந்த நான் இப்பொழுது உப்பி இருக்கிறேன். கொஞ்சம் வெளுத்தும் காணப்படுகிறேன். (இது வீடுகளில் பக்குவம் செய்யும் முறை). நான் கொஞ்சம் காரமாயிருப்பதால் சிலருக்கு என்னைக் கண்டால் பிடிக்காது. என்னைத் தெரி யாதவர்கள் இப்பொழுது என்னுடன் பழக்கம் செய்து கொண்டால் உயிர்த்தோழனாகிச் சுகம் கொடுப்பேன். இப் பொழுது நான் யார் என்பதைத் தெரிந்து கொண்டீர் களா?

✲

நாணயங்களைச் சுத்தமான, அப்பட்டமான வெள்ளி அல்லது தங்கத்தினால் செய்வதில்லை. ஏன்? பலத்திற்காக மட்டமான செம்பு முதலிய உலோகங்கள் கலக்கப்படுகின்றன. மனித சுபாவத்திலும் நன்மை தீமைகள் இப்படித்தான் கலந்திருக்கின்றது. இந்தக் கலப்பினால்தான் வாழ்க்கையென்னும் கீதம் இனிமையா யிருக்கிறது. ஒளியும் நிழலுமில்லா சித்திரத்துக்கு ஜீவ களை ஏது?

# ஆயிரத்தில் ஒருவர்

"கல்பனா"

நான் இவ்வளவு கூட்டம் வருமென்று எதிர்பார்க்க வில்லை. வரும்படியும் நான் எதிர்பார்த்த அளவுக்கு கிடைக்காமலில்லை! நகரத்திலிருந்து புறப்படும்போது ஒருவராவது எனக்குத் தைரியம் ஊட்டவில்லை. 'போயும் போயும் அந்தத் துக்கடாக் கிராமத்தில், நீ எப்படித்தான் பிழைக்கப் போகிறாயோ!' என்று அங்கலாய்த்தாள் சாதனா. 'என்னதான், சேவையும், தர்மமும் என்றாலும் வயிற்றுப்பாடு ஒன்றிருக்கிறதே, அதையும்கூட விட முடியுமா?' என்று கேட்டாள் பிரபா. அந்தக் கிழ டாக்டர் அம்மாள் (அவள் காதில் இந்தக் கிழம் என்ற வார்த்தை விழுந்து விட்டால் இங்கும்கூடத் துரத்திக் கொண்டு வந்து விடுவாள்!) உடம்பை நெளித்துக் கொண்டு மூக்குக் கண்ணாடியை நெற்றிவரை தூக்கி விட்டு, ஸ்டெத ஸ்கோப்பைச் சுழற்றியபடி அலட்சியமாக என்னைப் பார்த்து, 'சாந்தா தேவி, இப்படிப்பட்ட பிழைப்புக்கு ஆசைப்படுவோரை நான் நேசிப்பதே யில்லை' என்று ஒரு போடு போட்டு விட்டுச் சட்டென்று போய் விட்டாள்!

ஆனால் இதனையெல்லாம் என் தீர்மானத்தை மாற்றி விட முடியுமா?

குறிப்பிட்ட தினத்தில் நான் இந்தக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தேன். சாதனாவுக்குமட்டும் என்னைப் பிரிவது மிகவும் மனக்கஷ்டமாய்த்தான் இருந்தது. ஆனால், எனக்கு என்னமோ ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி வேலை செய்வது என்பது பிடிக்கவேயில்லை. தவிரவும் டாக்டர் தொழில் சுய நலத்துக்கு மட்டுமன்றி,

பிறருக்காகவும் உழைக்கும் சந்தர்ப்பத்தை அளிக்கும் உன்னதத் தொழில் அல்லவா? ஒரு கிராமத்தில் போய் வேலை செய்வதன்மூலம் மேற்சொன்ன இரண்டு பலன்களையும் ஒருங்கே பெறலாமல்லவா? ஆகவே, நான் கிராமத்தில் குடியேறுவது என்று தீர்மானித்து விட்டேன் என்று கூறிய பிறகுதான் அவளும் ஒரு வகையாக ஒப்புக் கொண்டாள்.

இந்தக் கிராமத்தில்தான் என்ன? ஒரு பெரிய பங்களாவா? அல்லது பார்க்கா? இல்லாவிட்டால்தான் சினிமா, டிராமா ஏதாவது உண்டா? எதுவும் இல்லை. நெடுங்காலமாக நான் ஆசைப்பட்டுக்கொண்டிருந்த 'சர்வ சாதாரண கிராமமாகத்தான் இருக்கிறது. எனக்கு இங்கு வந்து 'பிராக்டிஸ்' செய்ய ஆரம்பித்ததுமுதல் ஏதோ பெரிய குறை தீர்ந்து விட்டதாகத் தோன்றியது. கடந்த பதினைந்து தினங்களுக்குள் இந்தக் கிராமத்தாருடன் எனக்கு மிகவும் நெருக்கிய பழக்கமும் நேசமும் ஏற்பட்டு விட்டது. ஏன்? நானே 'இவர்களில்' ஒருத்தி தானே இப்போதெல்லாம்!

ஒவ்வொரு நாளும் எனக்குக் கிடைத்துவரும் அனுபவங்களை யெல்லாம் கூறப்போனால் அது நீண்ட கதையாகிவிடும். ஆனால் இந்த 'லேடி டாக்டரை'த் தேடி வரும் வியாதியஸ்தர்கள் பெரும்பாலார் கிராமக் குடியானவர்கள், தீண்டாதவர்கள், மிகவும் ஏழ்மை ஸ்திதியில் உள்ள சில உயர் ஜாதியைச் சேர்ந்த (அவர்கள்தான் அப்படிச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்) குடும்பத்தினர்தான். செல்வர்கள் 'டவுனு'க்குப் போய் பெரிய பெரிய டாக்டர்களைப் பார்த்து வருகிறார்கள்.

இங்கு என்னிடம் சிகித்சைக்கு வரும் வியாதியஸ்தர்களில் அனேகருக்கு (அவர்களுடைய வியாதியின் காரணம் என்ன வென்று தெரியவேண்டுமா? பட்டினிதான்) வறுமையின் பிரதிநிதிகளான அவர்களைப் பார்த்த



வுடனேயே உண்மை தெரியவில்லையா? எனும் புக்கூடுகள் உயிர் பெற்று வந்தது போல் தான் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கட்டியுள்ள ஆடை

களைப் பற்றி விவரிக்கவே வேண்டாம். ஏன்? அவர்கள் மானத்தை மறைக்கும் சின்னஞ் சிறு கந்தையைப் பற்றி வர்ணிப்பது கேலி யாகத்தான் முடியும்.

இப்படிப்பட்டவர்களிட மிருந்து பணம் வாங்குவ தெப்படி? இதுதான் எனக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் பெரிய யோசனையா யிருந்தது. ஆனால், அதுவும் இந்த வாரத்தில் ஒரு வகையாகக் கவலைப்படவேண்டிய அவசிய மில்லாமல் போய் விட்டது. எப்படித் தெரியுமா?

இந்த ஊரில் ஒரு கடைக்காரர் இருக்கிறார். அவர் மாதம் ஐம்பது ரூபாய் மானியமாகக் கொடுக்க ஒப்புக் கொண் டிருக்கிறார். இது நான் எதிர் பார்த்ததற்கு அதிகம்தான் இல்லையா? தனி ஒருத்திக்கு இதற்குமேல்—அதுவும் கிராமத்தில் செலவாகுமா என்ன? இதுவரை, அதாவது இன்றுவரை அந்தக் கடைக்காரர் என்னிடம் சிகிச்சைக்குக்கூட வந்ததே யில்லை. ஆனால் அவருடைய சம்஺ாரம் மட்டும் தன்னுடைய மூன்று வயதுக் குழந்தை யுடன் இங்கே தினம் ஒரு தடவை வந்துபோகிறாள். அவள் தான்எனக்குத் தன் கணவர் உதவி செய்வ தாகத் தீர்மா னித் துள்ளார் என்பதைக் கூறினாள். அவ ளிடம் என் வந் தனத்தையும், நன்றியையும் தெரிவித்தே னேயன்றி அவரிடம் தெரி விக்கவில்லை.



அவர் மனைவி சொன்னாள்: 'தேசத்துக்காகப் பல முறை சிறை சென்று வந்தவர் என் கணவர். அந்தக் காலத்தில் பெரிய உத்தியோகத்தை உதறி யெறிந்து விட்டு, சுயநலத்தைப் பாராட்டாமல் தேசத் துக்காகவே தன்னை அர்ப்பணம் செய்ய முன்வந்தவர் அவர். இந்தக் கடையில் கூட அவருக்கு அதிக வருமானம் இல்லை. தவிர இந்த ஊரில் ஒரு சாராருக்கு இவரைக் கண்டாலே பிடிக்காது. இந்த ஆஸ்பத்திரிக்கு வருகிறார் களே ஜனங்கள்—அந்த ஜனங்களுக்குத்தான் அவரிடம் பிடிமானமும் நம்பிக்கையும் உண்டு. இந்த ஊரிலே இரண்டே இரண்டு கடை தான் உண்டு. ஒன்று பல சரக்குக் கடை, மற்றொன்று துணிக்கடை. இரண்டு கடைகளும் எங்களுடையதுதான். எனக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'இப்போது இங்கு வந்திருக்கும் லேடி டாக்டரை ஆதரிக்கவேண்டி யது நம் கடமை. ஆகவே இம்மாதமுதல் நம் செலவைக் குறைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவிசெய்வது—அதா வது 50 ரூபாய் தருவது அவசியமாகும்!' என்றார். நானும் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டேன்!' என்றாள் அந்தப் பெண்மணி.

நானோ வியப்புடன் என்ன பேசுவது என்று கூடத் தெரியாமல் விழித்தேன்.. பிறகு, நன்றி கூறிவிட்டு 'இப் படிப்பட்ட உத்தம புருஷரை ஏன் இந்த ஊரில் சிலர் வெறுக்கின்றனர்?' என்று கேட்டேன். அவள் சொன்ன தாவது: "ஏழை எளியவர்களுக்கு இவர் துணையாக வும் உதவியாகவும் இருக்கிறார்—தீண்டாதாருடன் சகஜ மாகப் பழகுகிறார். வட்டி வாங்காமல் கொடுக்கல் வாங்கல் நடத்துகிறார். கதர் கட்டுகிறார். நூல் நூற்கிறார். கொள்ளை லாபம் அடிப்பேரரையும், ஏழைகளை ஏமாற்றுவோரை யும் கண்டிக்கிறார். இவ்வளவு போதாதா? ஆகவே தான் உயர்ஜாதிக்காரர்கள், இவரைப் பகைக்கிறார்கள்."

"அப்படியா? இன்னும்கூடவா, இந்தக் கிராமம் மூடக் கொள்கைகளி லிருந்து விடுபடவில்லை?"

"இந்தக் கிராமம் என்ன? இன்னும் எத்தனையோ கிராமங்களும்தான்!"

"உங்களுடைய கணவரின் பேர் என்ன வென்று சொன்னீர்கள்?" என்று கேட்டேன் நான். இதற்கு முன் அவள், அவர் பேரைச் சொல்லவே இல்லை. என்ரு லும் நான் மறந்து விட்டது போலக் கேட்டேன். கிராமத் துப் பெண் தன் கணவன் பெயரைச் சொல்லக் கூச்சப் படுவா ளல்லவா?

"அவர் பெயர்—பிரபாகரர்!"

"ஆ! பிரபாகரரா?" என்று நான் ஆச்சரியத்தால் இரைந்து கூவி விட்டேன். அவளோ ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்துவிட்டு எழுந்தாள். நான் எப்படியோ சமாளித்துக் கொண்டு 'அந்தப் பிரபாகரராய்' எப்படி இருக்க முடியும் என்று நினைத்தவளாய்ச் சந்தேகத்துடன் "எந்தப் பிரபாகரர்? உத்தியோகஸ்தரா யிருந்தவர் என்று சொன்னீர்களே" என்று கேட்டேன்.

"ஆமாம், காட்டிலாகாவில் உத்தியோகம் பார்த் தவர்...... டிப்டி கலெக்டரின் மகன். நான் அவருடைய இரண்டாவது மனைவி!"

அவள் மேலே சொன்னதைக் கேட்கவும் முடியாமல் நான் ஸ்தம்பித்து நின்று விட்டேன். நான் எந்தப் பிரபா கரரா யிருக்கலாம் என்று முதலில் நினைத்தேனே அதே பிரபாகரர்தான் இவர்! இவர் எனக்கு உதவி செய்வ தென்பது சற்றுக்கூட எதிர்ப்பார்க்கக் கூடாத விஷயமல் லவா? ஏன்? நம்ப முடியாத காரியம்.

என்னுடைய சிந்தனை அலைகள் சுமார் பத்து வருஷங் களுக்கு முன்பு ஓடின. அப்பொழுது எனக்குப் பதினறு, பதினேழு வயதிருக்கலாம். என் தகப்பனருக்கு நான் ஒரே பெண். என்ருலும் என்னுடைய ஒன்பதாவது

வயதில் நான் ஒருவருக்கு மணம் செய்விக்கப் பெற்றேன். நான் விவரம் அறியும் வயதை அடையும் முன்பு என் கணவராக இருந்தவர் காலமாய் விட்டார். என் தந்தை பிரசித்திபெற்ற சனாதனி. அவர் ஏதோ ஒரு அகில இந்திய ஸ்தாபனத்துக்குக் கூட (சனாதன சம்பந்தமானது தான்) தலைவரா யிருந்தார். தீண்டாதாரைப் பார்ப்பதுகூடப் பாவம் என்று நினைத்த சனாதனி! அவருக்குத் தெரியாத சாஸ்திர சம்பிரதாயங்களே கிடையாதாம். ஒரு நாள் ஏழெட்டு வைதீகர்கள் எங்கள் வீட்டுக்கு ஓடி வந்தார்கள். என் தந்தை விஷயம் என்னவென்று விசாரித்தார். 'யாரோ ஒரு பாஷாண்டிப் பயல் நம் ஊர் கோயிலுக்குள் தீண்டாதாரை அழைத்துப் போகப் போகிறானாம்' என்று கூக்குர லிட்டார்கள் அவர்கள்.

என் தந்தை அந்தக் கூட்டத்தாருடன் வீட்டிலிருந்து புறப்பட்டார். ஊரில் பெரியதனக்காரர் என் தந்தை தான். அவர் வாக்குக்கு எதிர் வாக்கு இல்லை அங்கே. அரைமணி நேரத்துக்கெல்லாம் எங்கள் வீட்டு வாசலில் பிரம்மாண்டமான கூட்டம். அதன் மத்தியிலே மேலெல்லாம் ரத்தம் வடிய இரண்டு மூன்றுபேர் நின்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர்தான் இந்தப் பிரபாகரர்!

குடியானவர்கள், சனாதனிகள், யாவரும் என் தந்தை கட்சி. எனக்கோ இந்தக் கண்ணராவியைப் பார்க்கவே பிடிக்க வில்லை. அப்பாவோ வெற்றி வெறியுடன் "சனாதன விரோதி—தர்ம விரோதி—அவன் தெய்வத்துக்கும் விரோதிதான்" என்று கர்ஜித்துவிட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தார்.

அப்புறம் நான் சமையல் அறையைவிட்டு வெளிக் கிளம்ப முடியுமா? வெளியே நடந்ததென்ன வென்று தெரியவில்லை. இரவு சாப்பிடும்போது என் தந்தை தன் பிரதாபங்களை அம்மாவிடம் சொல்லிக்கொண்டபோது

பின்வரும் விவரத்தைத் தெரிந்து கொண்டேன்; "பிரபல தேச பக்தரும், சமூகச் சீர்திருத்தக்காரருமாகிய பிரபாகரரை என் தகப்பனார் சனாதன தர்மத்தை ரட்சிப்பதற்காகத் தண்டித்து விட்டார்!

அவருடைய குடிசைக்குக்கூட நெருப்பு வைத்து விட்டதாகவும், ஆகவே 'அவன்' கூண்டோடு கைலாசம் போகவேண்டியதுதான் என்றும் அப்பா பெருமையடித்துக் கொண்டார். ஆனால் அவருடைய மனைவிதான் தீயில் சிக்கிவிட்டாள். பிரபாகரர் அவளைத் தப்புவித்துப் பிறகு டாக்டரிடம் காட்டியும் பயன்படாமல் சில தினங்களில் உயிர் நீத்ததாகவும் கேள்விப்பட்டேன்.

அது முதல் எங்கள் குடும்பத்திலும் சனியன் நுழைந்துவிட்டான். அப்பாவுக்கு வந்த வியாதி, அவரை ஆறுமாதம் கொடுமையாக வாட்டிவிட்டு யமனுலகுக்கு அழைத்துச் சென்றது. அம்மாவும் என்னை மாமன் கையில் ஒப்படைத்துவிட்டு அடுத்த வருஷத்திலேயே இறந்து விட்டாள். பிறகு நான் அந்தப் பிரபாகரரைப் பற்றிக் கேள்விப்படவே யில்லை.

என் மாமா ஒருவகையில் முற்போக்கான கொள்கையுடையவர். என் நிலையை அவர் தெரிந்துகொண்டார். என்னுடைய இருபத்திரண்டாவது வயதில் நான் மெடிகல் காலேஜில் சேர்ந்தேன். நாளாவட்டத்தில் பிரபாகரரை மறந்தே விட்டேன். இந்தப் பத்து வருஷங்களுக்குள் எவ்வளவோ மாறுதல். நாடு பூராவும் ஒரே கொந்தளிப்பு. எனக்கோ வைத்தியத் தொழிலில் இருந்துகொண்டே எதாவது சேவை செய்ய ஆசை'

அதன் முடிவுதான் இந்தக் கிராமத்தில் குடியேற்றம். ஆனால் அதிசயத்திலும் அதிசயமாக இங்கே அந்தப் பிரபாகரர்! எந்த மனிதரால் அளவில்லாத துன்பமும் ஈடு செய்ய முடியாத நஷ்டமும் அடைந்தாரோ, அந்த மனிதரின் மகளுக்கு இப்போது ஒப்பற்ற முறையில் உதவி

செய்கிறார். இதை யார்தான் நம்பவோ, அல்லது எதிர் பார்க்கவோ முடியும்?

"என்ன டாக்டர் அம்மா, வாசலிலே ஏகக் கூட்டம், நீங்கள் இப்படித் திகைத்து உட்கார்ந்திருக்கிறீர்களே?'' என்று பிரபாகரரின் மனைவி கேட்ட பிறகு தான் நான் சிந்தனைப் போக்கை ஒழுங்கு படுத்த முடிந்தது. சட்டென்று எழுந்து முகத்தை அலம்பிக் கொண்டு மருந்துகளிருக்கும் அறைக்குச் சென்றேன்.

அதே சமயம் வாசலில் கூடியிருந்த ஜனங்கள் தங்கள் சத்தத்தை நிறுத்திவிட்டு யாருக்கோ மரியாதையுடன் வழி விட்டு நிற்பதைப் பார்த்தேன்.

அவர்தான் தேச பக்தர் பிரபாகரர்!

அவரை நேரில் கண்டவுடன் எவ்வளவோ புகழ்ந்து கொள்ள வேண்டுமென்று நினைத்த எனக்குப் பேசவே முடியவில்லை! அவர் அருகில் வந்ததும் அவருடைய பாதங்களைத் தொட்டுக் கும்பிடக் குனிந்தேன். அதற்குள் அவர் தடுத்து 'நீங்கள் என்னை நமஸ்கரிக்கக் கூடாது. சர்வ சாஸ்திர பண்டிதரின் மகள் நீங்கள். அவர் சாஸ்திர விற்பன்னரானாலும் அதன்படி நடக்காமல் இருந்தார். நீங்கள் நடந்து காட்டுகிறீர்கள். கிராமத்தினருக்கு உங்கள் சேவை அவசியமானது. இந்த நாட்டில் பல பிரபாகரர்கள் இருந்தாலும் எங்கோ ஓர் இடத்தில்தான் — அபூர்வமாக ஒரு சாந்தாதேவியைக் காண முடிகிறது. நான் ஒன்றும் அதிகமாகச் செய்து விடவில்லை. ஆனால் அதிகமாக ஆசைப் படுகிறேன். எதற்குத் தெரியுமா? உங்களைப்போல் பல 'சாந்தாதேவிகளை' நமது சமுதாயத்தில் காணவேண்டுமென்பதற்குத்தான்' என்று அவர் வினயமாகச் சொன்னபோது பதில் சொல்லத் தெரியாமல் திணறிக் கொண்டே அவரை வணங்கி வரவேற்றேன்.

'என் மனைவி தங்களுக்கு உதவியா யிருப்பாள் என்று நம்புகிறேன். உங்களுக்கு ஆச்சரியமா யிருக்க

லாம், வைரம் பாராட்டாமல் நான் உதவி செய்ய முன் வந்ததைப் பற்றி; ஆனால் நீங்கள் அப்படி நினைப்பது தவறு; நான் கடமையைச் செய்கிறேன். தங்கள் தகப்பனார் எனக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணினார். ஆனால் அவர் நூற்றுக் கணக்கான பேர்களுக்கு மகத் தான உபகாரம் செய்து விட்டார்! என் முதல் மனைவி அவருடைய சினத்துக்குப் பலியானாள். அதற்குப் பதி லாகத் தன் மகளை இந்தப் பாதுகல சேவைக்குத் தந்து விட்டார்!

"அவர் மனம் விரும்பியதோ இல்லையோ—அது வேறு விஷயம். ஆனால் எங்களிடையே வந்திருக்கும் நீங்கள் அவர் மகள்தானே? உங்கள் உத்தம சேவையால் அவரு டைய தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்கிறீர்கள், இல்லையா?" என்று அவர் கேட்டதும் நான் மௌனமாகப் பெருமூச்சு விட்டேனேயன்றிப் பதில் சொல்லவில்லை. மனுஷ ஜாதியிலே இவரைப் போன்ற உத்தம புருஷர் ஆயிரத்தில் ஒருவராவது உண்டா?

"சென்றதை மறந்துவிடுதல்தான் நமக்கு நன்மை. என்னைப்போன்ற தேச சேவகர்களுக்கு 'அவைகள்' எல்லாம் சகஜம். அதற்காக மனம் கலங்கிக் கடமையில் தவறிவிட முடியுமா என்ன? ஆனால் ஒன்று. கடந்த பத்து வருஷங்களுக்குள் தங்கள் தகப்பனாரைப் போன்ற பேர்வழிகளின் தொகை மிகவும் குறைந்து விட்டது. ஆனாலும் உங்களைப் போன்ற நோக்கமுடையவர்கள் ஒரு சிலர்தான் புறப்பட்டிருக்கிறார்கள். என் மனம் மட்டும் என்னமோ இன்னும் திருப்தி அடையவில்லை. இதே கிராமத்தில் உங்கள் சேவை நீடித்திருக்கவும், உங்கள் லட்சியத்திற் கேற்றவாறு ஒத்துழைக்கவுங்கூடிய ஒரு வரை—நீங்கள் மணம்செய்து கொள்ளவேண்டும் என் பதுதான் என் அவா! என்ன, இப்படிப் பார்க்கிறீர்கள்? எனக்கு உடன் பிறந்த சகோதரி இல்லை. அதற்குப்

பதிலாக நீங்கள்" என்று அவர் சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டு, பதில் எதிர்பாராமல் புறப்பட்டுவிட்டார்.

அப்புறம் கூட என்னால் பேசமுடிய வில்லை. அவர் புறப்படும்போது ஒரு வந்தனமளிக்கக்கூட வகையில்லாது பிரமையடைந்தபடி வெகுநேரம் அவர் செல்லும் திக்கைப் பார்த்தபடியே நின்றுகொண் டிருந்தேன்.

✲

பெண் என்பவள் தியாகத்தின் அழகிய உருவம். வாழ்வை முழுமையாக்க வரும் தெய்வம். என் உயிர் போனாலும் போகட்டும், குழந்தையைக் காப்பாற்றுங்கள் என்ற சொல் தாய் ஒருத்தியின் வாயிலிருந்து வரும்.

# ஜப்பானிய மங்கையர்



ஸ்ரீ வை. குஞ்சு

தனது அடாத செய்கையினால் அடிபட்டு, மிதிபட்டு, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுக் கிடக்கும் தேசம் ஜப்பான். நமது நாட்டைப்போலவே ஜப்பானும் பழங்காலச் சரித்திர மேன்மை உடையது. சுமார் எண்பது வருடங்களுக்குள்ளாகத்தான் ஜப்பானில் ஒரு புத்துணர்ச்சி உண்டாகி நவநாகரிக ஏணியில் மேலை நாடுகளுக்குச் சரிநிகர் சமானமான ஸ்தானத்தை அடைந்தது. ஆனால் ராணுவ வெறியும், ஏகாதிபத்திய ஆசையும் அதன் அழிவுக்குக் காரணங்களாயின.

அதன் பழைய சரித்திரத்தைச் சற்று ஆராய்ந்தால் ஜப்பான் தேசத்தின் வளர்ச்சிக்கு ஸ்திரீகளே முக்கிய காரணம் என்பது தெளிவாகும். பிறந்த வீட்டைவிட வாழ்க்கைப்பட்ட குடும்பத்தின் பெருமையைக் கௌரவிப்பதிலோ, கணவனிடம் விஸ்வாஸமாயிருப்பதிலோ, குழந்தைகள் வளர்ப்பிலோ ஜப்பானிய ஸ்திரீக்கு விசேஷ ஆர்வம் உண்டு. ஜப்பானிலே கண்மூடித்தனமான கொள்கைகள் தாண்டவ மாடின. அந்தக் காலத்தைப் போலவே இன்றும், குடும்ப மானத்தைக் காக்க வேண்டும் என்ற உணர்ச்சியோடு, வாழ்வைவிட மானத்தையே பெரிதாகக் கருதி உயிரைத் தியாகம் செய்யும் பெண்கள் உண்டு.

ஒவ்வொரு ஜப்பானியப் பெண்ணுக்கும் பள்ளிக்கூடத்திலேயே குடும்ப நிர்வாகம் ஒரு கட்டாயப் பாட

மாகக் கற்றுக்கொடுக்கப் படுகிறது. ஆனல் அவள் விரும்பினல் வேறு கடினமான தொழில்களிலும் பிரவேசிக்கலாம். அதிகாலேயில் விழித்தெழுந்து நள்ளிரவு வரையில் பாட்டாளிப் பெண்கள் உழைக்கிருர்கள். ஆடவர்களைப் போலவே தாங்களும் உழைக்க முடியும் என்பது அவர்கள் கருத்து. ஜப்பானியச் செம்படவப் பெண்கள் கடலின் ஆழத்தில் மூழ்கிச் சங்கு, சோழி, கிளிஞ்சல் முதலியவைகளே வாரிக்கொண்டு வந்து குவிப்பார்கள். பிறகு அவைகளே விற்பனே செய்வார்கள். இது எவ்வளவு கஷ்டமான தொழிலானுலும் ஆண்களேவிடப் பெண்களே இத்தொழிலில் அதிகம் ஈடுபட்டிருக்கிருர்கள். பொதுவாகச் சொல்லுமிடத்து நீச்சுத் திறமையில் ஜப்பானியப் பெண்களுடன் போட்டி போடத் தகுதி உள்ளவர்கள் வேறு நாட்டில் கிடையவே கிடையாதென்று சொல்லி விடலாம்.

ஜப்பானிய ஸ்திரீகளின் கலேப்பண்புகளேப் பற்றிக் கவனிப்போம். ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே பல கலேகளிலும் ஸ்திரீகள் முதன்மையாக இருந்திருக்கிருர்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. பல நூற்ருண்டுகளுக்கு முன்னர் அரசாங்க இலாகாவில் பெரும்பான்மையான பெண்கள் சேவகம் செய்தார்கள். அந்தந்தக் காலத்துச் சக்கரவர்த்திகள், ரகசியமாகவோ, பொதுவிலோ, என்னென்ன செய்துவந்தார்கள், பேசினர்கள், அவர்கள் குணதிசயங்கள் என்ன என்பவற்றை எழுதி வைப்பது அவர்கள் வழக்கம். அப்படி எழுதிவைத்த அனேகம் குறிப்புக்களே, 'அரண்மனே அந்தரங்க விவரங்கள்' என்றும், பரம்பரைப் பொருளென்றும் வெகு ஜாக்கிரதையாக ஜப்பானியர் காப்பாற்றி வருகிருர்கள்.

அந்நாளேய ஜப்பானியச் சரிதத்தில்கூட, 'வாகா,' என்னும் முப்பத்தொரு சீர்கள் அடங்கிய ஜப்பானியச் செய்யுட்களேப் பெண்களே அழகுறப் பாடியிருக்கிருர்கள்

No. 104397


என்பது தெரியும். சாதாரணமாக முன் காலங்களில் ஆண்களும் பெண்களும் கவிதைகள் எழுதித் தமாஷாக ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வார்கள். சமஸ்தானக் கவிஞர்களில் பெரும்பாலோர் பெண்கள். இன்றுங்கூட ஜப்பானியச் சிறுவர் சிறுமியர்களுக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் பாடசாலைகளில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. மேதா விலாசத்தில் ஜப்பானிய ஸ்திரீ அத்தேசத்து ஆடவனுக்குச் சமமானவள்தான்.

ஸ்ரீமதி முரசாகி ஷிகிபு எழுதிய 'ஜென்சியின் சரிதமும்' ஸ்ரீமதி செய்ஷொனுகான் எழுதிய, 'மகுரனே சோஷி' என்ற இலக்கியக் குறிப்புக்களும் சிறந்த நூல்களாகும். அவர்கள் இருவரும் நல்ல அந்தஸ்தை உடைய பெண்மணிகள். ஜப்பானிய இலக்கியத்திலேயே மேலே குறிப்பிட்ட இருநூல்களும் மிகவும் உயர்ந்தவைகளாகக் கருதப்பட்டுப் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட் டுள்ளன.

முரசாகி ஷிகிபுவைப்போல நாவல் எழுத வல்ல ஒரு பெண்மணி அவளுடைய காலத்தில் உலகில் வேறெங்குமே இருந்திருக்க முடியாது என்பது ஜப்பானியர்களின் நம்பிக்கை. உலகத்தில் எந்தத் தேசத்து இலக்கியங்களை எடுத்து ஆராய்ந்தாலும், 'ஜென்சி சரித'த்துக்கு நிகரான நூலை எந்தப் பெண்மணியும் எழுதியிருக்க முடியாது என்று பிரபல ஜப்பானிய விமர்சகரான கெங்கிசி இகிஷிமா கூறுகிறார்.

இனி நாடகத் துறையைக் கவனிப்போம். நானூறு வருடங்களுக்கு முன்பு அஷிகாகா சகாப்தத்தில் ஒரு பிரபல நடிகை யிருந்தாள். அவள் பெயர் இசுமோ-நோ-ஒகுனி. அவள் 'ஒகுனி கபூகி,' நாடகத்தில் அற்புதமாக நடித்துப் பெயர் வாங்கினாள். இன்றும் ஜப்பானில், 'கபூகி,' நாடகம் அவள் காட்டிய வழியிலேயே பின் பற்றி நடத்தப்படுகிறது. அவளுடைய காலத்தில் கிழக்கத்தி

நாட்டில் எந்தப் பகுதியிலும் ஒரு ஸ்திரீ நடிகை மேடை யேறி நடித்ததாகத் தெரியவில்லை. கலையிலும், இலக்கியத் திலும் ஜப்பானிய ஸ்திரீகள் அந்தக் காலத்திலிருந்தே திறமை பெற்று விளங்குகிறார்கள் என்பதற்கு இவைகளே சிறந்த உதாரணங்கள்.

இந்த நாட்களில் ஒரு ஜப்பானியப் பெண்மணி பொது வாழ்வில் ஈடுபட்டுத் தன் திறமையைக் காட்ட முற்படும் பட்சத்தில் ஒருவரும் இடையூறு செய்ய மாட்டார்கள். பர்மாப் போர்க்களத்தில்கூட ஜப்பானிய ஸ்திரீகள் ஈடுபட் டதாகச் சமீபகாலச் செய்திகளி லிருந்து தெரிந்து கொண் டோம். ஜீஜிட்சு நடனம், ஈட்டி எறிவது இவைகளில் அவர் கள் விசேஷப் பிரியங் காட்டுவார்கள். ஸ்ரீமதி மோகதா என்ற ஜப்பானியப் பெண் லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த அகில உலக நீச்சுப் போட்டியில் இரண்டாவது பரிசைப் பெற்றாள் என்பது உலகப் பிரசித்தம். ஏதோ அபூர்வ மாகத்தான் ஜப்பானியப் பெண்கள் தலையெடுத்து விளங்கு கிறார்கள் என்று மற்றவர்கள் நினைக்கலாம்.—ஆனால் உண்மை அப்படி இல்லை. பழங்காலத்தி லிருந்தே ஜப்பா னியப் பெண்மணிகள் பெருமை தரும் பல துறைகளி லும் ஈடுபட்டுப் புகழடைந்ததாக அந்நாட்டு இலக்கியங் களி லிருந்தும், சரித்திரத்தி லிருந்தும் புலனாகிறது. ஜப்பா னியச் செம்படவச் சிறுமிகள் அக்காலத்தி லிருந்தே நீச்சுக் கலையில் வல்லவர்கள் என்று அவர்கள் புராணங் கள் சொல்லுவதை நம்பப்பிரியமில்லாதவர்கள் நேரில் போய்த் தெரிந்து கொள்ளலாம். முடிவாகச்சொல்லு மிடத்து ஒரு ஜப்பானியப்பெண், தன்னைவிட்டால் நிக ரில்லை யென்று தம்பட்டமடிக்கும் மேலைநாட்டுப் பெண்களில் எவளுக்கும் இளைத்தவள் அல்ல என்பது கண்கூடு.

✱

# அறுசுவை



தீபிகா

நாம் சீக்கிரமாக ஒரு தித்திப்புப் பட்சணம் செய்ய வேண்டுமானல் உடனே ரவா கேசரியைக் கிளறுவோம். கோதுமை, பாதாம் முதலிய அல்வா தினுசுகளை நாம் பண்டிகைப் பருவங்களிலும், கல்யாண காலங்களிலும் செய்கிறோம். இப்பொழுது ரவை, கோதுமைதான் அகப்படுவதில்லையே! சுலபமாகவும் அதிகச் செலவு இல்லாமலும் செய்யக்கூடிய அல்வா தினுசு ஒன்று சொல்லுகிறேன்.

### நேந்திரம் பழ அல்வா

நேந்திரம் பழத்தின் உற்பத்தி ஸ்தானம் மலையாளம். இப்பொழுது நமது ஊரிலேயே அதிகமாகவும் மலிவாகவும் கிடைக்கிறது. நேந்திரம் பழ அல்வா உடம்புக்கு மிகவும் நல்லது. வயிற்றுப் புண், பூச்சி முதலியவைகளைப் போக்குகிறது. இதர அல்வாக்களைப் போல் மந்தத்தை உண்டுபண்ணுமல் மந்தம் இருந்தாலும் அதைப் போக்கி வயிற்றைச் சுத்தப்படுத்துகிறது.

### செய்யும் விதம்

இந்தப் பழம் நன்ருகக் கனிந்ததாக இல்லாவிட்டால் கொஞ்சம் புளிப்பு இருக்கும். ஆதலால் நன்ருகப் பழுத்ததாகப் பொறுக்கி, பெரியதாக இருந்தால் மூன்றும், சிறிய

தாக இருந்தால் நான்கும் எடுத்து நறுக்கி வேகவைத்துக் கொள்ள வேண்டும். பழம் நன்ருக வெந்தால் தானகவே மேல் தோல் உரிந்து வரும். அந்தப் பழத் துண்டுகளின் தோலை நீக்கி வாயகன்ற பாத்திரத்தில் போட்டு நன்ருகப் பிசைய வேண்டும். கட்டி இல்லாமல் நன்ருகச் சேர்ந்து வரும் வரை பிசைந்து பிறகு 15 பலம் சர்க்கரையைப் பாகு காய்ச்சிக் கொள்ள வேண்டும். நல்ல கட்டிப்பாகு வந்ததும் பழத்தை அதில் சேர்த்து கைவிடாமல் அதை நன்ருகக் கிளற வேண்டும். இரண்டும் சேர்ந்து நன்ருகக் கொதிக்க ஆரம்பித்ததும் கம் என்று வாசனை வரும். அல்வா கெட்டியாகி வரும்பொழுது பாத்திரத்தில் ஒட்டாதிருக்கும்படி ஒரு சிறிய கிண்ணத்தில் 5 பலம் அளவு இருக்கும் நெய்யை விட்டுக் கிளறவேண்டும். இறக்கும் பதம் வந்தால் பாத்திரத்தில் ஒட்டாமல் கரண்டியோடு சுழன்று வரும். பார்வைக்கும் நன்ருகச் சிவந்து கோதுமை அல்வா மாதிரியே இருக்கும். பிறகு ஏலப்பொடி, கேஸரிப் பவுடர், கொஞ்சம் குங்குமப்பூ இவைகளை அத்துடன் சேர்க்கவும். தட்டில் மெல்லியதாகவும் நீளமாகவும் முந்திரிப் பருப்பை நறுக்கி நன்ருகப் பரப்பி வைத்து அல்வாவை அதன்மேல் கொட்டிக் கரண்டியினல் சமமாகச் செய்து விடவும். பத்து நிமிஷம் கழித்துத் துண்டு போட்டால் பில்லைகளாக வரும். பிறகு சாப்பிட்டுப் பார்த்து ருசியைச் சொல்ல வேண்டியதுதான்.

### செல்வரப்பம்

இது இப்பொழுதும் ஸ்ரீரங்கம் பெரிய கோவிலில் செய்யும் பிரசாதங்களில் முதல் ஸ்தானம் பெற்றது. ஸ்ரீ ரங்கநாதருக்கு முதல் மந்திரியான செல்வருக்கு முதல் நிவேதனம் இந்த அப்பம்தான். அதனல்தான் இதற்குச் செல்வரப்பம் என்று பெயர் வழங்குகிறது என்றும் தோன்றுகிறது. நடைமுறையில் செல்லூரப்பம் என்று சொல்லு

கிறார்கள். ஸ்ரீரங்கம் போனால் ரங்கநாதரைச் சேவிப்பதற்கு முன் செல்வரப்பத்துக்குச் சொல்லி வைத்துவிட்டுத் தான், பிறகு கர்ப்ப கிருஹத்துக்கு போவார்கள். ஏன் என்றால் திரும்பி வருவதற்குள், பட்சணத்தை எனக்கு உனக்கு என்று போட்டி போட்டுக்கொண்டு வாங்கி விடுவார்கள். அதனுடைய அதிமதுரமான ருசி ஒரு பக்கம் இருக்க, சாமான் கிடைக்காத இந்த நாளில், அரிசி யில் செய்யக்கூடிய ருசியான பட்சணம் என்று இதற்கு நாமும் கொஞ்சம் உயர்வைக் கொடுக்கலாம்.

### செய்யும் முறை

அரைப்படி அரிசியை ஜலத்தில் ஊறவைத்து மாவு இடித் துக் கொள்ளவும். மாவைச் சலித்து பிறகு மிகுந்து இருக் கும் கப்பியில் ஒரு கை அளவு நிறுத்தி வைத்துக் கொள்ள வும். நாளை அப்பம் செய்யவேண்டும் என்றால் இன்றைக்கே மாவை இடித்துச் சலித்து அந்த மாவைக் கொஞ்சம் ஜலம் தெளித்து, கலந்து ஒரு பாத்திரத்தில் அமுக்கி வைத்துவிட வேண்டும். மறுநாள் அந்த மாவு கொஞ்சம் புளித்திருக் கும். மிகுதியாக வைத்திருக்கும் அரிசிக் கப்பியை கூழ் மாதிரியாகக் காய்ச்சி இந்த மாவில் விட்டுப் பிசைய வேண் டும். மாவுக்குத் தகுந்தமாதிரி, கொஞ்சமாகக் கூழை விட வேண்டும். அதிகமாகக் கூழை விட்டால், அப்பம் கெட்டியாகவும், கடினமாகவும் போய்விடும். 2 பலம் நெய்யையும் விட்டு, தகுந்த அளவு உப்பும் ஒரு மேஜை— கரண்டி அளவு மிளகைச் சுமாராக பொடி செய்து அதை யும் சேர்த்து நன்றாகப் பிசைய வேண்டும். மாவு தளர்ந்து மொத்தையாக வராவிட்டால் ஜலம் விடாத கெட்டியான தேங்காய்ப் பாலை விட்டுப் பிசையலாம். தேங்காய்ப் பால் சேர்த்தால் மிகவும் கரகரப்பாக இருக்கும். முழுவதும் நெய்யையே வைத்து அப்பத்தைப் பொரித்து எடுக்க முடியுமானால் மிகவும் நல்லது. அல்லது இரண்டு

பங்கு நெய்யும், ஒரு பங்கு எண்ணெயும் கலந்து வைக்கலாம்.

கலந்து வைத்திருக்கும் மொத்தை மாவில் எலுமிச்சங்காய் அளவு எடுத்து ஈரத்துணியில் வடை மாதிரி தட்டிக் காய்ந்த எண்ணெயில் போட்டுச் சிவப்பாகப் பொரித்து எடுக்கவும்.

அப்பத்தைக் கொஞ்சம் பருமனாகத் தட்டினால் 'உப்பி' வரும். அது கொஞ்சம் மிருதுவாக இருக்கும். இரண்டு மூன்று நாள் வைத்துக்கொள்ள வேண்டுமானால் கொஞ்சம் மெல்லியதாகத் தட்டி வேகவைத்துக் காற்றுப்படாமல் பித்தளைச் சம்புடத்திலோ, கண்ணாடி ஜாடியிலோ போட்டு மூடி வைத்தால் கரகரப்பாக நன்றாக இருக்கும்.

*

## முள்ளும் மலரும்

பிரபல ஆங்கிலக் கவிஞரான மில்டன் கண்ணிழந்து குருடரான போது, ஒரு பெண்ணை மணந்து கொண்டார். ஒரு முறை அவர்கள் வீட்டுக்குப் போயிருந்த ஒரு நண்பர், அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து அதிசயித்து, " உம்முடைய மனைவி ரோஜாப் பூவைப்போல் செக்கச் செவேலென்று இருக்கிறாள் " என்று மில்டனிடம் கூறினார்.

மில்டன் சிரித்துக் கொண்டே, " அவள் செவேலென்று இருக்கிறாளோ, கறேலென்று இருக்கிறாளோ எனக்குத் தெரியாது. மலரைப் பார்க்க என்னால் முடியவில்லை. ஆனால் அதன் முட்கள் சுறுக் சுறுக் கென்று குத்துவது மாத்திரம் எனக்குத் தெரிகிறது " என்றார்.

# குடும்ப வாழ்க்கை

நந்தினி

பிரியமுள்ள பத்மாவதிக்கு,

க்ஷேமம். உன் கடிதம் வந்தது. "சமையல் செய்யக் கற்றுக்கொள்ளுகிறேன். சுலபமாக வருகிறது" என்று எழுதி இருக்கிறாய். படிக்கச் சந்தோஷமாக இருக்கிறது. அக்கரையுடன் செய்தால் எல்லா வேலையும் சுலபம். அக்கரை இல்லாவிட்டால் எல்லாம் கஷ்டம்தான்.

"ஒரு சின்ன மீனைச் சமைப்பதைப் போல் ஒரு ராஜ்யத்தை ஆளவேண்டும்" என்று ஒரு சீன தேசத்து அறிஞர் கூறினாராம். சிறிய மீனைச் சமைப்பது மிகவும் நுட்பமான வேலை. நமது முழுக் கவனமும் அதில் இருக்கவேண்டும். அதேபோல் ராஜ்யம் ஆளுவதும் மிக நுட்பமான வேலை; நமது முழுக்கவனமும் அதற்கு வேண்டும் என்பது அவர் கருத்து. நானும் "ஒரு ராஜ்யம் ஆளுவதைப்போல் உன் வீட்டுச் சமயல் வேலையைச் செய்" என்று உனக்குப் புத்திமதி சொல்லலாம். ஆனால் எனக்கு முன்பே பலர் இந்த யோசனையைச் சொல்லி நீ கேட்டிருப்பாய். "குடித்தனமா, துரைத்தனமா?" என்று பாட்டி அடிக்கடி சொல்வதை நீ கேட்டிருப்பாய். குடித்தனத்தில் முக்கிய அம்சம் சமையல். ஆகையால் அந்த வேலையில் உனக்குப் நல்ல கருத்து இருக்க வேண்டும்.

சமையலில் நல்ல கருத்து இருக்க வேண்டும் என்று நான் சொன்னதற்குப் பொருள், எப்போதும் ஏதாவது சமைத்துக்கொண்டேயும் சாப்பிட்டுக்கொண்டேயும் இருக்கவேண்டு மென்பதல்ல. உன்னுடைய காலம், கருத்து இரண்டையும் சமையல் வேலையிலேயே கழிக்க வேண்டும் என்பதும் அர்த்தமல்ல. சில பெண்களுக்கு

அடுப்பங்கரையை விட்டுவிட்டு வர இஷ்டமிராது. சதா ஏதாகிலும் பட்சணம், பலகாரம் செய்துகொண்டே இருப்பார்கள். ஆனால் அவ்விதம் அவர்கள் செய்வதனால் வீட்டில் பிறருக்கு நல்லது செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இவர்கள் அடிமை போல் சதா உழைக்க, பிறர் இவர்கள் செய்வதை மிதமிஞ்சிப் புசித்துவிட்டு அஜீரணத்தினாலும், வயிற்று நோயினாலும் கஷ்டப்பட வேண்டி நேரிடும். தென்னிந்தியர்களாகிய நமது சமையல் வகையே எளிய வகையல்ல. இரண்டு கறி, குழம்பு, ரஸம், பச்சடி, இரண்டுவித ஊறுகாய்கள் ஆகிய எல்லாமும் ஒரு சாதாரணக் குடும்பத்தின் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு வேண்டியிருக்கிறது.

இவ்விதம் பலவகை உணவில், கூடியவரை காய் கறிகளைச் சமைக்காமல் பச்சையாகவும், பச்சடிகளாகவும் உண்பதை நாம் அதிகரித்துக் கொண்டால் நல்லது என்று சுகாதார நிபுணர்களும் சர்க்காரும் இடைவிடாது நமக்குப் போதித்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைக் கவனித்து, சமையல் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது பெண்களாகிய நம்முடைய பொறுப்பு.

"எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் தேவை" என்று பெரியோர் சொல்வது உனக்குத் தெரிந்ததே. தினசரி வாழ்க்கையைக் கூடியவரை சுலபமானதாகச் செய்து கொண்டாலே உயர்ந்த சிந்தனைகள் புரிவதற்கு நமக்காகட்டும், நமது வீட்டிலிருக்கும் புருஷர்களுக்காகட்டும், காலம் கிடைக்கும்.

அமெரிக்க தேசத்தில் ஒரு அம்மாளின் ஐந்து குழந்தைகளும் மிகப் பிரபலஸ்தர்களாகிப் பெரிய கீர்த்திவான்களாக விளங்கினார்களாம். அந்த அம்மாள் இருந்த ஊரின் சர்வகலாசாலை அதிகாரிகள், இவ்விதம் பிள்ளைகள் மேதாவிகளாக இருப்பதற்குக் காரணம் தாயாரின்

வளர்ப்புமுறையே என்று தெரிந்து அந்த அம்மாளுக்கு "டாக்டர்" என்ற பட்டம் அளித்தார்களாம். பத்திரிகை நிருபர் ஒருவர் அந்த அம்மாளைப் பேட்டி கண்டு, "உங்கள் குழந்தைகளை எப்படி வளர்த்தீர்கள்?" என்று கேட்டதற்கு "வீட்டு வேலையையும் சமையலையும் குறைத்துக் கொண்டு குழந்தைகள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துவேன்" என்றாராம். அனேகம் பெண்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக எண்ணி, வீட்டில் பண்டங்களை நிரப்பிக்கொண்டு அதைப் பாதுகாப்பதிலும் துடைத்து வைப்பதிலும் காலத்தைக் கழிக்கிறார்கள், வேறு சிலர் குழந்தைகள்பேரில் கொண்டிருக்கும் தவறான அருமையால் தூண்டப்பட்டு அவர்களுக்கு பட்சணங்கள் செய்து கொடுப்பதிலும், பிறகு அடிக்கடி வரும் நோயைப் பாதுகாப்பதிலுமே காலத்தைக் கழிக்கிறார்கள்.

உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு மூளைக்குக் கல்வியும், ஆத்மாவுக்கு நல்ல பழக்க வழக்கங்களும் அவசியம். ஆகையால் உன்னுடைய தினசரி வாழ்க்கையில் இந்த மூன்றுக்கும் இடம் அமைத்துக்கொள். ஏதாவது ஒன்றையே பெரிதாகச் செய்துகொண்டு விடாதே. கிறிஸ்தவர்களின் வேதப் புத்தகத்தில் மார்த்தாள், மரியாள் என்ற இரண்டு சகோதரிகளைப் பற்றின கதை ஒன்று இருக்கிறது. அதை நீ படித்திருக்கிறாயா? ஏசுநாதரும் அவருடைய சீடர்களும் வீட்டுக்கு வந்த சமயம் மார்த்தாள் விருந்தினருக்கு உபசாரம் செய்வதிலேயே காலம் கழித்தாள். அவளுக்கு நிற்கவும் பொழுதில்லை. பதார்த்தங்களைச் சேர்ப்பதும், சமைப்பதுமாக இருந்தாள். ஆனால் மரியாள் ஏசு நாதர் காலடியில் உட்கார்ந்து அவர் கூறும் உபதேசத்தைக் கவனிப்பதிலேயே ஊன்றி இருந்தாள். ஏசுநாதர் மார்த்தாளைக் கண்டித்து, மரியாள் செய்ததே ஏற்றது என்று சிலாகித்தார்.

கிராமங்களில், அதுவும் நல்ல செழுமையுள்ள நீர்ப் பாய்ச்சல் கிராமங்களில், அக்கிரகாரங்களி லிருக்கும் பெண்களுக்குச் சமையல் வேலையே வாழ்க்கை முழுவதும் என்று ஏற்பட்டு விடுவதை நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு வீட்டிலும் அத்தை, பாட்டி என்று உறவினா இருப்பார்கள். காய்கறிகள் தோட்டத்திலிருந்து வரும். அவைகளைச் சமைப்பதற்கென்று வீட்டு அம்மாள் ஒன்றைப் பொறுக்குவார். அத்தை உடனே, "பாங்கிக் கொட்டை இளசாக இருக்கு, அதையும் செய்" என்பார். பாட்டி, "பாகற்காயை நாளைக்கென்று வைத்திருந்தால் அது பழுத்துவிடும்" என்பார். இவ்விதம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகச் சேர்த்து நாலைந்து வகைக் கறி, கூட்டு எல்லாம் சமையல்செய்து, இவர்கள் சாப்பிட்டாகப் பகல் ஒரு மணியாகிவிடும். அதற்குமேல் உடனேயே அடை, தோசை ஏதாகிலும் செய்ய ஆரம்பிப்பார்கள். பிறகு மறுதினத்துக்கென்று இட்டிலிக்கு அரைத்து வைப்பார்கள். பிறகு ஊறுகாய்கள் தயாரிப்பார்கள். பின்னர் இரவில் சமைத்துச் சாப்பிடுவார்கள். இடையில் உளுந்து, பயறு உடைப்பது, புளியங்கொட்டை எடுப்பது, இலந்தை வடாம், கறி வடாம் இவைகள் செய்வது என்று ஏதாகிலும் சாப்பாடு சம்பந்தமான வேலை இருக்கும். கோகுலாஷ்டமி, ஆவணி அவிட்டம் முதலிய பண்டிகைகள் வந்தால் மூன்று நாட்கள் முயன்று பலகார பட்சண வகைகள் தயாரிப்பார்கள். பிறகு இவ்விதம் ஏராளமாகத் தயாரித்தவைகளைச் சாப்பிட அவகாசம் கிடைக்காமல் இரவு பத்து மணிக்குமேல், வழக்கமான இராப்போசனம் உண்ட பிறகு, தட்டு நிறையப் பட்சணத்தை வைத்துக் கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து தின்பார்கள். இவர்களுடைய வாழ்க்கையைப் பற்றினவரை "சர்வம் அன்னமயம் ஜகத்" என்பது மிகப்பொருத்தமாக இருக்கும். இவ்விதமானவர்களின் குழந்தைகள் அரைப் பைத்

தியங்களாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடியதே. நான் கண்டவரை சில முழுப் பைத்தியங்களாகக் கூட இருக்கின்றன.

இதற்கு நேர்விரோதமாகச் சில நாகரிகப் பட்டணத்துப் பெண்கள் இருப்பதையும் நான் கண்டிருக்கிறேன். அவர்களுக்குச் சமைப்பதென்றால் மிகவும் சோம்பல். ஹோட்டலிலிருந்து மாற்றிக்கொண்டு வரும்படி ஏவுவார்கள். இவர்கள் வீட்டுக்கு வேண்டிய அப்பளம், வடாம், சாம்பார்ப் பொடிகள் எல்லாவற்றையும், "காசை வீசி எறிந்தால் தானே கிடைக்கிறது." என்று பெருமையாகக்கூறிக் கடையில் வாங்கிக்கொள்ளுவார்கள். ஏதாவது ஒரு தினம் அசௌகரியமாக இருந்தால் ஹோட்டலிலிருந்து சாப்பாடு தருவிப்பது என்பது போய், மாதம் முழுவதும் ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுச் சினிமா, டிராமா பார்ப்பதிலும், வம்பு பேசுவதிலும் தங்கள் காலத்தைக் கழிப்பார்கள்.

நீ இந்த இரண்டு கோடிக்கும் செல்லமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். நமக்கு வேண்டிய சமையலையும் சமையலுக்குச் சாதகமான அப்பளம், ஊறுகாய் வகைகளையும் நாமே ஓரளவு தயார்செய்து கொள்வது தான் நல்லது. அவைகளைக் கடையில் வாங்குவது அனுசார முறை. அனுசார முறை என்று நான் கூறுவதற்குக் காரணம், கடைகளில் விற்கப்படும் பதார்த்தங்கள் பலவித வருணத்தாரால் சுகாதாரமற்ற, சுத்தமற்ற முறையில் தயாரிக்கப் படுகின்றன என்பதல்ல. வருண வித்தியாசத்தை நான் கருதவில்லை. ஆனால் நம்முடைய வேலையை நாம் செய்து கொள்ளாமல் பிறர் செய்வதை வாங்கிக்கொள்வது நமது ஆத்ம வளர்ச்சியைத் தடுத்துவிடும், கெடுத்தும் விடும். அதனாலேயே அவைகளை வாங்குவது தவறு என்கிறேன். மேலும் அவ்விதப் பதார்த்தங்கள் நமது ஆகாரத்துக்குத் துணைக்கருவிகளே. முக்கிய ஆகாரம் அல்ல.

அவைகளை நம்மால் தயாரிக்க முடியாத அளவில் நிறைய வாங்கி நமது நாக்கின் ருசியை வளர்த்து நமது குண வளர்ச்சியைக் குறைத்துக்கொள்வது மிகவும் தவறு.

நான் கூறியிருக்கும் மேற்சொன்ன விஷயங்களைக் கவனத்தில் வைத்து, உன்னுடைய தினசரி காலமாகிய 24 மணி நேரத்தில் சமையலுக்கும் சமையலைச் சேர்ந்த வேலைக்குமாக ஓரளவு காலத்தைப் பங்கிடு செய்துகொள் வாயென்றும், நல்ல சமையல் செய்வாய் என்றும் நம்பு கிறேன்.

உன் அம்மா

நந்தினி

✻

### காதலின் கேள்வி

அருவிகள் ஆற்றில் கலக்கின்றன; ஆறுகள் கட லில் கலக்கின்றன; வானில் வீசும் மென்காற்று இன்ப உணர்ச்சியுடன் கலக்கின்றது. உலகத்தில் ஒன்றும் தனிமையில் வருந்தவில்லை. தெய்வ நியதியால் சகல வஸ்துக்களுமே ஏதோ ஓர் உணர்ச்சியில் சந்தித்துக் கலக்கின்றன. நானும் ஏன் உன்னுடன் ஐக்கியமடைய லாகாது?

—ஷெல்லி.

# களங்கீன்

எம். எஸ் கமலா

ஸ்ரீதரன் தன் அறையில் அன்று ஆசிரியர் ஆனந்த ராவ் சொன்ன விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தபடி அமர்ந் திருந்தான். மத்தியானம் இரண்டு மணிக்குக் கலாசாலையை விட்டு வந்தவன் எழுந்து வராமல் அறையுடன் அறையப் பட்டப் பதுமையைப் போல் வீற்றிருப்பதைப் பார்த்த அவன் தாய், "ஸ்ரீதரா! உடம்பிற் கென்ன? ஒன்றும் சாப்பிடாமல் இப்படி சுவரில் வரைந்த பதுமையைப் போல் இருக்கிறாயே!" என்றாள் வேதனையுடன்.

அவன் மௌனமாய்த் தன் சிவந்த கண்களை ஏற எடுத்து உற்றுப் பார்த்தான். தாய் நடுங்கி விட்டாள். அக்கினிக் கணங்களைப் போன்ற அவன் கண்கள் அப்படி நடுங்கச் செய்து விட்டன, அவன் தாயை. அந்த அம்மாள் சற்றுத் தன்னைத் தான் சமாளித்துக் கொண்டு "ஏனப்பா! என்ன செய்கிறது?" என்று அவன் நெற்றியை அன் புடன் தொட்டுப் பார்த்தாள். நல்ல ஜுரம். திடுக்கிட்ட படி "அசட்டுப் பிள்ளையே! நீ டாக்டருக்குப் படித்த தும் ஒன்றுதான், படிக்காததும் ஒன்றுதான். ஜுரம் வந்திருக்கிறதே. கண்ணை மூடிக்கொண்டு படுக்கையில் படுப்போம் என்று தோன்றவில்லையே! என்ன தெரியப் போகிறது?" என்று தன்னுள் சலித்துக் கொண்ட படியே கட்டிலில் விரித்திருந்த படுக்கையை நன்றாய்த் தட்டி விட்டு "படுத்துக் கொள்ளப்பா!" என்றாள். அவன் வாய் பேசாது படுத்துக் கொண்டான்.

"ஸ்ரீதர்! நான் சொல்வதைச் சிரத்தையாய்க் கேள். உங்கப்பா செய்த தவறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதை

யெல்லாம் மறைத்து வைத்து உன்னை மனிதனுக்கப் பாடு படுவது உன் அன்னை யென்று நினைத்துக் கொண்டிருக்கிருய். அவள் உன் அன்னை யல்ல" என்ற இச் சொற்களே அவன் காதில் ஒலித்துக்கொண் டிருந்தன.

சற்று நேரத்தில் சுடச்சுடக் காப்பியுடன் உள்ளே வந்த அவன் தாயின் "ஸ்ரீதரா!" என்றழைக்கும் குரல் கேட்டதும் ஸ்ரீதரனின் யோசனை கலைந்தது. அவன் மறுபடியும் அன்னையை உற்றுப் பார்த்தான். அவன் கண்களி லிருந்து நீர் சுரந்தது.

அவள் மனம் நீர் சோரும் அவன் கண்களைப் பார்க்கச் சகியாது தகர்ந்து விட்டது. 'காப்பி' டம்ளரை மேஜை மேல் வைத்துவிட்டு அவன் அருகில் அமர்ந்து புடைவைத் தலைப்பால் அவன் கண்களைத் துடைத்தபடியே "ஏனப்பா அழுகிருய்?" என்னும்போதே அவள் கண்களிலிருந்தும் நீர் வடியத் தொடங்கியது. ஸ்ரீதரனுக்கே மனம் பொறுக்கவில்லை. ஆனல் உடனே அவன் மனத்தில் ஒலிப்பதோ "உன் தந்தை செய்த தவறுகளையெல்லாம் மறைத்து வைத்து உன்னை மனிதனுக்கப் பாடு படுவது உன் அன்னை யென்று நினைத்துக் கொண்டிருக்கிருய். அவள், உன் அன்னையல்ல."

துடைக்கத் துடைக்க வழியும் அவன் கண்ணீர் வெறும் கண்ணீரல்ல. அவள் கண்களுக்கு அது ரத்தமாய்த் தோன்றியது. நடுநடுங்கியபடியே "என்னப்பா செய்கிறது? ஸ்ரீதரா! வாயைத் திறந்து சொல்லேன். பச்சைக் குழந்தையைப் போல் அழுகிருயே! எனக் கொன்றும் தோன்றவில்லையே!" என்று அவன் முதுகை வருடினள்.

"அ...ம்..." அவன் வாய் அதற்குமேல் உச்சரிக்க மறுத்தது. நாக்கு மண்டியிட்டு சண்டித்தனம் செய்தது. வாய் விட்டே அலறி விட்டான். அவள் தன்னைத் தானே மறந்து கற்சிலை போல் சமைந்தாள். என்னதான் கற

சிலை போல் அமர்ந்திருந்தாலும் மனமுள்ள உயிர் ஜீவன் தானே! அவள் கைகள் மாத்திரம் அவன் கண்ணீரை அன்புடன் துடைத்துக்கொண்டிருந்தன. அவள் தன் சிலைத் தலைப்பில் ஏந்தும் கண்ணீரை அவள் கண்களின் மூலமாய்ச் சிந்துகிறுளோ என்னும்படி அவள் கண்கள் மடை திறந்து கொண்டன. அவள் மனம் காரிருள் சூழ்ந்த கானகத்தில் கண் தெரியாமல் கலங்கி நின்றது. அவன் மனமோ முள்ளடர்ந்த புதரிடையில் சிக்குண்டு நோவெடுத்தது. ஆனுல் இருவர் உயிரும் ஒன்றையொன்று பிணைத்துக் கொண்டு வேதனையால் வெதும்பின.

* * *

ஒருவிதமாய் அவன் கனத்த மனம் கண்ணீரை வடித்துப் பாரம் குறைந்ததுபோல் தோன்றுகிறது. ''அம்......மா!'' என்றுன். அவள் ''ஏனப்பா ராஜா!'' என்ருள், அவன் முகத்தருகில் குனிந்து. மறுபடியும் அவன் நாக்கு சண்டித்தனம் செய்தது. மனம் 'மௌன மாய் இரு' என்று உபதேசித்தது. உண்மையை அறியும் ஆவல் இறகு கட்டிக்கொண்டு பறந்தோடத் தொடங்கி விட்டது.

'' அப்பா.....என்ன......செய்து கொண்டிருந்தார்? ......அதை...முன்பு...சொல்ல...வேண்டும்?''

அவளை அப்படியே தூக்கிச் சமுத்திரத்தில் தடாரென்று விட்டெறிந்தாற்போல் தோன்றியது. அவள் மறந்திருந்த கஷ்டத்தின் அலைகள் பருவகால அலைகளைப்போல் வேக மாய்க் குமுறிக்கொண்டு உயர்ந்து உயர்ந்து தடார் தடா ரென்று அவள் உள்ளக் கரையை மோதியது. அதனுல் அவள் மனேதிடம் என்னும் கரை உடைபடுமோ என்று அவளே பயப்பட்டாள். பைத்தியக்காரியைப்போல் பேந்தப்பேந்த விழித்தாள்.

''முதலில் சொல்......சொல்லாவிட்டால்......'' அவன் சிவந்த கண்களும்......இடிந்த குரலும்......துடி துடித்துக்

கொண்டுவரும் சொற்களும் அவளை என்னமோ செய்தன. தன் இடக்கரத்தால் மெள்ளக் குரல்வளையைப் பிடித்துக் கொண்டாள். பரிதாபமாய் அன்புநிறைந்த தன் கண்களை அவன்பால் திருப்பி "ஸ்ரீதரா!" என்றாள்.

அக்குரல் அவனையே அதிரச் செய்தது. அதென்ன தெய்வீகக் குரலா? இல்லை. உள்ளன்புடன் வேதனையால் நொந்து வேகும் குரலல்லவா?

"ஏன் அம்மா?" என்றான் அவனை யறியாமலே! அப்படிக் கனிவாய்க் கேட்க அவன் நினைக்கவில்லை. அவள் அன்புடன் அவன் கண்களைக் கூர்ந்து பார்த்தபடி "குழந்தாய்! உங்கப்பா என்ன செய்துகொண் டிருந்தார் என்றால் என்னப்பா அர்த்தம்? உங்கப்பா ஒன்றும் செய்ய வில்லை. அவருக்கு விடிந்தால் இந்தக் குடியானவர்களுடன்கூட மாரடிப்பதற்கே போது போதாது. வேளைக்குச் சாப்பாடா? படுக்கையா? இருந்தவரைக்கும் காக்காயாய் அலைந்தார். கழுகாய்க் கத்தினார். நீ மூன்று வயதுக் குழந்தையாய் இருக்கும்போதே அவருக்கு வயது நூறு நிரம்பிவிட்டாற்போல் அந்தப் பாழாய்ப்போன எமன் வந்து கொண்டுபோனான்.

ஸ்ரீதரனின் முகம் சிறிது சுருங்கி இயற்கைக்கு வந்தது. ஆசிரியர் ஆனந்தராவ் சொன்ன புராணம் எங்கே? இவள் சொல்வது...சற்றுக் கண்களை மூடிக்கொண்டான். மேஜைமே லிருந்த காப்பி ஆறிக்கொண் டிருந்தது. அவள் உள்ளம் மாத்திரம் என்றுமில்லாமல் ஸ்ரீதரன் இப்படிச் சங்கடப்பட்டுக்கொண்டு தன்னைத் திடீரென்று இம்மாதிரிக் கேள்வி கேட்க நேர்ந்ததற்குக் காரணத்தை அறியத் துடித்துக் கொண் டிருந்தது. ஆனால் அவள் பொறுமையைக் கை விடாது அவனைத் தட்விக்கொடுத்தபடியே "ஸ்ரீதரா! இதோ உன் படிப்புக்குக் கடைசிவருஷம். ஒருவிதச் சஞ்சலமுமில்லாமல் கவலையற்றுப் படித்துப் பட்டம் பெற்றுவிட்டால்...பிறகு...உனக்கிணை யார்? மேலும் நான் புத்தி

யறிந்தது முதல் பட்ட கஷ்டத்துக்கேற்ற பலனை அடைந்தவளாவேன். நீ சந்தோஷமாய்ப் பேரும் புகழுமாய் இருந்தால்தானே'ப்பா எனக்குச் சந்தோஷம்?'' என்று அவனைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டாள்.

அவள் அன்பான பார்வைக்கு முன், ஆயுதம் முறிந்த வீரனைப்போல் திருதிருவென்று அவன் விழித்தான். அவளோவெனில் நிலைகலங்கியவளாய் ''என்னடா'ப்பா செய்கிறது? எனக்கொண்ணும் தெரியவில்லையே? கலிய பெருமாளே! பட்ட கஷ்டத்துக்கேற்ற பலனை அளித்திருக்கிறாய்...என்று, எல்லாவற்றையும் மறந்திருந்த என்னை மறுபடியும் முதல் படியில் தள்ளிவிடாதே!'' என்று அவன் முகத்தில் முகம் பதித்து அழுதாள். ஸ்ரீதரன் தைரியத்தை வற்புறுத்தி அழைத்தபடி ''அம்மா! எனக்கு மண்டையைப் பிளக்கிறது. அதனால்தான் கண்ணில் நீர் வடிகிறது. நீ பயப்படாதே'' என்று கண்களை மூடி யோசனையிலாழ்ந்தான். அவனுக்கு யோசிக்க யோசிக்கத் தலை சுழன்றது. அதே சமயம் தெருவில் யாரோ ''ஸ்ரீதர்'' என்றழைக்கும் குரல் கேட்கவே அவனருகிலமர்ந்திருந் அவள் சட்டென்றெழுந்து சென்றாள்.

* * *

முன்புற ஹாலில் ஸ்விட்சைத் தட்டிவிட்டு ''யார்?'' என்று கேட்டபடியே வாயிற்புறம் வந்தாள். அங்கு நிற்கும் ஆளைக் கண்டதும் அவள் முகம் சுருங்கியது.

''ஸ்ரீதர் இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

''அவனுக்கு உடம்பு சரியாயில்லை'' என்றாள் சோர்ந்த குரலில் அவள்.

''காலையில் கலாசாலைக்கு வந்தபோது நன்றாயிருந்தானே?''

''இப்பொழுது நன்றாயில்லை'' என்று சொல்லியபடியே உள்ளே சென்றாள் வெகு அலட்சியமாய்.

அவள் பின்புறமே வந்த அவன், ஹாலில் அமர்ந்து வெகு நிதானமாய் "ஸுகுணா! நான் வந்திருப்பதாக ஸ்ரீதரனிடம் சொல்லு..."



அவள் திகைத்தபடி சட்டென்று அவன் புறம் திரும்பி " ஆனந்த்! நீ எப்பொழுது இங்கு வந்தாய்?" என்றாள் மெல்லிய குரலில்.

நான் இவ்வூருக்கு மாற்றலாகிவந்து இரண்டு மாதமாகிறது. ஸ்ரீதரன் உன் பிள்ளை யென்ற விஷயம் நேற்றிரவு தான் அறிந்தேன். இன்று மத்தியானம் அவனை அழைத்துப் பேசினேன்.'

"ஐயோ! அவனிடம் என்னபேசினுய்? அதன் பயன்தானே அவன் இன்று இப்படிப் படுத்திருப்பது?" என்ருள் குமுறும்குரலில்.



"நான் என்ன சொன்னேன்? ஒன்றும் சொல்லவில்லையே! நான் ஏதாகிலும் சொன்னதாக அவன் சொன்னுை?" என்ருர் பரபரப்புடன். அறையில் படுத்திருந்த ஸ்ரீதரனுக்கு இவர்கள் பேசுவது நன்ருய்க் கேட்டது. கண்களை மூடியபடியே காதை மாத்திம் தீட்டிக்கொண்டான்.

"ஆனந்த்! உன் விஷயம் எனக்குத் தெரியாதா? சிறுவயதிலிருந்தே எதையும் ஆற அமர யோசித்துப் பேச மாட்டாய். அதிக அவசர குணமுள்ளவன். பிறகு "நான் செய்தது தவறுதான். காலில் விழுகிறேன்" என்று நெடுஞ்சாண்கிடையாய் விழுவாய். ஒரு முறையா? இரண்டு முறையா? எப்பொழுதும் இதே உன் வழக்கமாகிவிட்டது. எந்தக் காரியங்கள் அனுசிதமோ அதையே செய்வாய். உன்னைச் சொல்லக் குற்றமில்லை. நீ பிறந்த வேளை அப்படிப்பட்டது...'' என்று சொல்லும்போது தன்னையும் மீறி ஸ்ரீதரன் பெருமூச்சு விட்டான். அவன் பெருமூச்சு காதில் விழுந்ததும் துடிதுடித்தபடி ஓடி "என்ன ராஜா!" என்று அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். அவன் கண்களை இறுக மூடிக்கொண்டு பதிலளிக்காமல் படுத்திருந்ததால் அவள் சற்றுச் சாந்தியுடன் வெளியில் வந்தாள். ஸுகுணாவையே பின் தொடர்ந்த ஆனந்தராவ் அவள் செய்கையைக் கண்டு ஆச்சரியத்திலாழ்ந்தார்.

"பி...ற...கு...?" என்ருர் வெகு நிதானமாய்.

"பிறகு என்ன? அவன் பிறந்ததுமுதல் இம்மாதிரி ஒருநாள் படுத்து அறியேன். கடவுள் அனுக்கிரகத்திஞல் ஏதோ கஞ்சியோ கூழோ இன்பமாய் இருவரும் குடித்துக் கொண்டிருக்கிறும். குழந்தை சமர்த்தாய்ப் படித்துக் கொண்டு புத்திசாலியாய் இருக்கிருன். நல்லதனமாய் இந்த ஆறுமாதம் படித்துப் பட்டம் பெற்றுவிட்டால், அவன் உயரிய பதவிக்கு வருவான். அதில் ஆட்சேபணை

யில்லை. அவன்...இன்று...காலேஜிலிருந்து வந்தது முதல் பேயறைந்ததைப் போல் உட்கார்ந்திருந்ததும், பிறகு ஜுரம் கண்டதும்...உடம்பிற் கென்ன வென்று கேட்டால்......அப்பா என்ன செய்துகொண்டிருந்தார் என்று கேட்டதும்......இப்பொழுது நீ வந்ததும் பார்த்தால் நீதான் ஏதோ விஷ விதை விதைத்திருக்கிருய்...என்பதிலைய யில்லை. ஆனந்த்! துன்பத்தையே இன்பமாய்ச் சுவைக்கும் என்னை இந்த வழியிலேயே விட்டுவிடு. இன்னும் குழி பறிக்காதே! உண்மையில் நீ என்...இருந்தால்... இத்துடன்...விட்டுவிடு...குழந்தையிடம் அனுவசியமாய் பேசாதே! இவ்வளவு நாள் இல்லாமல் கடவுள் உன்னை இந்தக் கலாசாலைக்கு...இந்த ஊருக்கா மாற்ற வேண்டும்? வர வருஷம் வந்திருக்கக் கூடாதா? நீ என்ன செய்வாய்? என் விதி விலைக்கு விற்கிறது போலும்'' என்ருள் சோகத்துடன்.

"ஸுகுண!'' என்று சற்று அழுத்தமாய் அழைத்தார் ஆனந்தர்.

"ஏன் ஆனந்த்!'' என்ருள், அன்பு நிறைந்த குரலில் நிதானமாய்.

"உனக்கு இன்னும் அந்த அற்பப் பதரின்மே லிருந்த ஆசை அகல வில்லையல்லவா?''

"போதும். வாயை மூடிக்கொள். இறந்த பின்னும் ஒரு ஜீவனின்மேல் இத்தனை விரோதமா? உன் தலையில் அவர் கல்லையா போட்டார்?'' என்ருள் கோபமாய்.

"கல்லைத் தூக்கிப் போட்டாலும் தேவலை. கன்னிப் பெண்ணைக் கெடுத்த மகாபாதகன்......''

"அவர் பாதகர் அல்ல. நீங்கள்தான் பாதகர்கள்...''

"அவனைப்போல் நினைத்த வழிகளெல்லாம் சுற்றத் தெரியாமல்...கட்டினவளைக் கிணற்றில் தள்ளி, கன்னியின் கற்பை...''

"நிறுத்து அண்ணு! குழந்தை விழித்துக்கொள்வான். அவர் எப்படியிருந்தாலும் என் மட்டில் உத்தமர்தான். நான்தான் பாபி. அவரை வைத்துக்கொள்ளக் கொடுத்து வைக்காதவள்..."

"அ...டா...டா! என்ன அன்பு. சாஸ்திரோக்தமாய்க் கல்யாணம் செய்துகொண்டு கஷ்டப்படுவது; சீதை, சாவித்திரி முதலானவர்கள்கூட உன்னிடம் பிச்சை தான் எடுக்கவேணும் போலிருக்கிறது. பதிபக்திக்கு..." என்ருர் ஏளனமாக.

"ஆம். இல்லையென்று யார் சொன்னது. அதே அந்தச் சீதையை ராவணனுக்கு அவள் தந்தை கொடுப்பதாக நிச்சயித்திருந்தால்...ராமனை விரும்பிய சீதை என்ன செய்திருப்பாள்?"

"என்ன செய்திருப்பாள்? நீயே சொல்லேன்?"

"என்னைப் போல்தான் செய்து இருப்பாள். அதிலையமில்லை..."

"உன்னைப்போல் கசடனைக் காதலித்துக் காலம் முழுவதும் கைம்பெண்ணுய் இருக்க அவள் அவ்வளவு அசட்டுப் பெண்ணல்ல".

"ஆமாம் ஆனந்த்! என்னைப்போல் அசட்டுப் பெண்ணுக அவள் இருக்காமலிருந்ததால்தான்......ஊம் அப்படியல்ல...அவள் விருப்பப் பிரகாரம் ஜனகர் ராமனுக்குக் கொடுத்ததால்தான் நமக்கு இன்று சிரஞ்சீவிக் காவியமான ராமாயணம் கிடைத்தது. இல்லையேல்..." என்று அவரையே திரும்பிக் கேள்வி கேட்டாள்.

ஆனந்த ராவ் பேசச் சக்தியற்று அவள் முகத்தையே உற்றுப் பார்த்தார். பின்னும் அவள் சொல்லத் தொடங்கினுள். "ஆனந்த்! தயவு செய்து சென்றவைகளை நினைவு படுத்தாமல் வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ! குழந்தை அலுத்துத் தூங்குகிருன். அவன் எழுந்ததும் நீ வந்ததாகச் சொல்கிறேன்" என்ருள்.

"ஸுகுணு! பத்தொன்பதாண்டுகளுக்குப் பின் சந்திக்கும் சகோதரனுக்கு இந்த உபசரிப்பும் மரியாதையும் தானு?"

"என்ன செய்வது ஆனந்த்! ஆயிர வருஷமாயினும் சரி, என் ஸ்ரீதரன் நன்மைக்காக நான் சர்வத்தையும் தியாகம் செய்யத்தான் செய்வேன்."

"நீ யாரென்று அவனறிந்தால்......"

"நான் யார்? அவன் அன்னை. அதை இல்லையென்று மறுக்கக் கடவுளாலும் ஆகாது."

"நான் உன் உண்மையை உடைத்து விடுவேன்.?"

"எதற்காக? நான் உனக்கென்ன தீங்கு செய்தேன்?"

"நீ செய்ததைச் சொல்ல வேண்டுமா?" என்று பல்லை நெற நெற வென்று கடித்தான்.

"ஆனந்த்! நான் கடவுளுக்குப் பொதுவாய்ச் சத்தியத்தைக் கடைப் பிடித்துத்தான் நடக்கிறேன். நான் செய்த தவறு ஒன்றுண்டெனில், உனக்கிஷ்ட மில்லாத அவரை மணந்து கொண்டதுதான். அவரை மணக்காமல் என்னல் இருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்" என்ருள் எங்கோ தன் யோசனையைப் பறக்க விட்டு.

"மோரு விதீத காசு, முணுநாள் வாழ்வு, என்பதைப் போல் ஆயிற்று. அப்படியாவது கல்யாணம் கார்த்திகைன்னு நடந்ததா? என்னவோ......கைம்பெண் வேஷம் மாத்திரம் வெகு நன்ருய்ப் போட்டுக்கொண்டிருக்கிருய்" என்ருர் சினத்துடன்.

"ஆனந்த்! அதிகமாய்ப் பேசாதே! அவரிடம் நான் வைத்த அன்பு கடவுளுக்கே தெரியும். அவர் நினைவாய் அவருக்கு நான் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்ய அவர் எனக் களித்துவிட்டுச் சென்றிருக்கும் அந்த ரத்தினம் ஒன்றே போதும்."

"ஆமாம்...பத்து மாதம் சுமந்து பெத்தது எடுபட்டுப் போறது" என்ருர் சலிப்புடன்.

"இன்னும் நான்கு வருடத்துக்கு முன் அவரை அடைந்திருந்தால் எனக்குப் பிறக்கவேண்டியவன்தானே! என் கண்மணி!''

"எவளோ பெற்றுவிட்டுப் போனாள்.''

"எவள் பெற்றாலென்ன? மான் வயிற்றில் பிறந்ததால் வள்ளி என்ன குறைந்துவிட்டாள்? ரிச்யசிருங்கர் என்ன குறைந்துவிட்டார். யார் பெற்றாலென்ன? எங்கே பிறந்தாலென்ன? குணம் உயர்ந்தது. அதுதான் முக்கியம். என் ராஜு தங்கக் கட்டி. அவனைச் சொன்ன வாயால் மற்றவரைச் சொல்லக்கூடாது.

"ஸுகுணா! அவ்விஷயத்தில் நானும் உன்னுடன் சேருகிறேன். கலாசாலையில்கூட அவன் நல்ல பெயரெடுத்திருக்கிறான். ராஜாங்கத்திலேயே முதலில் தேறுவான். அதில் சந்தேகமில்லை. இன்று அவனை என் பெண்ணை மணந்துகொள்ளும்படி கேட்டேன். அவன் மாட்டேன் என்று மறுத்தான். அதற்குப்பின் வார்த்தைக்குமேல் வார்த்தை வளர்ந்தது. அவன் சொன்னான். கூன் ஆனாலும், குருடானாலும் சரி. என் அன்னை பார்த்து எவளைப் பண்ணிக்கொள்ளச் சொல்கிறாளோ அவளைத்தான் பண்ணிக்கொள்வேன் என்றான். அப்பொழுதுதான் நான் ஜாடையாய் நீ அவன் தாயல்லவென்றும்......அவன் தந்தை.........'' என்னும்போதே "ஐயோ!'' என்று நிலத்தில் வெட்டுண்ட மரம்போல் சாய்ந்தாள்.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீதரன் காதில் ஸுகுணாவின் குரல் கேட்கவே ஸ்ரீதரன் எழுந்தோடிவந்து அவன் அன்னையை எடுத்துத் தன்மேல் சாய்த்துக்கொண்டு, ஆசிரியர் ஆனந்த ராவை வெறுப்புடன் பார்த்தான்.

அவள் பேச்சற்றுக் கிடந்தாள். ஆனந்த ராவ் சொல்லத் தொடங்கினார்: "ஸ்ரீதர்! இவள் என் சொந்தத்

தங்கை. உன் தந்தையை வெகுவாய்க் காதலித்தாள். அந்த அயோக்கியனே செய்யாத அக்கிரமங்களில்லை. கொழுத்த பணக்காரன். அவன் மனைவி உன்னைப்பெற்ற இரண்டு வருஷத்துக்கெல்லாம் இறந்தாள். அச்சமயம் இவளுக்குப் பதினறு வயது. ஒரு நாள் எங்கள் தெருவிலிருக்கும் அவன் அத்தியந்த நண்பன் / வீட்டுக்கு உன்னையும் எடுத்துக்கொண்டு பகடையாட வந்தான். நீ விளையாடிக் கொண்டே தெருவுக்கு வந்துவிட்டாய். அச்சமயம் ஸுகுணு தெருவில் நின்றுகொண் டிருந்தவள் உன்னை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்துவிட்டாள். நீயும் அவளிடம் வேற்றுமை பாராட்டாது விளையாடினுய். சிறிது நேரத்துக்கெல்லாம் உன்னைக் காணுது தெருவில் எல்லோரும் தேடத் தலைப்பட்டார்கள். அதையறிந்த இவள் உன்னை தெருவில் கொண்டுவந்து விட்டாள். அன்று பிடித்தது எங்களுக்குச் சனி.

"உன் தந்தை அப்பக்கம் வந்தால் நீ எங்கள் வீட்டுக்கு ஓடி வந்துவிடுவாய். ஸுகுணு நல்ல அழகு. அதற்கேற்பக் கல்வி கேள்விகளில் கெட்டிக்காரி. துர்ப்புத்தியும் காமப் பித்தும் பிடித்தலையும் உன் தந்தைக்கு அவளைக் கெடுக்கவா கஷ்டம்? கெடுத்தேவிட்டான். அதையறிந்து நாங்களெல்லாம் வருந்தினேம். ஆனல் அவள் மாத்திரம் ஒரே வார்த்தையில் அவரையே நான் வரித்துவிட்டேன். தெய்வத்தின் முன் அவரே எனக்கு எல்லாம் என்று சொல்லி எங்களை விட்டு உன் தந்தையுடன் வந்து விட்டாள். அந்த மஹாபாபி இறந்ததாக வெகு நாட்களுக்குப் பிறகு கேள்விப்பட்டோம்..." என்று சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். ஸ்ரீதரன் தன் தாயின் முகத்தில் ஈரத்துணியைக் கொண்டு துடைத்தபடியே விசிறிக்கொண்டு ஆனந்தராவைப் பார்த்தான். அப்பா ரவை, அப்புறம்? என்ற கேள்வியை எழுப்பியது.

அவர் மறுபடியும் சொல்லத் தொடங்கினர்: "சென்ற வருடம்தான் அவள் இங்கிருப்பதும், நீ டாக்டருக்குப் படிப்பதும் தெரிந்ததால் நான் இவ்வூருக்கு மாற்றிக் கொண்டு வந்தேன். இந்த இரண்டு மாத காலமாய்த் தினமும் அவளறியாது இத்தெருவில் இரண்டு மூன்று முறை போவேன். அன்று இருந்ததைப்போல்தான் இன்றும் இருக்கிருள். அன்று மங்களஸ்வரூபி, இன்று அமங்களஸ்வரூபி. அன்று உன் தந்தையின் காதலி. இன்று உன் போஷகி, இவ்வளவுதான். ஆனல் இவளைப்போன்ற மனேதிடம் யாருக்கும் இல்லை யென்பது தெரிகிறது. உன் மேன்மைக்காக உன் தந்தை விஷயத்தை உனக்கு இத்தனை நாள் அறிவிக்காமல், தான் வளர்த்தவள் என்பதையும் பிறரறியாமல் உன்னை வளர்த்தாளே! அதுதான் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது!" என்ருர்.

அதே சமயம் கண்களை விழித்த ஸுகுண "ஆனந்த்! தயவுசெய்து குழந்தையிடம் அவரைப்பற்றி ஒன்றும் சொல்லாதே! உலகம் என்ன வேண்டுமானலும் சொல்லட்டும். அவன் நிர்மலமான உள்ளத்தில் அவர் தெய்வமாய் விளங்கட்டும். என் தெய்வம், அவனைப் பெற்ற தந்தை, அவனிடமாகிலும் தெய்வ பூஜையை ஏற்கட்டும். உன் பெண்ணை அவனுக்குக் கொடுக்க வேண்டாம். அவன் தந்தையைக் காதலித்து நான் உங்கள் வம்சத்தைக் களங்கம் செய்துவிட்டேன். அப்பேர்ப்பட்ட களங்கினி வளர்த்த பிள்ளைக்கு உங்கள் பெண்ணைக் கொடுக்க வேண்டாம். என் கண்மணிக்கு என் கணவரால் முன்னுக்கு வந்த......" என்று மேல்மூச்சு விட்டாள்.

ஸ்ரீதரன் அன்னையின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தான். அது நிதானமாய்த் தங்கள் நிலையை விட்டு அகல ஆரம்பித்துவிட்டது தெரிந்தது.

"அம்மா!" என்றலறினன் அவன்.

✲

# ஊசியும்



# நூலும்

"பூமிஜா"

காலம் கிடக்கிற நிலையில் ஓயாமல் தையல் வேலை செய்வதிலே என்ன லாபம்! வேறு ஏதாவது உபயோகமான காரியம் செய்யக்கூடாதா? என்று கேட்கிறாள் பாட்டி. உண்மைதான். ஆனால் இன்று துணிகள் குறைவாகக் கிடைக்கிறது என்பதற்காகத் தையல் வேலையைச் செய்யாதிருக்க முடியுமா? நம் நாட்டிலே பொதுவாகக் கணக்கிட்டால் ஆடம்பர வாழ்க்கையை நடத்துபவர்கள் வெகு குறைவு. தேவைக்கு அதிகமான துணிதான் ஏது? விலையோ அசாத்தியம். அதிலேயும் பங்கீடு. கிடைக்கிற வகைகளோ குறைவு. மல், சீட்டி, இவைகளைக் கொண்டு தான் எல்லாவற்றையுமே தைக்கவேண்டி யிருக்கிறது. எப்பொழுதாவது உறுதியான துணிகள் கிடைக்கின்றன. இந்த மாதிரிச் சமயத்தில் பூ வேலை செய்து அழகு படுத்துவது உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய் என்பது போலத்தான்.

இதனுடன் கொடுத்திருக்கும் படத்தைப் பார்! எவ்வளவு அழகான சித்திரம், நம்மால் தைக்க முடியுமா என்று மலைக்கவேண்டாம். வேலை சற்று அதிகம்தான். மனமூன்றி, நிதானமாய், ஒளியும், நிழலும் கலந்து தைத்தால் வெகு அழகாய் இருக்கும்.

இவற்றுள் வளையத்தோடு கூடின ரோஜாப் பூங் கொத்து திரைச் சீலையிலும் போடலாம். "குஷின்" உறையிலும் போடலாம். இதில் உள்ள வளையத்தின் தையல்கள் சாதாரண மடிப்புத் தையல்போல் தைக்கவேண்டும். இது நீல நிறம், மற்றப்படி காம்புகளைப் பழுப்பு நிறத்தால் தைக்க வேண்டும். மீதியுள்ள தையல்கள் நீண்டதும், குறுகியதுமான தையல்கள். ஆங்கிலத்தில் இதை Long and Short stich என்று சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவத்தில் தையல்கள் நெட்டையும் குட்டையுமா யில்லை. சித்திரத்தின் நிறத்துக்கும், சாயலுக்கும், தன்மைக்கும் ஏற்ப, அங்கங்கே பிரித்துக்கொண்டு, இதில் நம்முடைய சொந்தக் கற்பனையும் கலந்து சமயோசிதமாய்த் தைக்கவேண்டும். படத்தைக் கூர்ந்து கவனி. கோடுகள் எங்கே தொடங்கி, எப்படிச் செல்கின்றன, எங்கே முடிகின்றன என்பதைக் கவனி.

வர்ணம் தீட்டும் ஓவியனின் தூரிகையை நினைத்துப் பார். கோடுகள் எங்கெங்கே தொடங்கி, எப்படிச் சரிந்தும் நிமிர்ந்தும் இருப்பதனால் இந்த ரேகைகள் அமைகிறது? நூலினால் தைத்த பூ, பட்டு ரோஜாவைப் போல் எதனால் தோன்றுகிறது? என்பது எல்லாம் நன்றாய் விளங்கும்.

சித்திரத்தைத் துணியில் வரைந்துகொள்ளும் பொழுதே வெறும் ஈயடிச்சான் காப்பியா யில்லாமல் எந்தெந்தக் கோடுகளை எங்கே தொடங்கி எப்படி முடிக்க வேண்டும் என்பதையும் கவனி. வெறும் கோடுகளாலான சித்திரமாயிருந்தால் ஒரே விதமான காம்புத் தையலோ அல்லது, சங்கிலித் தையலோ தைப்பதானால் வெளிக் கூடுகள் மட்டும் கச்சிதமாய் இருந்தால் போதும். இது "அடைத்துத் தைப்பது" ஆகையால் சின்னஞ் சிறு வளைவுகள், மெல்லிய ரேகைகள், வர்ண பேதங்கள் இவைகளைக் கவனித்து வரைந்துகொள். பிறகு சித்திரத்தை அருகில்





வைத்துக்கொண்டு தைக்கத் தொடங்கினல், நிறங்கள் ஒன்றுடன் ஒன்று கலப்பதிலும் சிரமமிராது.

இதற்குத் தேவையான நிறங்கள் :—இலைகள் ஒளியும் நிழலும் மாறிவருவதை யனுசரித்து, இருண்ட பக்கங்களைக் கறுத்த பச்சையும், வெளிச்சமுள்ள இடங்களுக்கு கிளிப் பச்சையும் உபயோகிக்க வேண்டும். இலையின் நடு நரம்புகளும், காம்பும் பழுப்பு நிறம். புஷ்பத்திலும் இதே மாதிரியாக மூன்று நிறங்கள், அதாவது கரும் சிவப்பு, சாதாரணச் சிவப்பு, இளஞ்சிவப்பு. இது பட்டு ரோஜா ஆகையால் இந்த நிறம்தான் மிகவும் அழகாய்ப் பொருந்தும். தொலைவிலிருந்து பார்ப்பதற்கு அழகிய வெல்வெட்டுப்போல் தோன்றும்.

அடுத்தது கைக்குட்டை. இதில் தையல்கள் மிகவும் அழகாய்ப் படிந்திருக்கிறது. இலைகள் நீல நிறமாகவும், புஷ்பத்தைக் கனகாம்பரமும் வெண்மையும் கலந்த இரு நிறங்களாகவும் தைக்கவேண்டும். இலைகள் மடிந்து தொங்குவது போல் இருக்கும் பகுதியை நன்முக கவனத்தில் வைத்துக்கொண்டு அதை ஒட்டியே கோடுகள் அமையும்படி தைக்கவேண்டும். நல்ல துணியில் அழகாகத் தைத்துப் பார். பொறுமையுடன் வேலை செய்தால் பெருமையுடன் காண்பித்துக் கொள்ளலாம்.

*




"குகப்ரியை"

ஆம்! பார்க்கப் போனால் குரங்குதான்! நாங்கள் எவ்வளவு அருமையும் பெருமையுமான காரியங்கள் செய்கிறோம் தெரியுமா? அவைகளை யெல்லாம் உங்களால் செய்யத்தான் முடியுமா? என்னதான் கஜகர்ணம், கோகர்ணம் போட்டுப் பார்த்தாலும் சரி, ஒரு நாளும் முடியாது.

மிகப் பெரியதும் தெய்வீகமானதும் இராமாயணம். இராமர் மகா விஷ்ணுதான். ஆனால் என்ன? ஒரு அனுமார் இல்லாவிட்டால் இராமாயணம் ஏது?

மனிதர்கள் எப்பொழுதும் தன்னலமுள்ளவர்கள். தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதேதான் நோக்கம். தாங்கள்தான் மேதாவிகளாம்! ஏன்? இப்பொழுது இலங்கைக்கு ஓர் அணை கட்டுங்களேன் பார்க்கலாம்! எங்கள் நளனும், நீலனும் எந்த இஞ்சினீயர் பரீட்சை கொடுத்தார்கள்?

இது போகட்டும், எங்கள் அனுமார் ஒரே தாண்டிலே தாண்டினாரே! உங்களால் முடியுமா? முடியும் என்பீர்கள். எப்படி? ஏரோப்ளேன் உதவியால், அதென்ன பிரமாதம்! சொல்லப் போனால் அது அந்த நாளைய சமாசாரம் என்பீர்கள். இந்தக் காலத்திலும் தானென்ன? கோதாவரி தீரத்திலுள்ள 'கொண்ட முசுரா'களோடு பந்தயம் போட்டு நீந்த உங்களால் முடியுமா? யாரோ விஷயந் தெரியாத மனிதன், குரங்கு

களுக்கு நீந்தத் தெரியாது என்று சொல்லி, வாசக பாடங்களிலே 'குரங்குப் பாலம்' என்று கதை எழுதுகிருர்கள்!

விஷயம் வேறென்று மில்லை. மனிதரைவிட நாங்கள் தாழ்ந்தவர்கள் என்று நிரூபிக்க வேணும். பரிணமப் பாதையில் (Evolution) நாங்கள் வழி தப்பிப் போய் விட்டோமாம். இந்த மாதிரி நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நாங்கள்தான் உங்கள் முன்னோர் என்ற விஷயம் மறந்து விடுகிறது. தனக்கு முரண்பாடான விஷயத்தை மறதியின் மேல் பழி போடுவதுதானே மனித நாகரீகம்?

எப்படிப் பார்த்தாலும் உங்களைவிட நாங்கள் உயர்வுதான். மரமேறவோ, நீந்தவோ பிறர் தயவு தேவையில்லை. தொலைவிலுள்ளவைகளைப் பார்க்க மூக்குக் கண்ணுடி வேண்டாம். ஒருவன் உழைக்க மற்றவர் உட்கார்ந்து தின்பதில்லை.

ஆனுல் உங்களில் எல்லோரையுமே நான் குறை சொல்வதாக நினைக்கக் கூடாது. சிலர் 'கிரந்தி சிகிச்சை (எங்களைக் கொன்று நீங்கள் இளமை பெறுவது, யயாதி மகாராஜாவைப் போல.) கருங் குரங்கு ரசாயனம் செய்கிறீர்களே அவர்களைத்தான் குறிக்கிறேன். பட்சமாயிருப்பவர்களும் இல்லாமற் போய் விடவில்லை. தென் ஆர்க்காடு ஜில்லா வாசிகளான குறவர்கள் அதில் முதன்மையானவர்கள்.

அந்த ஜில்லாவிலே நிலக்கடலைப் பயிர் அதிகம். வெகு சாவதானமாய் உட்கார்ந்து நிலக்கடலையைத் தோண்டி எடுப்போம். எங்களை எப்படியாவது பிடித்து வெளியூர்களுக்கு அனுப்பிவிட வேண்டு மென்று குடியானவர்கள் ஏராளமான பணம் செலவு செய்வார்கள்.

எங்களைப் பிடிப்பதற்காக ஒரு கட்டை வண்டி தயாராகும். முன் புறத்தை மூடிப் பின் புறத்தைத் திறந்து வைத்து, தானே மூடிக் கொள்ளும்படி ஒரு பொறியை அமைப்பர். நாங்கள் வேகமாய் உள்ளே சென்று

கடலையை எடுக்கும் பொழுது கதவு படீரென்று மூடிக் கொள்ளும்.

பிறகு மற்றவர்கள் எச்சரிக்கையாய் விடுவார்கள். ஒரு மாதம் வரை, அந்தப் பக்கமே வரமாட்டோம். அவர்கள் ஏதேதோ சூழ்ச்சி செய்து பிடித்தே தீருவார்கள். அவர்கள் ஏன் இப்படி நமக்காகச் சிரமப்பட வேண்டும், அவர்கள் திருட்டுத் தொழிலில் பங்குக்கு வருகிறோமா? என்று நினைத்ததுண்டு. ஆனால் பிறகுதான் தெரிந்தது விஷயம்.

இந்த ஊர்க் குடியானவர்களிடம் பணமும் நெல்லும் பெற்றுக் கொண்டு, பிடித்துக் கொண்டுபோய் மற்றொரு ஊரை அடுத்து விட்டுவிடுகிறது. பிறகு அவர்களிடமும் பணம் பறிக்கலா மல்லவா?

எங்களைப் பிடித்து வண்டியுடன் அழைத்துச் செல்லும் பொழுது, என்ன ஆனந்தம்! நாங்கள் என்ன கைதியா, விசனப்பட? ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குச் சிரமமில்லாமல் 'ஊர்வலம்' போகிறோம். புதுக் கல்யாணப் பிள்ளைக்குக்கூட அவ்வளவு 'குஷி' இராது. நாங்கள் குதித்துக் கூத்தாடிக் கொம்மாள மடித்து வண்டியின் ஒரே பக்கத்துக்குப் போவோம். வண்டிக்காரனும் மாடுகளும் தத்தளிப்பர். வண்டி முன் பளுவும் பின் பளுவும் போதாமல் தடாலென்று குடை கவிழும், ஒரே சமயத்தில் எல்லோரும் கூண்டிலுள்ள மூங்கிலைப் பிடித்துத் தொங்கலாடுவோம். அலறுவான் வண்டிக்காரன்.

உதவிக்காகக் கூவுவான். இரண்டு மூன்று பெயர்கள், பக்கங்களில் இருவரும், பின்புறம் ஒருவனுமாக நடந்து கொண்டே புளியம் மிலாறினால் மேளம் அடிப்பது போல் அடித்துக் கொண்டே வருவார்கள். மற்றொரு கிராமம் வரை, அந்த மேளமும் எங்கள் நாட்டியமும் நடந்துகொண்டே இருக்கும். சுமார் இருபது அல்லது முப்பது மைல் தாண்டித்தான் விடுவார்கள்.

இடையில் சில மாதங்கள். இங்கேயும் அதே நாடகம். மறுபடி பழைய ஊருக்கு யாத்திரை. இப்படி அரசன் மகளைப் பேய்பிடித்த கதையாய், நாங்களும், குறவரும் மாறி மாறி நடிக்க வேண்டியதுதான்.

இன்னும் எங்கள் பிரதாபங்களைச் சொல்லிக் கொண்டே போனால் இராமாயணத்துக்கும் மேற்பட்டு விடும். இராமாயணமே எங்கள் பிரதாபந்தானே! அதுவும் அப்பொழுதைக்கு இப்பொழுது எவ்வளவோ முன்னேறி இருக்கும் எங்களைப் பற்றி உள்ளபடி உணர்ந்து உரைக்க, இன்னொரு கம்பனோ வால்மீகியோ பிறக்க வேண்டும்.

கம்பரும் வால்மீகியும் பழங் கவிகள். புதுமைக் கவிஞர் பாரதியார் எங்களைப் பற்றி எவ்வளவு அழகாய்ப் பாடி இருக்கிறார் தெரியுமா?

மேனியழகினும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனியிருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே
வானரர் தஞ் சாதிக்கு மாந்தர் நிகர் ஆவாரோ?
ஆனவரைக்கும் அவர் முயன்று பார்த்தாலும்
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை,
எட்டுடையால் மூடி எதிர் எமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தை செய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப் போல் ஆக்க முயன்றிடினும்—
ஆடிக்குதிக்கும் அழகில் எமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும்—கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்
வேறெதைச் செய்தாலும் வேகமுறப் பாய்வதற்கே
வானரர் போலாவாரோ? வாலுக்கும் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு கந்தையைப் போல்
வேகமுறத் தாவுகையில், வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போல் ஆமோ!

சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்......
வானரர் போற் சாதியொன்று மண்ணுலகின்மீதுளதோ ?

என்றல்லவா கேட்கிறூர். பாடல் பெருனே, பலர் மெச்ச வாழானே! என்று மனிதனை, பாடல் பெருதவனை ஏசினுளாம் ஒரு கிழவி. 'கவியமை கீர்த்தியான்' என்று இராமனை வாழ்த்தினுன் ஒரு புலவன். உண்மையில் இந்த இரண்டுக்கும் உரியவர் யார்? நாங்கள்தான். சந்தேகமென்ன? இதைப் புதுமைக் கவிஞராவது புரிந்து கொண்டாரே!

ஆனுல், நீங்கள், பாமரர்களாகிய உங்களுக்கு எங்களைக் கண்டால் இழிவாய்த் தோன்றுகிறது. குழந்தைகளைக்கூட, வாலே! வானரமே! குரங்கே! கோபுர வஸ்துவே என்று மோனை முறியாமல் திட்டுகிறீர்கள். 'குணம் நாடிக் குற்றமும் நாடி' என்று பாடுவீர்கள். ஆனுல் உங்கள் குற்றங்குறைகள் உங்களுக்கே தெரியாது. இதனுல்தான் உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்குள் மனிதர் மேம்பட்டவர், அவர்களுக்குத்தான் "பகுத்தறிவு" நிறைய, நிறைய, வண்டி வண்டியாய் இருக்கிறதாக நினைக்கவேண்டுமாம்! எங்கிருக்கிறதோ ?

* * *

இதெல்லாம் சரிதான்! மங்கைக்கு உங்களை யார் கட்டுரை கேட்டது என்றுதானே கேட்கிறீர்கள்? அது ஆபீஸ் இரகசியம்



# இரு குழல்கள்

வேங்கட லட்சுமி

நடுநிசி. இருளும், நித்திரையும் சாளுக்கியர்களின் தலை நகரான வாதாபியைப் போர்த்தி யிருந்தன. கறுத் திருண்ட வானவீதியில் பளீர் பளீரென ஒளிவீசிக் கண் சிமிட்டிய நட்சத்திரங்களின் சிறு வெளிச்சம் வாதாபி யின் வானளாவிய மாளிகைகளுக்கும், மலர்ப் பொழில் களுக்கும், கோட்டை கொத்தளங்களுக்கும் நடுவே விதம் விதமான நிழலுருவங்களையமைத்துக்கொண் டிருந்தது. ஆழ்ந்த பயங்கரமான நிசப்தம் எங்கும் பரவி யிருந்தது. எங்கோ கிரீச்சென்று அலறும் கோட்டான்களின் ஓலத்தையும், இரண்டு நாழிகைக் கொருதரம் கோட்டையிலிருந்து அடிக்கப்படும் பெரிய மணியின் நாதத்தையும் தவிர, நகரின் ஆழ்ந்த அமைதியை வேறு எவ்விதமான சப்தமும் கலைக்கவில்லை.

நடுநிசியைக் குறிக்கும் மணிச்சப்தம் நகர் முற்றும் எதிரொலியைக் கிளப்பிவிட்டு மெல்ல அடங்கியது.

தட தடவென்று கோட்டைக்கு வெளியே குதிரைக் குளம்புகளின் ஓசை. அதைத் தொடர்ந்து உரத்த சப்தத் தில் பேசும் மனிதக் குரல்கள்.

"யாரது?''—என்னும் இரும்புக் குரலொன்று கோட்டைக்கதவின் ஆட்துவாரத்தினருகி லிருந்து வினவி யது.

"நாகா!...பாலத்தை இறக்கிவிடு''.—

அதிகாரத்துடன் ஒலித்தது சத்யாச்ரய புலிகேசியின் கம்பீரத்வனி. நாகன் நடுங்கிப்போனான்.

"பிரபு!...இதோ வந்தேன்."

ஒரு விநாடி நிசப்தம். அதைத் தொடர்ந்து கலகல வென்று இரும்புச் சங்கிலிகளும் கனத்த தாழ்ப்பாள்களும் கழற்றப்படும் ஓசை. தூக்குப் பாலம் அகழியின் குறுக்காக இறக்கி விடப்பட்டது.

கவசமணிந்த எட்டுக் குதிரை வீரர்களும், அவர்களுக்குத் தலைமை வகித்த சாளுக்கிய இளவரசனான சத்யாச்ரய புலிகேசியும் பாலத்தின் வழியாகக் கோட்டைக்குள் நுழைந்தார்கள்.

மீண்டும் பாலம் தூக்கப்பட்டது. கோட்டைக் கதவுகளை அடைத்த நாகன், அப்பாடா, என்று பெருமூச்சு விட்டபடியே வீரர்கள் பட் பட்டென்ற குளம்போசையுடன் அரண்மனையை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

## 2

"சத்யாச்ரயா! "என் ஒருவாறு இருக்கிறாய்? போன காரியம் என்னவாயிற்று?... ஜயந்தானா?" என்றான் மங்களேசன்.

அளவற்ற பெருமிதமும், எளனமும், அதிகாரமும் அவன் குரலிற் கலந்துவந்தன.

அவனெதிரில் நின்ற இளவரசன் தலை நிமிர்ந்து தன் சிற்றப்பனை ஊடுருவி நோக்கினான்.

அப் பார்வையின் தீட்சண்யத்தை எதிர்த்து நிற்க முடியாமல் ஒரு விநாடி கலகலத்துப்போனான் வாதாபியின் முடிசூடா மன்னனான மங்களேசன்.

"ஆம், ஜயந்தான்,"—என்று அலட்சியமாகப் பதிலளித்துக்கொண்டே, புழுதியால் மூடப்பட்டிருந்த கவசத்தைக் கழற்றலானான் புலிகேசி.

அவன் கீழே வைத்த உடைவாளைக் கையிலெடுத்துப் பார்த்துக்கொண்டே, "சத்யாச்ரயா!—நெடுந் தூரம் பிரயாணம் செய்து களைத்துப்போயிருக்கிறாய்; போன

காரியம் ஜயமென்ற மட்டில் சந்தோஷம்; மற்ற விவரங்களெல்லாம் பிறகு கேட்டுக்கொள்கிறேன். நீ இனிப் பாரு" என்றான் மங்களேசன்.

இளவரசன் ஒன்றும் பேசாமல் தலையசைத்தான்.

மங்களேசன் கம்பீரமான நடையுடன் அறையை விட்டு வெளியே சென்றான்.

அவனைத்தொடர்ந்து சென்றது இளவரசனின் பார்வை. அவன் விழிகளில் பலவிதமான மாறுதல்கள் தோன்றி மறைந்தன.

ஒரு விநாடி அப்படி நின்றவன் சட்டென்று திரும்பினான். அவன் பார்வை அங்கிருந்த சாளரத்தின் வழியாகத் தூரத்தே நின்ற விருட்சங்களின் கறுத்த நிழல்களை நோக்கின. அவ்விருட்சங்களுக் கிடையில் மினுக் மினுக்கென்று தெரிந்தது தீப வெளிச்சமொன்று.

அவ் வெளிச்சத்தை ஆவலுடன் நோக்கினான் இளவரசன். ஆழ்ந்த பெருமூச்சொன்று அவன் ஹிருதயத்தைக் கீறி வெளியே வந்து காற்றுடன் கலந்து சென்றது.

வெளியே உதயத்தின் மனோகரம். ஜில்லென்ற வசந்த மாருதம் புஷ்ப ராசிகளின் மணத்தை அள்ளிக்கொண்டு மெல்ல மெல்ல உலவியது. நேர்த்தியான நீல விசும்பின் கீழ்த்திசையில் தங்கரேகைகளென மின்னி ஒளிவீசிய பருதியின் கிரணங்கள் விருட்சங்களின் உச்சியிற் பட்டு, அவற்றின் பசுங்கிளைகளைத் தகத்தகாயமாய் மின்னச் செய்தன. அக்கிளைகளிடையே சிறகடித்துப் பறந்து திரிந்தன பலவர்ணப் பட்சி ஜாலங்கள்.

திடுக்கிட்டெழுந்தான் சத்யாச்ரயன். கண்களைக் கசக்கியபடியே சாளரத்தின் வழியாக வெளியே நோக்கினான்.

வெளியே இருள் நன்றாய்ப் பிரிந்து வெளிச்சம் வந்து விட்டது.



அவ் வெளிச்சத்திடையே காற்றில் தவழ்ந்துவந்து அவன் செவிகளில் மெல்லென ஒலித்தது மதுரக்குழலின் இன்ப நாதம்.

ஒரு விநாடி ஸ்தம்பித்துப்போனான் இளவரசன். அவன் முகத்தில் அதிசயமும், திகிலும், ஆனந்தமும் மாறி மாறித் தோன்றின.

சட்டென்று மஞ்சத்தைவிட்டுக் கீழே குதித்தான். மஞ்சத்தினடியில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்த ஒரு சிறு மூங்கிற் குழலை வெளியிலெடுத்தான். அதைத் தனது உடையில் மறைத்தபடியே அவ் விடுதியை விட்டு வெளியே வந்தான்.

அரண்மனையில் இன்னும் ஒருவரும் எழவில்லை. இரண்டொரு பணிப் பெண்கள் மட்டிலும் ஏதோ அலுவலாகக் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தனர். இளவரசனைக் கண்டதும் சட்டென்று வணங்கி வழி விட்டனர்.

சத்யாச்ரயன் துரிதமாய் நடந்து நந்தவனத்தை யடைந்தான். அங்கிருந்த தாமரைத் தடாகத்தை யடைந்ததும், சற்று நின்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

இதுவரையில் லேசாகக் கேட்டுக் கொண்டிருந்த குழலின் நாதம் இப்பொழுது மிகத் தெளிவாகவும் இனிமையாகவும் அவன் செவிகளில் விழுந்தது. இளவரசனின் சரீரம் புல்லரித்தது.



தடாகத்தின் பளிங்குப் படிகளில் உட்கார்ந்து கொண்டு தனது உடையில் மறைத்து வைத்திருந்த குழலை வெளியே எடுத்தான்.

நிர்மலமாகத் தெளிந்த தடாகத்தின் நீர்ப்பரப்பில், முகிழ்விரித்து மலர்ந்த வர்ணக் கமலங்கள் தன்னை நோக்கி நகைப்பனபோல் அவனுக்குத் தோன்றின. குழலை இதழ்களில் பொருத்திக்கொண்டான். அவனுடைய விழிகளில் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது.

அடுத்த கணம் அக் குழலிலிருந்து வெளிப்பட்ட மதுர நாதம், உதயத்தின் மனோகரத்தைக் கலைத்துக்கொண்டு தென்றல் வாக்கில் தவழ்ந்து செல்லலாயிற்று.

பளபளத்த விழிகளுடன் பூங்காவிற்கப்பா லிருந்த வெறு வெளியை நோக்கியபடியே குழலூதலானான் இள வரசன்.

* * *

கதிரவன் மெல்ல மெல்ல எழும்பிக் கொண்டிருந் தான். மெருகிட்ட தங்கத் தகடென மின்னிக் கண் பறித்தது ஆகாயம்.

சல சலவெனப் பட்டாடைகள் உராயும் சப்தம். மின்வெட்டென இளவரச னெதிரில் தோன்றினாள் அழகி யொருத்தி. அவள் கையில் மூங்கிற் குழலொன்று.

இளவரசன் துள்ளி யெழுந்தான். அவன் முகம் ஆவலும் ஆனந்தமும் கொண்டு பிரகாசித்தது.

''ஸ்ரீபுவனா!......''

அடக்க முடியாத உணர்ச்சியினால் அவன் குரல் தழு தழுத்தது,

''பிரபு!''

தேனையும், யாழையும், குழலையும் பழித்தது அம் மதுர கண்டம்.

''ஸ்ரீபுவனா!...வாதாபிக்குள் வராதே யென்று எத்தனை முறை கூறியும் நீ ஏன் என் கட்டளையை மீறுகிறாய்?......

இங்கிருக்கும் ஒவ்வொரு விநாடியும் உன் மதிப்பற்ற உயிருக்கு ஆபத்தல்லவா?''

சுற்றுமுற்றும் நோக்கிவிட்டு மிகவும் தணிந்த குரலில் பேசினான் சத்யாச்ரயன். கலீரென்று நகைத்தாள் கட்டழகி.

''உஸ்!...'' அரண்மனையை நோக்கி ஜாடை காட்டினான் சத்யாச்ரயன். அவனுடைய ஜாடையைத் தொடர்ந்து நோக்கிய பாவை,...''பிரபு! தாங்கள் ஏன் வீணில் கலவர மடைகிறீர்கள்? என்னை ஹர்ஷச் சக்ரவர்த்தியின் சகோதரன் மகளான ஸ்ரீபுவனா வென்று ஒருவரும் தெரிந்துகொள்ள மாட்டார்கள். யாரோ நாட்டிய மாதென்றே எண்ணிக் கொள்ளுவார்கள். அதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை யுடனேயே நானும், என்தோழி யான வேணியும் வந்திருக்கிறோம். என்னுடைய மாளிகையில் ஓயாமல் சங்கீதமும் நாட்டியமும் நடந்துகொண்டிருப்பதால் என்னுடைய உண்மையான பதவியைப் பற்றி ஒருவரும் சந்தேகிக்க இடமேயில்லை'' என்றாள்.

''ஸ்ரீபுவனா! நீ தெரியாமல் பேசுகிறாய். ஒற்றறிவதில் என் சிற்றப்பா மங்களேசனைப்போன்ற திறமை ஒருவருக்கும் கிடையாது. ஆகையால் நீ வாதாபியி லிருக்கும் ஒவ்வொரு விநாடியும் உனக்கு ஆபத்தே! நீ இங்கிருந்து செல்லும் வரையில் என் மனம் நிம்மதியை யடையாது.''

கலக்கத்துடன் பேசினான் இளவரசன்.

அவனெதிரே நின்ற பொற்கொடியின் முகத்தில் சஞ்சலத்தின் ரேகை படர்ந்தது. அவள் கரத்திலிருந்த குழல் நழுவிக் கீழே விழுந்தது.

சட்டென்று குனிந்து அதை யெடுத்து அவளிடமளித்தான் இளவரசன்.

''ஸ்ரீபுவனா! நாம் இங்கிருந்து பேசவேண்டாம். அரண்மனைப் பணிப்பெண்கள் புஷ்பம் பறிக்க இங்கு வரு

வார்கள். வா! என்னுடைய வசந்த மாளிகைக்குப் போவோம்.''

இதைக் கூறிவிட்டுக் கரைகடந்த காதலுடன் அவளுடைய கரத்தைப் பற்றிக்கொண்டான். அவ்வின்ப ஸ்பரிசத்தில் அவள் மனம் மயக்கமடைந்தது.

அவனுடைய தோளிற் சாய்ந்தபடியே அசோகைத் தழுவிய மாதவியென நடக்கலானாள் பாலிகை. அவள் நெஞ்சம் இன்பமோ துன்பமோவென விவரிக்க வியலாத உணர்ச்சிகளினால் கொந்தளித்துக் குமுறியது.

அந்தி மயங்கிவிட்டது. பிறைமதியின் சிறுவெளிச்சத்தில் வாதாபி நகரின் வானளாவிய மாடமாளிகைகள் அரைகுறையாகத் தோற்றமளித்தன. நகரில் மின்வெட்டிய லட்சக்கணக்கான தீபங்களுக்குப் போட்டியாக வானவீதியில் பொறியிட்டுக் கண்சிமிட்டின தாரா கணங்கள்.

கோட்டையிலிருந்து இரவின் முதல் ஜாமத்தைக் குறிக்கும் பெரிய மணியின் ஓசை, நகர் முழுதும் எதிரொலியைக் கிளப்பிவிட்டு அடங்கியது.

தன்னுடைய அரண்மனையின் உப்பரிகையில் மார்பின் மீது கைகளைக் கட்டியபடியே குறுக்கும் நெடுக்குமாய் உலாவிக் கொண்டிருந்தான் மங்களேசன். அவன் மனம் அமைதியற்றிருந்தது. பலவிதமான எண்ணங்கள் அவன் மனத்தில் அலைகள்போல் சுருண்டு வந்தன. குரூரமான அவன் விழிகள் மங்கலான அவ்வெளிச்சத்தில் பளபளவென மின்னின.

காற்றினூடே மிதந்துவந்து அவன் செவிகளில் விழுந்தது தீங்குழலின் நாதம். திடுக்கிட்டுச் சிந்தனை கலைந்தான் மங்களேசன். ஒரு விநாடி செவிகொடுத்துக் கேட்டான்.

"யார்!...சத்யாசிரயனா குழலூதுகிறான்? அவனைத் தவிர வாதாபியில் இவ்வளவு நேர்த்தியாகக் குழலிசைக்கக் கூடிய ஆத்மா வேறு யார்?''

இவ்வாறு எண்ணினன் அவன். சற்றுநேரம் சென்றது. தேனையும் பழித்து அவன் செவிகளில் அமுதம் பொழிந்தது அத்தெய்வக் குழலின் நாதம்.

மங்களேசன் மனத்தில் ஏதோ சஞ்சலம்.—நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தான். பிறைமதி உச்சி வானிலிருந்தான். ஏறக்குறைய நடுநிசியாய் விட்டது.

யோசனையி லாழ்ந்தான் அவன். மின்னல் போன்ற ஓர் எண்ணம் அவன் மனத்தில் பளிச்சிட்டது.

துள்ளி யெழுந்தான் மங்களேசன். அவன் முகத்தில் வெற்றியின் பெருமிதம். கைகளை ஒன்றோடொன்று தேய்த்துக்கொண்டான்.

சட்டென்று தனது விடுதிக்குள் சென்றான். சில வினாடிக்குள் கவசமணிந்து உப்பரிகையை விட்டுக் கீழே இறங்கித் துரிதமாய்க் குதிரை லாயத்தை நோக்கிச் சென்றான்.

மங்கி வரும் உதயத்தின் வெளிச்சத்தில் அவனைச் சுமந்திருந்த குதிரை கோட்டையை நோக்கித் துரிதமாய்ச் செல்லலாயிற்று.

* * * *

"ஸ்ரீபுவனா!... நான் சொல்வதைக்கேள்! இன்றைய இரவே வாதாபியை விட்டுப் போய்விடு; மங்களேசன் உன்னைக் குறித்துத் தெரிந்து கொண்டானானால் பிறகு யாராலும் உன்னைக் காப்பாற்ற முடியாது."

சத்யாச்ரயன் மிதமிஞ்சிய உணர்ச்சியுடன் பேசினான். அவன் விழிகளின் பார்வை எதிரே நின்ற கட்டழகியின் மீது பதிந்திருந்தது.

"பிரபு! ஏன் தங்களுக்கு இவ்வளவு மனக் கலக்கம்? அப்படியேதான் தங்கள் சிற்றப்பா என்னைக் குறித்துத் தெரிந்துகொண்ட போதிலும் என்னதான் நேரிடும்? என் உடலைத்தானே அழிக்க முடியும்? தங்களுக்கு என் மீதுள்ள உண்மைக் காதலை அவரால் அழிக்க முடி-

யாதே! தங்களுடைய அழியாப் பிரேமை எனக்குத்தானே சொந்தம்?''

ஆழ்ந்த உணர்ச்சியுடன் பேசினாள் பொற்கொடி.

அவளெதிரே நின்ற கட்டழகன் அவளை விழுங்கி விடுவான்போல் நோக்கினான். மனத்தை மயக்கும் அவளுடைய பேரழகு அவனை உணர்விழக்கச் செய்தது. ஆவலுடன் தன் கரங்களை விரித்தான். உண்மையான அன்பின் மயக்கில் இருவரும் தங்களையும் உலகையும் மறந்தனர்.

அடுத்த எட்டாவது தினம். பிறைமதி வளர்ந்து முழுமதியாயிற்று. வெண்ணிலவு பூச்சொரிந்த ரம்யமான இரவு.

நர்மதை நதிக்கரையில் ஸ்ரீபுவனாவின் மாளிகை. எங்கும் பலவர்ணத் தீபாலங்காரம். கலீர் கலீரெனக் கஜ்ஜைச் சிலம்புகளினொலியும் கீதவாத்தியங்களின் நாதமும் தென்றலிற் கலந்து சென்றன.

மாளிகையின் ஏகாந்த விடுதியொன்றில் தன்னந் தனியாய் உட்கார்ந்து குழலூதிக் கொண்டிருந்தாள் ஸ்ரீபுவனா.

அவள் முகம் வாட்டமுற்றிருந்தது. கன்னங்கரு விழிகளின் நோக்கில் மனத்தில் நிரம்பியிருந்த ஏக்கம் பிரதிபலித்தது. அவள் ஹிருதயத்தை வாட்டிப் பிழிந்த வேதனை குழலின் மூலமாக வெளிப்பட்டது.

இன்னும் சில தினங்களில் வாதாபியை விட்டுப் போய்விடுவதாகத் தீர்மானித்து விட்டாள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் நிறைவேறி விட்டன.

இனிமேல் தன்னுடைய உத்தரவின்றி வாதாபி நகருக்குள் வரவேண்டாமெனக் கேட்டுக்கொண்ட சத்யாச்ரயனுக்கு அவ்வாறே செய்வதாக வாக்களித்து விட்டாள். ஆயினும் அதை நிறைவேற்றுவது எப்படி? சத்யாச்ரயனை விட்டுவிட்டு எப்படிப் போக முடியும்?

பலவாறு குழம்பித் தவித்தது அவள் மனம். கணக் கற்ற சிந்தனை அலைகள் அவள் மனத்தில் சுருள் சுருளாய் எழுந்தன.

ஒரு பெருமூச்சுவிட்டு எழுந்தாள். குழலைக் கீழே வைத்துவிட்டுச் சாளரத்தண்டை சென்று வெளியே நோக்கினாள். பால்போன்ற நிலவின்வெளிச்சத்தில் வாதாபி யின் கோட்டையும் மதிற்சுவரும் தெளிவாய்த் தெரிந்தன. அப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் விரிந்து கிடந்த மலர்ப் பொழில்களும், மாடமாளிகைகளும் முழுமதியின் தண் கிரணங்களில் மயங்கித் துயில்வனபோல் தோன்றின.

"தேவி!......தேவி!.........இளவரசர் வந்திருக்கிறார்; தங்களைக் காண விரும்புகிறார்!"

இதைக் கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தாள் தோழி யொருத்தி.

மின்னல்போல் திரும்பினாள் ஸ்ரீ புவனா. அவள் மதி முகம் ஆனந்தத்தினால் பிரகாசித்தது.

"வேணி!......அவரைத்தானே நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். உடனே வரச்சொல்."

வணங்கி வெளியே சென்றாள் அவள். கீழே கிடந்த குழலைக் கையிலெடுத்துக் கொண்டு மஞ்சத்தின்மீது உட் கார்ந்தாள் பாவிகை. ஒரு விநாடி ஏதோ யோசித்தாள். அவள் நெற்றி சுருங்கியது. கருவிழிகளின் நோக்கில் மீண்டும் ஏக்கம் படரலாயிற்று.........

"ஸ்ரீ புவனா!"......என்று அழைத்தபடியே உள்ளே நுழைந்தான் சத்யாச்ரயன். அவன் குரலில் அன்பும் ஆர்வமும் ஒருங்கே த்வனித்தன. மெருகிட்ட தங்கச் சிற்பம்போல் விளங்கிய கட்டழகியை ஆவலுடன் நோக் கினான்.

சட்டென்று எழுந்தாள் ஸ்ரீ புவனா.

"பிரபு!...ஏன் இவ்வளவு நேரம்? இன்று கடைசி தின மாகையால் சீக்கிரமே வந்துவிடுவதாகக் கூறினீர்களே!"

சத்யாச்ரயனின் முகம் சடக்கென்று மாறுபட்டது.

“ஆம்,...கண்மணி!......நீ கூறுவது உண்மையே!... இன்றுதான் நாம் சந்திக்கும் கடைசித் தினம்......உன்னுடைய மதிப்பற்ற உயிருக்கு ஆபத்தொன்றும் நேரிடாமல் நீ சீக்கிரமாக வாதாபியை விட்டு வெளியேறுவதுடன், சாளுக்கிய ராஜ்யத்தின் எல்லையையே தாண்டிவிடவேண்டும்,... ஆயினும், ஸ்ரீ புவனு!... உன்னைக் காணுமலும், குழல் மூலமாக நீ இசைக்கும் அமுத கானத்தைக் கேளாமலும் இனிமேல் நான் இருக்கவேண்டுமென்பதை, ......என்னல்,...எண்ணவே முடியவில்லை!” அவன் குரல் தழுதழுத்தது.

அவனெதிரே நின்ற அவள் கண்ணீர் பளபளக்கும் விழிகளால் அவனை ஊடுருவி நோக்கினுள்.

“பிரபு!......என்னுடைய குழலிசையை அமுத கானமென நீங்கள் வர்ணித்தால், உள்ளத்தை யுருக்கி உடலை நெகிழ்விக்கும் தங்களுடைய தெய்வக் குழலிசையை நான் எதற்கு ஒப்பிட்டுக் கூறுவது? போர்க்களத்தில் பிரசித்தி பெற்ற வீரர்களுக்குக் கலைகளைக் குறித்து ஒன்றுமே தெரியாதென்று நான் எண்ணியிருந்ததற்கு மாருக, மகாவீரனை சத்யாச்ரய புலிகேசி, குழல் மூலமாக அமுதம் பொழிய வல்லவரென்பதை யறிந்தவுடன் அளவற்ற ஆச்சரிய மடைந்தேன். அத்துடன் இல்லாமல் அம் மகாவீரனுடன் பழகும் பாக்கியமும், அவர்தம் குழலிசையைக் கேட்கும் பாக்கியமும் பெற்றது என்னுடைய ஒப்பற்ற அதிருஷ்ட மல்லவா? ஆயினும் பிரபு!...அப்பாக்கியத்தை நான் கூடிய சீக்கிரம் இழந்துவிடவேண்டுமென்னும் தங்களுடைய உத்தரவு என்னுடைய நெஞ்சை விரியச் செய்கிறது...என்ன செய்வேன்?”

பொங்கிப் பெருகும் உணர்ச்சியுடன் பேசினுள் அவள்.

இளவரசன் ஒரு கணம் மௌனம் சாதித்தான். கீழே கிடந்த குழலைக் கையிலெடுத்தான். உணர்ச்சி மிகுதியால் அவன் கரம் நடுங்கியது. அவனுடைய ஏக்கம் நிரம்பிய விழிகள், தன்னெதிரே நின்ற பாலிகையையும், அவளுக்குப் பின்னுலிருந்த சாளரத்தின் வழியாகத் தனது வெள்ளிக் கதிர்களை உள்ளே பரப்பிக்கொண்டு ஆகாய வீதியில் பவனி வந்த முழுமதியையும் மாறி மாறி நோக்கின. மின்னல் போன்ற பல எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றி மறைந்தன.

"ராஜ்யமும் பட்டமும் எதற்கு?......தன்னெதிரே நின்ற கட்டிளங் கன்னியின் ஒரு கடைக்கண் பார்வைக்கும், அவளுடைய செக்கச் சிவந்த இதழ்க் கடையில் தவழ்ந்து வந்த இளமுறுவலுக்கும், தன் கையிலிருந்த மூங்கிற் குழல் மூலமாக அவள் பொழிந்து வந்த தெய்வத் தீங்கானத்துக்கும் அவை எவ்வகையிலும் ஈடாகுமோ?"

இவ்வாறெல்லாம் ஓடியது அவன் சிந்தனை. நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுத் தன் மனத்தை அடக்க முயன்றான். இறந்துவிட்ட தன் தந்தை கீர்த்திவர்மனின் மரணத் தறுவாயில் தான் செய்து கொடுத்த வாக்குறுதி அவன் நினைவுக்கு வந்தது. அதையொட்டித் தன் சிற்றப்பன் மங்களேசனின் உருவமும் அவனுள் எழும்பியது.

"பிரபு!.........என் மௌனம் சாதிக்கிறீர்கள்? வெளியே பூச்சொரியும் வெண்ணிலவும், வசந்தத்தின் இயற்கைச் சோலையும் தங்களை மெய்மறக்கச் செய்து விட்டனவா?"

தேனைப் பழித்த தீங்குரலில் மொழியப்பட்ட இவ் வார்த்தைகள் இளவரசனை விழிப்புறச் செய்தன.

"ஆம்,...ஸ்ரீபுவனு!......உண்மையாகவே மெய்ம் மறந்து விட்டேன்!.........வருகிருயா கண்மணி!......... உப்பரிகைக்குச் செல்வோம்!"

வெண்ணிலவின் தண்கிரணங்களில் உலக முற்றும் மயங்கித் துயிலும் அந் நடுநிசியில் ஸ்ரீபுவனுவின் மாளிகையை நோக்கி வந்து கொண்டிருந்தான் மங்களேசன். அவன் ஏறி வந்த குதிரையின் வாயில் நுரை தள்ளிக் கொண்டிருந்தது. மங்களேசனின் குரூரமான விழிகளில் நெருப்புப் பறந்தது. மெலிந்த உதடுகளில் அவனுடைய மனே உணர்ச்சிகளுக் கேற்பப் புன்னகை யொன்று தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

நர்மதையின் வெண்மணற் கரையிலிருந்த மாளிகையை நெருங்கிக்கொண் டிருந்தது புரவி.

நடுநிசியின் ஆழ்ந்த அமைதியைக் கலைத்துக்கொண்டு, தென்றல் வாக்கில் மெல்லென அவன் செவிகளில் ஒலித்தது இன்னிசை யொன்று.........இரண்டு நேர்த்தியான மதுரக் குழல்களிலிருந்து தேனைப் பிழிந்துகொண்டு தென்றற் கரங்களில் தவழ்ந்து வந்தது இன்ப நாதம்.

குதிரையின் மீதே ஒரு துள்ளு துள்ளினுன் மங்களேசன்.

"ஆகா!......அவர்கள்தாம்!.........இனிமேல் அந்த ஹர்ஷனின் கொட்டத்தை அடக்கிவிடுகிறேன்!......... சந்தேகமில்லாமல் அவனுடைய சகோதரன் மகள்தான் குழலிசைப்பது!......சத்யாச்ரயன் சில நாளாக ஒருவாறு யிருப்பதன் காரணம் இப்பொழு தல்லவா தெரிகிறது! அவனும் கடைசியில் ஒரு பெண்ணின் வலையிற் சிக்கிவிட்டான் போலும்......ஆகா!......கடைசியில் என் கையில் சிக்கினுன் என் சத்துரு ஸ்ரீ ஹர்ஷன்!"

குரூரமான ஓர் எக்களிப்பு அவன் கண்டத்திலிருந்து வெளிவந்தது. குதிரையைத் தட்டிவிட்டான். அவ்வுன்னதப் புரவி நாற்கால பாய்ச்சலில் விரைந்தது.

* * *

"சத்யாச்ரயா!......எங்கே அப்பெண்?"

இடிக் குரலில் கர்ஜித்தான் மங்களேசன்.

அசையாக் கற்பதுமையாய் நின்றான் இளவரசன்.

"எங்கே மறைத்தாய் அவளை? ........பெண்ணசைக் குட்பட்டு உன் மதியை யிழந்தாயா? இதுதான் உன்னு டைய வீரத்தின் அறிகுறியோ?"

அளவற்ற ஏளனமும் இறுமாப்பும் அவன் குரலில் கலந்திருந்தன.

நெஞ்சு விரியும் துயரத்துடன் அவனெதிரில் நின் றிருந்த இளவரசனை ஈட்டி போன்ற இவ் வார்த்தைகள் தட்டி யெழுப்பின.

அடியுண்ட வேங்கை போல் சீறி நிமிர்ந்தான் அவன்.

"ஆம்,......என் வீரத்தின்,...அல்ல,...அல்ல, என் கண்மணியுடைய வீரத்தின் அறிகுறி,......அடை யாளம்;......அவள் எனக்களித்த தெய்வப் பிரேமை; .........அவள் ஓர் உண்மை வீரனின் காதலி யாகையால் உங்கள் கையிற் சிக்குவதைவிட, மரணத்தை விரும்பி ஏற்றுக்கொண்டாள்! சித்தப்பா!......அன்னை நர்மதை அவளழகிய உடலை அன்புடன் ஏற்றுக்கொண்டாள்!...... அதோ பாருங்கள்!"

வறண்ட குரலிற் கூறிய இவ்வார்த்தைகளுடன் உப் பரிகைச் சுவரண்டை சென்று கீழே அரித்துக்கொண் டோடும் நர்மதையின் பிரவாகத்தைச் சுட்டிக் காண்பித் தான் சத்யாச்ரயன்.

ஸ்ரீபுவனா மறைந்தவிடத்தில் இரண்டொரு சிறு சுழல் களையும் குமிழ்களையும் தவிர வேறொன்று மில்லை.

அளவற்ற ஏமாற்றத்துடன் திரும்பினான் மங்களே சன்.

இளவரசன் கண்ணீர் பளபளக்கும் விழிகளுடன் குனிந்து கீழே கிடந்த இரண்டு குழல்களையும் கையி லெடுத்துக் கொண்டான்.

நாலடி சென்ற மங்களேசன் சற்று நின்று திரும்பிப் பார்த்தான்.

ஸ்ரீ புவனாவின் குழலை மார்புடனணைத்தபடியே உப்பரிகைச் சுவரண்டை நின்று கொண்டிருந்தான் இளவரசன்.

" ஸ்ரீ புவனா!......என் கண்மணி!.........உன் பொன்னுடல் மறைந்தது. ஆயினும் நீ எனக்களித்த ப்ரேமை அழியாது......உன்னை நான் காணக் காரணமாயிருந்த உன் குழலை என் உயிர்போல் காப்பாற்றுவேன்! என்னுடைய குழல் இதோ உன்னைத்தேடி வருகிறது!...ஆயினும் நான் உன்னைத் தேடிவர அசக்தனா யிருக்கிறேன்! சத்யாச்ரயப் புலிகேசியின் வாழ்க்கையில் காதல் கட்டம் முடிவடைந்தது! ஸ்ரீ புவனா!......இதோ!......பார்!......
...என்னுடைய குழல்!"

தன்னுடைய குழலைச் சுழற்றி ஜலத்தில் எறிந்தான். களுக்கென்ற சிறு சப்தத்துடன் அது ஜலத்தில் மறைந்தது.

✲

### அன்பின் சக்தி

என்னுடைய மதிப்புப்படி, அன்புக்கு இருக்கும் சக்தி அளவிட முடியாதது. பலாத்காரத்தைவிட, அன்பின் பலம் மிகுந்த வேகமும் வனப்பும் கொண்டதென்பதே என் கட்சி. அந்த அன்பு யாருக்கு இல்லையோ, யார் அதை நழுவவிட்டு விடுகிறாரோ, அவர் கோழை; அவர் மனித வர்க்கத்தையே சேர்ந்தவ ரல்ல. அவர் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளச் சக்தி யில்லாதவர் என்பதை நன்றாகக் காட்டி விடுகிறார்.

அழகுக் குறிப்புகள்

# தலை  அலங்காரம்

"தங்கம்"

"பொற்குடத்துக்குப் பொட்டென்ன, மையென்ன ?" என்று ஒரு பழமொழி. இதில் பொற்குடம் என்பது அழகிய குழந்தையையோ அல்லது பெண்ணேயோ குறிக்கிறது. அதாவது இயற்கையிலேயே அழகுடையவர்களுக்குச் செயற்கை அழகு எதற்கு ? அழகுக்கு அழகு செய்வாருண்டா என்று நினைக்கிரும். இருந்தாலும் செயற்கை, இயற்கை அழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டும்.

மனிதர் தங்களை அழகு படுத்திக் கொள்வது என்பது பல ஆயிர வருஷங்களாக இருந்து வருகிறது. ஆனல் காலத்தின் போக்குக்கும் நம் ரஸிகத் தன்மைக்கும் ஏற்ப வித விதமான மாறுதல்கள் உடைகளிலும் நகைகளிலும் தலை அலங்காரத்திலும் ஏற்பட்டுக் கொண்டே வருகின்றன.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் அழகென்று கருதப்பட்ட உடையும், பின்னலும், நகையும் இப்பொழுது அநாகரீகமாகத் தோன்றுகிறது. நாட்கள் செல்லச் செல்ல மனம் ஒவ்வொன்றிலும் புதுமையை நாடுகிறது. மறுபடியும் மறந்துபோன பழமை, புதுமையாகத் தோன்றுகிறது. ஆபரணங்களில் தற்கால மணியும் ஜிமிக்கியும், சிறுகரை, கட்டங்கள் போட்ட புடைவை

யும் இந்தப் 'புது மெருகு' வகையைச் சேர்ந்தவை தான்.

முப்பது வருஷங்களுக்குமுன் குழந்தைகளுக்குக் குடுமி வைக்கும் வழக்கமும், பின்னலிடும் வழக்கமு மிருந்தது. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆண், பெண் என்ற பேதமின்றி முன்புறத்தில் நெற்றி யின் நடுவில் வரும்படி ஒற்றையாகவோ, இரட்டை யாகவோ பின்னலிட்டு அதைக் காதோடு ஒட்டி வரும் படி கொண்டு வந்து, பின்புறம் சேர்த்துப் பின்னலிடுவார் கள். முன் நெற்றியிலே உச்சிப்பூ, சுட்டி முதலிய நகை கள் தொங்கும். இது தொன்றுதொட்டு வந்த பழக்கம்.

"தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்ப் பொன் முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளேகி றான்" என்று பெரியாழ்வார் கண்ணனை வர்ணிக்கிறார்.

பிறகு இடைக்காலத்திலே பெரியவர்கள் 'நடு வகிடு' எடுப்பதை விட்டு, இடது புறமாக வகிடு எடுத்துத் தலை சீவும் வழக்கம் (கோண வகிடு) வந்த பொழுது சிறு குழந்தை களுக்கும் இடது புறம் வகிடெடுத்து வலது செவி யோர மாய்ப் பின்னிக் கட்டத் தொடங்கினார்கள். அப்பொழுது இடது கண்ணுக்கு நேராக வகிடும், வலது புறத்து நெற்றி யில் சுட்டியும் தொங்கும். இதன்பின் பின்னலிடுவதே அநாகரீக மென்று பெண் குழந்தைகளுக்கு 'பாப்' செய்து ரிப்பன் கட்டும் வழக்கம் வந்தது. இப்படி வருஷங்கள் தோறும் பல் வேறு மாறுதல்கள். இது சிறு குழந்தை களுக்கு.

இதேபோல இளம் பெண்களின் பின்னலிலேயும் எத்தனேயோ மாறுதல்கள். முப்பது வருஷங்களுக்கு முன் தலையைப் படிய வாரி, இறுகப் பின்னி, வட்ட வடிவாய்க் கட்டி, திருகுபில்லை வைத்துக் கொள்வார்கள். இந்தச் சம யத்தில்தான் தாழம்பூ, தாமரை இதழ் முதலியவைகளை வைத்துப் பின்னுதலும், மல்லிகை, முல்லை, சாமந்தி முதலிய

புஷ்பங்களை வைத்துத் தைத்தலும் அதிகம். வயது முதிர்ந்தவர்கள் மல்லிகை மலரை உள்ளே வைத்துச் சொருக்குப் போட்டுக் கொள்வார்கள். மறைந்து வரும் கலைகளுள் பின்னலுக்குப் பூத் தைப்பது ஒன்று. இப்பொழுதும் கல்யாணக் காலங்களில் மட்டும் இந்த முறையைப் பின்பற்றுகிறோம். நாட்டியக்காரர்களுள் பழமையை பின்பற்றுபவர் பட்டம், சுட்டி, நத்து, புல்லாக்கு இந்த அணிகளுக் கேற்ப தலைக்கும் ஜடைநாகம் வைத்துப், பூத் தைத்துக் கொள்கிறார்கள். ஆனால் தினசரி வழக்கத்தில் நாம் இதை நாகரீகமாகக் கருதுவதில்லை.

இதன்பின்தான், 'பிச்சோடா'ப் போடும் வழக்கம். அதில் எத்தனையோ விதங்கள். அதன் பின் சில காலம் குறைந்த அளவுள்ள கூந்தலுள்ளவர்கள் சவுரியை, மிகுதியாக உபயோகிக்கத் தொடங்கினார்கள். ஆனால் சவுரி வெகு நாளாகவே உபயோகத்திலிருந்து வருகிறது.

அதில்தான் எத்தனை வகைகள். கவரிமான், பட்டு நூல், இன்னும் இயற்கையான கூந்தலிலேயே சவுரி இப்படி வித விதமாய்த் தோன்றின. இருந்தாலும் சொந்தக் கூந்தலை வாரி எடுத்துக் கட்டும் அழகு இவைகளுக்கு இருப்பதில்லை. அதற்காக என்ன செய்வது? இயற்கையிலுள்ள தவிர்க்க முடியாத குற்றம் குறைகளைச் செயற்கையால் பூர்த்தி செய்து கொள்வது அவசியம் தானே!

தற்காலத்தில் 'பாட்' (pad) என்று சொல்லும் நூல் அட்டையை வைத்துக் குறைந்த கூந்தலுள்ளவர்களும் பார்ப்பதற்குக் கணிசமாகப் பிச்சோடா போட்டுக் கொள்கிறார்கள். இது மிகவும் சுலபமாகவும், சவுரியைப் போல் பளுவில்லாமலும் ஓரளவு சவுகரியமாகவே இருக்கிறது. பார்ப்பதற்கும் அழகாக இருக்கிறது.

இடைக் காலத்திலே நடுத்தர வயதுள்ள பெண்கள், S மாதிரி கட்டிக் கொள்வதுண்டு. ஆனால் இன்று பெரும்

பான்மையான பெண்கள் காதுகளை மூடும்படி தளதள வென்று அழுத்தமில்லாமல் பின்னலிட்டுத் தொங்க விடுவதுதான் சிறு பெண்களுக்கு ஏற்றது என்று நினைக்கிறார்கள். குட்டையான பின்னலையுடைய பெண்கள் முன்றானையால் தலைப் பின்னலை மூடிக்கொள்கிறார்கள். இப்படி மூடிக் கொள்வதனால் சேலையிலும் ஓரளவு எண்ணெய்ப் பிசுக்கு ஏறும். ஆகவே வகிட்டில் மாத்திரம் கொஞ்சமாக எண்ணெயைத் தடவிப் பின்னலை எண்ணெய் இல்லாமல் செய்து கொள்ளுகிறார்கள். இதன் பயனாகக் கூந்தல் வளர்ச்சி குன்றுகிறது. தேவையான போஷணை யில்லாமல் செம்பட்டை நிறமாகி விடுகிறது. பிறகு நாள் செல்லச் செல்ல நீண்ட அழகிய பின்னலுள்ளவர்களும் உண்மையான காரணத்தை அறியாமல் அதுவும் ஒரு நாகரீகம் என்று பின்பற்றத் தொடங்கி, சிறு பெண்களில் பலர் பின்னலை மூடிக் கொள்ளும் வழக்கம் பரவி யிருக்கிறது. இந்தத் தொத்து நாகரீகங்கள் வீடுகளின் மூலம் பரவுவதில்லை. பெரும்பாலும் பள்ளிக்கூடங்களால்தான் பரவுகின்றன.

அழகு செய்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் நம் தென் இந்தியாவின் சீதோஷ்ண நிலைமைக்குக் காதை மூடிய பின்னல்களும், கழுத்தின் மேல் தொங்கும்படி, அல்லது பிடரியில் படியும்படி போடும் பிச்சோடாவும் சவுகரியமாக இருப்பதில்லை. ஆனால் நாகரீகத்தின் பொருட்டுச் சில்லரை அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ளுகிறோம். இது நன்மையா?

இன்றைய நாகரீகம் மாணவிகளும், இளம் பெண்களும் காதுகள் மூடும்படி தளதள வென்று பின்னிக் கொள்வதுதான். சற்றே முதிர்ந்தவர்கள் வாரி எடுத்துப் 'பிச்சோடா' போட்டுக் கொள்வதுதான் அழகு தருகிறது. மேல் நாடுகளில் கூட வயதைக் குறிக்க 'It's time you put your hair up' என்று சொல்வதுண்டு.

குறுகிய நெற்றியுடையவர்கள் தூக்கி வாரிக் கொள்வதினுல் முகத்தை வசீகரமாக்கிக் கொள்ளலாம். அகன்ற, மேட்டு நெற்றி உள்ள பெண்கள் தூக்கி வாரிக் கொள்வதை விட சாதாரணமாய் வாரி முடிப்பதும் பின்னலிடுவதும்தான் அழகு தரும்.

தலை சீவுவதை, முக வெட்டுக்கும் கூந்தலின் தன்மைக்கும், முகத்தின் தன்மைக்கும் ஏற்ப, நமக்கு எந்த முறை அழகு தரும் என்பதை யோசித்துச் செய்துகொள்ள வேணும். கூந்தலின் தன்மையையும் முக்கியமாய் கவனிக்க வேணும். சிலருக்கு நல்ல சுருண்டடர்ந்த குழல்; சுருண்ட குழலை எப்படி வாரினுலும் அழகுதான். ஆனுல் தூக்கி வாருவது உசிதமில்லை. சாதாரணமாக நடுவிலே 'வகிடெடுத்து' வாரிப், பின்னலிட்டாலே படிப்படியாய் அழகாயிருக்கும். இதே முறையில் சுருளாத கூந்தல் உள்ளவள் செய்து கொண்டால் சோபிக்காது. சாதாரணமாய் வாரினுல் நெற்றியின்மேல் படிந்து அழகைக் கெடுக்கிறது. ஆகவே, கூந்தலின் தன்மைக்கும் நமது முகத்தின் சோபைக்கும் தகுந்தபடிதான் தலையலங்காரத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாகத் தளர்ந்த பின்னல் ஏறக்குறைய எல்லோருக்குமே அழகாகவே தோன்றுகிறது. ஆனுல் தலை சீவுவதிலேதான் வித்தியாசம். சுருண்ட குழல் அழகிக்கு, வகிட்டிலிருந்து பின்புறம் சற்றே சாய்த்து வாரினுல் போதும். ஆனுல் சுருளாத, சற்றே நெளிவுள்ள பட்டுப் போன்ற கூந்தல், சுருண்டும், 'கரகர' வென்றிருக்கும் தடித்த கூந்தல் இவைகளை முன் நெற்றியிலிருந்தே நன்ருய்ச் சாய்த்து வாரி முடிக்கலாம்.

பிச்சோடா போடுவதில் அதிகமான ஊசிகளைச் சிலர் உபயோகிக்கிறோம். இது ஓரளவு கெடுதி விளைவிக்கிறது. கூடுமான வரையில் திட்டமான எண்ணிக்கையுள்ள ஊசிகளையே உபயோகிக்க வேண்டும். இந்த முறையிலே மங்க

ஞர் வாசிகள் ஒரே விதமான நீண்ட ஊசிகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் கழுத்தின் மேல் படியாமல் உயர்த்தி, பிச்சோடா போடுவதற்கு அதிகமான ஊசி தேவைதான். கூடுமான வரையில் குறைந்த ஊசிகளை வைத்துப் பிச்சோடா போடுவது நன்மை. சீப்பை வைத்து கொண்டை போடுவதும், pad வைத்துக் கொண்டை போடுவதும் தலைக்கு அழகு செய்கிறது. பிச்சோடாவில் பல ரகங்கள் : ஒரே பின்னலாய்ப் பின்னிப் போடுதல், இரட்டைப பின்னல்களாய்ப் பின்னிக் கட்டுதல், பின்ன விடாமல் முறுக்கி ஒரே சுற்றாய்ச் சுற்றிப் போடுதல் இப்படிப் பல விதங்கள் இப்பொழுது நடை முறையில் இருக்கின்றன.

சிலர் முதலில் இரண்டு மூன்று பின்னல்களாய்ப் பின்னி அதை மேல் நோக்கி மடித்து இரண்டு மூன்று ஊசிகளைக் குத்திவிட்டு, மீதியுள்ள பகுதியை இரண்டாய்ப் பகிர்ந்து வாரி, சுற்று வரும்படி வைத்துக் கொண்டை ஊசிகளால் அழகு பெற இணையும்படி கட்டிக் கொள்கிறார்கள். இந்த வகைகளுள் நம்முடைய தேவைக்கு எவை பொருந்தும் என்று தீர்மானிப்பது நம்முடைய சொந்தச் சாமர்த்தியத்தைப் பொறுத்தது.

✻

அறியாமை விஷம்

காமாலை நோயாளிக்குத் தேன் கசக்கும். வெறி நாய் கடித்தவர்களுக்கு நீரைக் கண்டால் பயம். சிறு குழந்தைகள் கேவலம் ஒரு பந்தை வெகு அழகென்று நினைப்பார்கள். பித்த விஷத்தைக் காட்டிலும், நாய் கடித்த விஷத்தைக் காட்டிலும், அறியாமை என்னும் விஷத்தின் வேகம் குறைவா? அதன் காரணத்தினால் தானே மனிதன் தவறான எண்ணம் கொள்கிறான்? நாமா அவனைக் கண்டு சினம் கொள்ளலாமா?

[illegible]க்ஸ் ஒளரேலியஸ்.

4397

# புதிய புத்தகங்கள்

## டால்ஸ்டாய் கதைகள்-2 — 2 4 0

ருஷ்ய மகான் டால்ஸ்டாயின் ஒன்பது அற்புதமான கதைகள். ஸ்ரீமான்கள் ரா. விசுவநாதன், போ. குருசாமி இருவரும் மொழிபெயர்த்தவை.

## கிராம இயக்கம் — 3 0 0

கிராமப் புனருத்தாரண வேலை செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டிய ஒப்பற்ற நூல். அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஜே.ஸி. குமரப்பா எழுதியது. காந்திஜியின் விரிவான முன்னுரையுடன் கூடியது. 'குமுதினி' மொழி பெயர்த்தது.

## ஏசுநாதர் போதனை — 0 12 0

ஏசுநாதரின் அவதார தத்துவம் யாது, அவருடைய திருமொழிகளின் தத்துவம் யாவை என்பதை ஆசிரியர் ஜே. ஸி. குமரப்பா இதில் விளக்குகிறார். இவருடைய வியாக்கியானம் மிகப் பொருத்தமானது என காந்தியடிகள் சொல்லுகிறார். 'குமுதினி' மொழி பெயர்த்தது.

## இந்தோநேஷியா — 0 12 0

இந்தோநேஷிய அரசியல் இயக்க வளர்ச்சி, சுதந்திர வளர்ச்சி, இந்திய — இந்தோநேஷிய ஒற்றுமையம்சங்களை இந்தப் புத்தகத்தில் 'பாரததேவி' உதவியாசிரியர் கே. அருணாசலம் எழுதியிருக்கிறார்.

## சோவியத் ருஷ்யா — 4 8 0

இன்றைய தினம் உலக முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் சோவியத் ருஷ்யாவின் பழைய சரித்திரம், புதிய புரட்சி, புரட்சியால் அடைந்த நலன்கள், யுத்த வெறியர்களை தோற்கடித்து உலக சமாதானத்தை நிலைநாட்டியதுவரை புள்ளி விபரங்களுடன் ஸ்ரீ. வெ. சாமிநாத சர்மா இந்த இரண்டாம் பதிப்பில் தெளிவாக எழுதியிருக்கிறார். அழகிய 16 படங்கள். கலிகோ பைண்டு. 324 பக்கம். ஆண்டிக் காயிதம்.


**சக்தி காரியாலயம்**

★ சென்னை - மதுரை ★

கோயமுத்தூர் - திருநெல்வேலி

# கதைக் கடல்

## கதைகளின் தொகுப்பு

பதிப்பாசிரியர்:
தி. நா. சு.

சிறு கதைகள், அயல்மொழிக் கதைகளின் தமிழாக்கம், ஓரங்க நாடகம் முதலியன. வருடத்தில் பன்னிரண்டு புத்தகங்கள். இதுவரை இரண்டு புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. தனிப் புத்தகம் ஒரு ரூபாய். தபால் செலவு தனி. தொடர்ந்து வெளிவரும் 12 புத்தகங்களுக்கும் தபால் செலவுடன் பன்னிரண்டு ரூபாய்.

★

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை




★

பாக்கில் இயற்கையாய் அமைந்துள்ள துவர்த்தல், சொக்குதல், உளுத்தல், பிசிபிசிப்பு இவைகளினால் உடலுக்கு கேடு உண்டாகலாம். ஆதலால் சுண்ணாம்பு தடவாத வெத்திலையை முதலில் மென்று அதன் சாற்றை விழுங்கினால் பாக்கினால் ஏற்படும் விஷம் மாறுவதுடன் நெஞ்சுலரல், கபக்கட்டு, இவைகள் நீங்குட

★